ஓம்

# பிரசண்ட விகடன்

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்"

மலர் 4. சென்னை, 1936௵ ஏப்ரல்௴ 1௳ இதழ் 1.

## உ ள் ளு றை.


| | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | மந்திரத்தால் மாங்காய் விழுமா? | 684 |
| 2. | காலச் சக்கரம் | 687 |
| 3. | சினிமா படம் | 690 |
| 4. | எதிர்கால பயங்கர யுத்தம் | 692 |
| 5. | கருப்புச் சாதிகளின் புரட்சியா? | 693 |
| 6. | ஆரம்ப ஆசிரியர்களுக்கு மட்டும் | 697 |
| 7. | வக்கீலின் சாமர்த்தியம் | 699 |
| 8. | பாழ் வீட்டுப் பிசாசு | 703 |
| 9. | விஜய குமாரரின் வெற்றி | 707 |
| 10. | பண்டைத் தமிழர் இசைச் செல்வம் | 717 |
| 11. | சினிமா அழகி மாதுரி | 723 |
| 12. | சீமாட்டி கார்த்தியாயினி (தொடர் கதை) | 725 |
| 13. | மானம் பெரிதோ? வாழ்வு பெரிதோ? | 731 |
| 14. | எனக்கா கல்யாணம்! | 735 |


"விகடனி"ல் வரும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களே, தனிப்பட்டவர்களைக் குறிப்பவை இல்லை.

# மந்திரத்தால் மாங்காய் விழுமா?

:(௧):

"எல்லோருடைய நல்லெண்ணங்களையும், அன்பையும் பெற்றுச் சமாதான முறையில் புனிதமான கோயில்களுக்குள் நீங்கள் (தாழ்த்தப்பட்ட வகுப்பினர்) பிரவேசிக்க வேண்டும். மனஸ்தாபம்—சச்சரவு முதலியன இருக்கக் கூடாது. பத்து நாட்களாயினும் சரி—ஆண்டுகளாயினும் சரி நல்லெண்ண உணர்ச்சியுடன் இப் பிரச்சினையைச் சமாளிப்பது தான் உத்தமம். முடிவில் நமக்கே வெற்றி கிடைக்கும்."—இந்தப் பேச்சு யாருடையது என்று நினைக்கிறீர்கள்? சமயப் பற்று—கடவுள் பற்றுக்களில் அவ்வளவாகச் சிரத்தையோ கவலையோ உற்சாகமோ காட்டாத ஒரு சமூகச் சீர்திருத்த வாதியின் பேச்சு என்று நினைக்கிறீர்கள்? இல்லை! இல்லை!! இஃது ஒரு வைதிகரின் பேச்சு! வேதாகம புராணேதிகாசங்களைக் கரைத்துக் குடித்தவரும், சீமைக்குப் போனகாலத்திலும் கங்கா தீர்த்தமும் களிமண்ணும் கூடவே கொண்டு சென்றவரும், பரமவைதிகசிகாமணி என்று வருணிக்கப்பட்டவருமான பண்டித மதன் மோகன் மாளவியாஜியின் பேச்சு இது. பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த நாஸிக் க்ஷேத்திர ராமகுண்டத்திற்கருகில், கோதாவரி தீரத்தில், பத்தாயிரம் பேருக்கு மேற்பட்ட கூட்டத்தில் பகிரங்கமாகப் பேசிய பேச்சு இது. "பஞ்சமர்கள்—சண்டாளர்கள்-நீசர்கள் கல்வி கற்க வேண்டியதில்லை—ஞான நூல்கள் கற்கவேண்டியதில்லை—ஆசார அநுஷ்டானங்களை அநுசரிக்க வேண்டியதில்லை—இவர்கள் ஊருக்குள் நுழையக் கூடாது-தெருக்களில் நடமாடக் கூடாது-கோவில்களின் பக்கத்திலும் வரக் கூடாது—இவர்களைத் தொட்டால் பாவம்—நெருங்கினால் பாவம்—பார்த்தால் பாவம்—எனவே இவர்கள் ஊருக்கு வெளியே—சேரிகளில் வசிக்க வேண்டியவர்கள்—உயர் வகுப்பினருக்கு ஏவல் செய்து காலங்கழிக்க வேண்டியவர்கள்" என்று சாஸ்திர நியாயம்-ஸ்மிருதி நியாயங்களைப் பேசிக்கொண்டிருக்கும் வைதிக வருக்கத்தைச் சேர்ந்த பண்டித மாளவியாஜி "புனிதமான கோவில்களுக்குள் நீங்கள் (தாழ்த்தப்பட்ட வகுப்பினர்) பிரவேசிக்க வேண்டும். எவ்வளவு நாளானாலும் வெற்றி உங்களுக்கே" என்று பகிரங்கமாய்க் கூற முன் வருவாரானால் இதை விட ஆச்சரியமான சங்கதி வேறு என்ன இருக்க முடியும்? காலச் சக்கர வேகம் இன்னும் என்ன என்ன விதமான மாறுதல்களைச் செய்யுமோ, யாரே அறிய வல்லார்?

பண்டித மாளவியாஜி அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலப் பிரவேசத்திற்குச் சில நிபந்தனைகளை விதிக்கிறார். உயர் வகுப்பினரின் "நல்லெண்ணம்" "அன்பு" "சமாதானம்" முதலியவைகளைப் பெற்றுக் கொண்டு ஆலயப் பிரவேசம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளை விதித்தாலும் "பஞ்சமர்கள்" புனிதமான ஆலயப்பிரவேசம் செய்யலாம்—செய்யவேண்டும் என்பதைப் பட்ட வர்த்தனமாய்—பச்சையாய்க் கூறி ஒப்புக் கொண்டு விட்டது கூர்ந்து கவனிக்கத்தக்கதாகும். சென்ற ஐம்பதாண்டுகளாகப் பெரிய சமூகச் சீர்திருத்த வாதிகளும், பத்துப் பதினைந்தாண்டுகளாகக் காந்தியடிகளும் காங்கிரஸும் இடையறாது செய்து வந்த தீண்டாமை விலக்குத் தொண்டின் பயனே வைதிகரான மாளவியாஜி போன்றவர்களையும் முன்னணிக்கு இழுத்து விட்டது என்று கூறலாம். காந்தியடிகள் இப்பொழுது தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களை முன்னேற்றத் தீவிரமாய் உழைத்து வருகிறார். அடிகள் தீண்டாமை விலக்கின் பொருட்டுத் தமது

ஆருயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறார் என்பது உலகறிந்த செய்தி. காந்தியடிகளைப் பின் பற்றியே பண்டித மாளவியாஜியும் தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்தக் கருத்தைச் செலுத்தி வருகிறார். ஆனால் பண்டிதர் அவர்கள் தாழ்த்தப்பட்டாரை உயர்த்த மேற்கொண்டு வரும் முறைகள் பயன் தரத்தக்கவையா என்பது வேறு விஷயம். அதைப் பற்றி விரிக்குமுன் அவருடைய முயற்சிகட்கு ஒரு சில குறுகிய நோக்கம் படைத்த வைதிகர்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்களையும் முரட்டுச் செயல்களையும் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

தீண்டாமை விலக்குக் கிளர்ச்சிக்குச் சென்னை மாகாணத்தில் கேரளமும், பம்பாய் மாகாணத்தில் நாஸிக் ஜில்லாவும் பெரும் புகழும் வாங்கி விட்டன. ஆலயப் பிரவேச உரிமைகட்காக அந்த இரண்டு இடங்களிலும் சத்தியாக்கிரகங்களும் நடை பெற்றிருக்கின்றன. கேரளத்தில் வைக்கம் சத்தியாக்கிரகம் வெற்றி பெற்றது. குருவாயூர்ச் சத்தியாக்கிரகம் தோன்றி நின்று அடங்கி யிருக்கிறது. நாஸிக் சத்தியாக்கிரகமும் இப்படியே தோன்றி நின்று அடங்கியிருக்கிறது. எனினும் நாஸிக்கில் அடிக்கடி கிளர்ச்சிக் கூச்சல்கள் கிளம்பிக் கொண்டிருக்கின்றன. முன்னர் பம்பாய் தாழ்த்தப்பட்ட வகுப்புத் தலைவர் டாக்டர் அம்பெத்கார் "நமக்கு இந்த மதம் தேவை இல்லை. சமத்துவம் அளிக்கும் வேறு மதத்தைத் தழுவ முனைவோம்" என்று முழக்கம் செய்தது நாஸிக் ஜில்லாவில் தான். இந்த முழக்கம் இந்தியா வெங்கும் கேட்டது. இது இந்தத் தலைவர்கள் எல்லாரையும் ஒரு கலக்குக் கலக்கிவிட்டது என்றே கூற வேண்டும். சமீபத்தில் மாளவியாஜி போன்றவர்கள் தீண்டாமை விலக்கின் பொருட்டுத் தீவிரமாய் ஈடுபட்டு வருவதற்கும் டாக்டர் அம்பெத்காரின் பேச்சே தான் காரணம். பண்டித மாளவியாஜி அவர்கள் டாக்டர் அம்பெத்காரின் பேச்சை மதிப்பற்றதாகச் செய்வதற்கே அதி தீவிரமாய் முயன்று வருகிறார். அகில இந்திய சநாதநிகள் மகாநாட்டில் பண்டிட்ஜீ தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலயப் பிரவேச உரிமையை வற்புறுத்தித் தீர்மானம் செய்வித்தார். சிவராத்திரிக் காலத்தில் ஷெடி வகுப்பாருக்குக் கங்கைக் கரையில் மந்திர தீக்ஷை செய்தார். சமீபத்தில் நாஸிக் க்ஷேத்திரத்திற்கு வந்து தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் ஆலயப் பிரவேச உரிமைகளை வற்புறுத்திக் கூறியதோடு அநேகருக்குச் சிவமந்திர தீக்ஷையும் செய்தார். "நமசிவாய" என்ற பஞ்சாக்ஷர உபதேசம் செய்தார் என்று தெரிகிறது. பண்டித மதன் மோகன் மாளவியாஜி இத்தகைய வேலைகளில் ஈடுபட்டது கூட ஒரு சில வைதிக வெறியர்களுக்கு மனம் சகிக்க வில்லை. உடனே கலகம் செய்யத் தலைப்பட்டனர் என்று தெரிகிறது. காந்தியடிகளின் உயிருக்கே உலைவைக்கும் முறையில் நடந்துகொண்ட சநாதநிகள் மற்றவர்களை என்னதான் செய்யத் துணியார்கள்? உடனே பண்டிதரைத் தர்க்கத்திற்கு இழுத்தார்கள். "தீண்டாமை சாஸ்திரோக்தமானது. தீண்டாமையை விலக்கச் சாஸ்திர விதிகள் இடந் தரவில்லை" என்று குதர்க்கம் பேசத் தொடங்கினர். இவர்களுடைய ஜபம் பண்டித மாளவியாவிடம் சாயுமா? அவர் இவர்களுடைய நிலைமைகளை நன்குணர்ந்து தம்முடன் கூடவே சில சாஸ்திர நிபுணர்களையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தார். சநாதநிகளுக்கும் மாளவியா கோஷ்டிக்கும் வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. சநாதநிகள் ஏதேதோ சம்பந்தமில்லாத விவகாரங்களை இழுத்து முட்டுக் கட்டைபோட முயன்றனர். பண்டிதரின் கோஷ்டியினர் எதற்கும் அஞ்சவில்லை. அவர்கள் வடமொழியிலிருந்தும், ஹிந்தியிலிருந்தும் ஏராளமான மேற்கோள்களை எடுத்து அடுக்கத் தொடங்கினார்கள். சநாதநிகள் அஞ்சி நடுங்கினர் என்றே கூறவேண்டும். மாளவியாஜி அவர்கள் "கிறிஸ்தவர்கள்—முஸ்லிம்கள் முதலிய பிறமதத்தினருக்கு அளிக்க விரும்பும் சௌகரியங்களையும் உரிமைகளையும் ஏன் தாழ்த்தப்பட்ட

வகுப்பினருக்கு அளிக்க மறுக்கின்றீர்கள்? உங்கள் நடவடிக்கைகட்குச் சாஸ்திர ஆதாரம் என்ன?" என்று கேட்டவுடன் சநாதநிகள் விழி விழி என்று விழித்து விட்டார்கள். எனினும் தங்கள் மூடப் பிடிவாதத்தை விட்டுவிட மனமில்லாமல் "மதத்தைக் காப்பாற்றுங்கள்? சீர்திருத்தவாதிகளைத் தலையெடுக்க விடாமல் தூரத்தி யடியுங்கள்" என்று கூச்சல் போட்டு ஆர்ப்பாட்டம் செய்தனராம். இது நிற்க,

இனி, பண்டித மாளவியாஜி அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கட்கு மந்திர தீக்ஷை செய்யும் விஷயத்தை ஒரு சிறிது கவனிக்கலாம். பண்டிதரைப் போன்ற உண்மை வைதிகர்களும் பிராமணோத்தமர்களும் தாழ்த்தப்பட்ட மக்களின் ஜீவாதார உரிமைகளை ஒப்புக்கொண்டு அவைகளுக்காகப் போராட முன் வருவது போற்றத்தக்கதே. அவர்கள் மேற்கொண்டு வரும் முறைகள் பயன்தரத்தக்கவை இல்லை என்றே சொல்லவேண்டும்.

தீண்டாமை விலக்குக்காக மந்திர தீக்ஷை—உபநயனம் செய்தல் போன்ற முறைகள் பயன்படமாட்டா என்பது "விகட"னது தாழ்மையான அபிப்பிராயம். தாழ்த்தப்பட்ட மக்கட்கு மாத்திரம் மந்திர தீக்ஷை விதியை ஏற்படுத்துவது ஏன் என்று விளங்கவில்லை. உயர் வகுப்பினர் என்பவர் எல்லோரும் மந்திர தீக்ஷை பெற்றுக்கொண்டுதான் ஆலயங்கட்கு செல்லுகின்றார்களா? இல்லை என்பது கண்கூடு. நீங்கள் பொய் பேசக்கூடாது; கள் சாராயம் குடிக்கக்கூடாது; மாமிச உணவு உண்ணக் கூடாது; உடம்புகளையும் ஆடைகளையும் சுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டும்; தெய்வ பக்தியுடையவர்களாயிருக்க வேண்டும்" என்று காசியில் பண்டித மாளவியாஜி தாழ்த்தப்பட்ட மக்கட்கு உபதேசம் செய்தார். மந்திர தீக்ஷையும் இந்த உபதேசங்களும் குறிப்பாக அவர்கட்கு மாத்திரம் தான் தேவை என்று யாராலும் சொல்லிவிட முடியாது. உயர் வகுப்பினர் என்போரில் எத்தனையோ லக்ஷக்கணக்கான மக்கள் மாளவியாஜியின் உபதேசங்கட்கு முரண்பட்டவர்களாயிருப்பதை நாம் நாடோறும் கண்டு வருகின்றோம். அவர்கள் எல்லாரும் சகல உரிமைகளையும் தங்குதடையின்றி அநுபவித்துக் கொண்டு வருவதையும் நாம் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றோம். மேலும், முற்காலத்திலேயே மந்திர தீக்ஷையும் உபநயனமும் பெற்றிருப்பவர்கள் இக் காலத்திலும் தாழ்த்தப்பட்டவர்களாகவும்— சூத்திரர்களாகவும்——பிற்போக்கானவர்களாகவுமே சமூக வாழ்வில் நடத்தப்பட்டு வருகிறார்கள். எனவே வெறும் மந்திர தீக்ஷையாலும் உபதேசங்களாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்க்கை உயர்ந்து விடும் என்று சொல்லுவதற்கில்லை. காந்தியடிகள் கூறுவது போல் பல நூற்றாண்டுகளாக நாம் ஒரு சார் மக்களை மாக்களாகக் கருதி ஒதுக்கி வைத்துவிட்டோம். அந்தப் பலனை இப்பொழுது அநுபவித்து வருகிறோம். எனவே நாமே அவர்களைக் கைகொடுத்துத் தூக்கி விடவேண்டும். அதற்குரிய சரியான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று "விகடன்" மேன்மை தங்கிய மாளவியாஜியைக் கேட்டுக் கொள்ளுகின்றான். தாழ்த்தப்பட்ட மக்கட்குக் கல்வி வசதியும், பொருளாதார நிலை உயர்வுக்கு வழியும் ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்களின் நிலைமை வெகு விரைவில் உயர்ந்துவிடும் என்பதில் ஐயம் இல்லை. இவ்வுண்மையை உணர்ந்த காந்தியடிகள் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வியறிவைப் பெருக்குவதிலும், கைத்தொழில் வசதிகளை ஏற்படுத்துவதிலும் கருத்தைச் செலுத்தி வருதல் பெரிதும் கவனிக்கத்தக்கதாகும். எனவே செல்வாக்குள்ள பண்டித மாளவியாஜி அவர்கள் வெறும் மந்திர தீக்ஷைகளிலும் ஹிதோபதேசங்களிலும் காலத்தைக் கடத்தாமல் காந்தியடிகளோடு ஒத்துழைப்பதின் மூலம் உருவான வேலையில் ஈடுபட வேண்டும். மந்திரத்தால் மாங்காய் விழா தென்பதை விரிக்கவும் வேண்டுமோ?

---

1863

# காலச்சக்கரம்

## புதிவைஸ்ராய் மகாத்மாவைக் காண்பாரா?

அடுத்த வருஷம் நமது அரசர் பெருமான், இந்தியாவுக்கு விஜயஞ் செய்யும் விஷயம் ஏற்கனவே, லண்டனில் வாதிக்கப்பட்டு விட்டது. அச் சமயத்தில், இந்தியாவில் அலங்காரம் முதலிய விசேஷ ஏற்பாடுகள் செய்ய இந்திய சர்க்கார் யோசித்து வருகின்றனர். லார்டு வெல்லிங்டனுக்குப் பிறகு வரும் புதிய வைஸ்ராய் லார்டு லின்லித்கௌ இந்தியாவுக்கு வந்ததும், மகாத்மா காந்தியைச் சந்தித்து சில விஷயங்களைப் பற்றி அவரோடு கலந்து பேசுவார் என்று பத்திரிகை யுலகில் வதந்தி பரவி யிருக்கிறது. இவ்வதந்தி யுண்மையானால், புதிய வைஸ்ராய் மகாத்மாவைக் கண்டு, அவருடன் நாட்டு நிலைமையைப்பற்றிக் கலந்து பேசி சர்க்காருக்கும் காங்கிரஸுக்கும் இடையே சமாச நிலையை ஏற்படுத்த வேண்டுமென விகடன் கூற விரும்புகிறான். எட்டாம் எட்வர்டு மன்னர் இந்தியாவுக்கு விஜயஞ் செய்வதற்கு முன், இங்கு இந்திய மக்களிடையே சந்துஷ்டியான நிலையை ஏற்படுத்துவது நலமல்லவா!

*　　*　　*

## இந்தியர் தலையெழுத்து

"வைஸ்ராய் மாளிகையில் வேலை செய்யும் வேலையாட்கள் மாதம் பதினொன்கு ரூபாய் பெற்று வருகையில், கவர்னர் ஜெனரலுக்கு மாதந்தோறும் இருபதினாயிரம் ரூபாய் அளிப்பது இந்தியா போன்ற ஒரு ஏழை நாட்டுக்கு அதிக மில்லையா?" இக்கேள்வி, இந்தியா சட்டசபையில் திரு. சத்தியமூர்த்தியால் கேட்கப்பட்டது. ஆனால், இக் கேள்விக்குச் சரியான பதில் கிடைக்கவில்லை; நேர்முகமாகப் பதிலளிக்கவும் முடியாது. ஸர். ஹென்றி கிரெய்க் இதற்குப் பதிலளிக்கையில், வைஸ்ராய் ஒருவர் மட்டுமே இப்பெருந் தொகையைச் சம்பளமாக வாங்கவில்லை யாகையால், இக் கேள்விக்குப் பதிலளிக்க முடியாது என்று ஏதோ கூறி மழுப்பலானார். திரு. சத்தியமூர்த்தி கேட்ட கேள்வியில் ஒரு சிறு ஹாஸ்யம் அடங்கி யிருக்கிறது. வேலைக்காரர்கள் மாதமொன்றுக்குப் பதினொன்கு ரூபாய் சம்பாதிப்பதாக அவர் குறிப்பிட்டார். ஆனால், இந்தியாவிலுள்ள ஆயிரக்கணக்கான பேர்களுடைய வருவாய் மாதமொன்றுக்குப் பதினொன்கு அணாவுக்கு மேல் போவதில்லை என "விகடன்" இவ்விடத்தில் கூற விரும்புகிறான். அப்படி யிருக்கும்போது, அவர்களெல்லாஞ் சேர்ந்து கவர்னர் ஜெனரலுக்கு மாதந்தோறும் இருபதினாயிரம் ரூபாய் கொடுத்து வருகிறார்களென்றால், அவர்களது துரதிர்ஷ்டம் பொருந்திய தலையெழுத்தை என்னென்பது!

*　　*　　*

## தேர்தல் ஜுரம்

பிரிட்டிஷ் இந்திய சர்க்கார், இந்தியாவுக்கு வழங்கி யிருப்பதாகக் கூறப்படும் ஜனநாயக ஆட்சிமுறையின் பயனாக, ஏற்பட்டது இத்தேர்தல் ஜுரம். இது ஆரம்பத்தில் சாதாரணமாகவே நம் நாட்டில் பரவியது. நாளடைவில், இந்த ஜுரத்தின் உத்வேகம் அதிகரித்து விட்டது. கடந்த இரண்டு வருடமாக, இந்த ஜுரம் நம் சென்னை மாகாணத்

கை அடுத்தடுத்து பற்றி வருகிறது. 1934-ம் வருடம் நவம்பர்மாதம் நடந்த இந்தியா சட்டசபைத் தேர்தலி லிருந்து, வடாற்காடு ஜில்லா போர்டு தேர்தல்வரை, இத் தேர்தல் ஜுரம் அபேட்சகர்களையே யன்றி, வாக்காளர்களையும், பொதுமக்களையும் பிடித்து வாட்டி வந்ததை நாம் அனைவரும் அறிவோம். இந்த ஜுரம் சென்னை மாகாண முழுவதையும் — ஒவ்வொரு ஜில்லாவையும் தீவிரமாகப் பிடித்து ஆட்டி விட்டது. மலேரியா, நிமோனியா, இன்புளுயன்ஸா முதலிய விஷஜுரங்களுக்கும், இத் தேர்தல் ஜுரத்துக்கும் தன்மையில் ஒன்றும் வேற்றுமையில்லை. ஆனால், இத் தேர்தல் ஜுரம், அவ்விஷ ஜுரங்களைப் போல், உயிர்களைக் கொள்ளை கொள்வதில்லை. அந்தமட்டில் அதிர்ஷ்டமே! அதற்காக நாம் கடவுளை வாழ்த்த வேண்டும்!

* * *

## வடாற்காட்டில் காங்கிரஸ் வெற்றி!

இத்தேர்தல் ஜுரம் கடைசியாக, வடாற்காடு ஜில்லாவில் மற்ற ஜில்லாக்களைக் காட்டிலும் மிக உத்வேகமாகத் தாண்டவ மாடியது. காங்கிரஸல்லாத எதிர்க்கட்சி யபேட்சகர்களுக்கு 110 டிக்ரிகூட ஜுரம் அடித்ததாகக் கேள்வி. அந்த உக்கிரத்தில் அவர்களில் சிலர் மகாசபையைப்பற்றிக் கண்டவாறு பிதற்றியதில் ஆச்சரியமில்லை யல்லவா! எதிர்க்கட்சியினர் எவ்வளவோ பிரமப் பிரயத்தனமெல்லாஞ் செய்து வாக்காளர்களை ஏமாற்றித் தங்கள் வசப்படுத்த முயன்றனர். இன்னுமா வாக்காளர்கள் கண்மூடிக் கொண்டிருக்கின்றனர்! அவர்கள் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கே பெருவாரியாக வாக்களித்து அவர்களை வெற்றியுறச் செய்தனர். வேலூர் ஜில்லாவிலும், திருவண்ணாமலை ஜில்லாவிலும் காங்கிரஸ்காரர்களே பெரும்பான்மையாக வெற்றியடைந்திருக்கின்றனர். திருவாளர்கள் முத்துக்குமாரசாமி முதலியார், கரிய கவுடர் போன்றவர்கள் தோல்வியுற்றதில் ஆச்சரியமொன்றுமில்லை. இந்த வடாற்காடு ஜில்லா போர்டு தேர்தல் சமயவாதிகளுக்கு—சமயத்துக்குத் தக்க வேடம் போடுபவர்களுக்குச் சரியான பாடங் கற்பித்திருக்கிறது.

* * *

## மறுமண மசோதா.

நம் நாட்டில் வைதீகத்தின் பேரால், சமூகத்தில் நடைபெற்றுவரும் கொடுமைகளும், மூடப் பழக்கவழக்கங்களும் பல. அவற்றில் தீண்டாமைக்கு அடுத்தபடியாக நின்றது பெண்களைச் சுதந்தரமின்றி அடிமைகளாக நடத்துதல் என்னுங் கொடிய வழக்கமாகும். பெண்களுக்குச் சொத்துரிமையில்லை; தாங்களே கணவன்மாரைத் தேர்ந்து விவாகஞ் செய்து கொள்ளும் உரிமையில்லை; இளமையிலேயே கணவனையிழந்துவிட்டால் மறு விவாகஞ் செய்து கொள்ள உரிமையில்லை. மற்றெந்த சுதந்தரமில்லாவிடினும், இளம் வயதிலேயே கணவனையிழந்தால் மறுபடியுங் கலியாணஞ் செய்து கொள்ளும் உரிமையாவது இருக்கவேண்டியது அவசியம். அவ்வுரிமைகூட இல்லாதிருப்பது சகித்தற்கியலாத தொன்றாகும். என்னதான் பெண்கள் ஆண்களுக்கு அடிமைகளாக இருந்தாலும் இவ்வளவு தூரம், அவர்கள் உரிமைகளைக் கடிவது அறக் கொடிது! ஆண்மகனொருவன் மனைவியையிழந்தால், வேறொரு மங்கையை மறுபடியும் மணந்துகொள்ளலாம். அவ்வளவு தூரம் ஏன்? மனைவியிருக்கையிலேயே வேறொரு பெண்ணையோ அல்லது பெண்களையோ விவாகஞ்செய்து கொள்ளலாம். ஆனால் ஒரு பெண் ஐந்து வயதில் தாலியறுத்தாலும் மறுவிவாகஞ் செய்யக் கூடாது; பெண்ணாய்ப் பிறந்த தோஷத்துக்காக அவள் வாணாள் முழுதும் இன்பசுகமின்றி வாடி வருந்தவேண்டும். என்ன கொடுமை! இதுதான் இந்து சமூகச் சட்ட திட்டம். இந்தியாவில் பாலி விதவைகளின் எண்ணிக்கையையும், அவர்களின் பரிதாப நிலையையும், இவ்வைதவ்வியக் கொடுமையால் நேரும் பல தீங்குகளையும் சிறிது நேரமாயினும் சிந்தித்துப் பார்ப்

பவர்கள் இக் கொடிய நிலையை நீடிக்கச் செய்ய விரும்பமாட்டார்கள். இவ்வைதவ்வியக் கொடுமையை யொழிக்கப் பரந்த நோக்கமுடைய பெரியோர்கள் தீவிரமாகப் பாடுபட்டு வருகிறார்கள். பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் போன்ற சீர்திருத்த சங்கங்களின் பயனாக, விதவை மறுமணங்கள் ஒருவாறு நடந்து வருகின்றன. விதவைகள் சட்டப்படி மறுமணஞ் செய்துகொள்ளலா மென்று சட்டஞ் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது இந்தியா சட்டசபையில் ஒரு மெம்பர் மனைவியை யிழந்த ஆடவர்கள் மறுமணஞ் செய்து கொள்வதா யிருந்தால், விதவை மகளிரையே மணக்கவேண்டுமென சட்டஞ் செய்யுமாறு மசோதா வொன்றைக் கொண்டு வந்திருக்கிறார். இம் மசோதாவைச் சமீபத்தில் மூல்டானில் கூடிய விதவை மறுமண மகாநாட்டார் ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள். இந்தியாவின் மற்ற பாகங்களிலும் இம்மசோதாவுக்கு ஆதரவு கிடைக்குமென்பது திண்ணம். எனவே, இம்மசோதாவுக்குப் பொதுஜனப் பிரதிநிதிகளான இந்தியா சட்டசபை மெம்பர்கள் பேராதரவு காட்டி அதை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று "விகடன்" கேட்டுக் கொள்ளுகிறான்.

---

## தமிழ்ப்பெரியார் மறைவு !

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்த் தாயின் தவப்புதல்வர்களி லொருவராய் விளங்கியவர் தமிழ்க்கடல் கா. ரா. நமசிவாய முதலியா ராவர். அவர் தமிழ் மொழிக்கும், தமிழ்மக்களுக்குஞ் செய்த தொண்டு அளவிடற் கரியது! அவர் திருநாமத்தைத் தமிழ்நாட்டில் அறியாதார் ஒருவரு மிலர். ஐந்து வயது பாலன் முதல், முதியோர் வரை அவர் பெயரை அறிவர். ஆரம்ப வகுப்பி லிருந்து பி. ஏ. வகுப்புவரை அவ்வவ் வகுப்பிற் கேற்றவாறு பாட புத்தகங்கள் எழுதி யிருக்கிறார். அதுவன்றி, பண்டைத்தமிழ் இலக்கிய நூற்கள் சிலவற்றையும் நூதன உரையோடு பதிப்பித்து தமிழுலகுக்கு அளித்து அழியாப் புகழைப் பெற்றிருக்கிறார். தமிழ் வசன நடைக்குப் புத்துயிரளித்தவர் இப்பெரியார். அது மட்டுமோ! 'தமிழ்ப்பண்டிதர்க ளென்றால், பரம ஏழைகள், உலகம் தெரியாதவர்கள், அநாகரிகர்கள்' என்று பிறர் எண்ணி வந்த எண்ணத்தை அவர் போக்கி, தமிழ்ப்புலவர்களுக்குக் கௌரவத்தை யுண்டுபண்ணினார். அவர் பரந்த நோக்கமும், விரிந்த உள்ளமு முடையவர்; சாதிசமய பேதங்களைக் கடந்தவர்; யாவருடனும் இனிமையாகப் பேசும் சுபாவமுடையவர்; தம்மை யடைந்தாரை யாதரிப்பதில் கற்பகத் தருவை யொத்தவர். இத்தகைய நறுங்குணங்க ளெல்லாம் ஒருங்கே வாய்ந்த நமது தமிழ்ப் பெரியார் நமசிவாய முதலியாரது அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவைத் தமிழ்மக்கள் கொண்டாடு முகத்தான் தங்கள் நன்றி யறிதலைத் தெரிவிக்க விருந்தது இயற்கைதானே! ஆனால், காலனுக்குக் கண்ணில்லை. அவன் நம் எண்ணத்தில் மண்ணைத் தூவிவிட்டுத் தன்னுலகுக்கு அப் புலவரை யழைத்துச் சென்றுவிட்டான். 13-3-36-ந்தேதி யன்று மாலை அவர் நம்மை யெல்லாம் விட்டுப் பிரிந்தார். அவரது பிரிவைக் கேட்டுத் தமிழுலகமே திடுக்கிட்டு விட்டது. இவரது பிரிவைத் தமிழ்மக்கள் எவ்வாறு சகிப்பரோ தெரியவில்லை. இவரது பிரிவு ஈடு செய்த முடியாத பெரிய நஷ்டமாகும். தமிழ்மொழிக்கு நல்ல காலமில்லை; தமிழ் மக்களுக்கு நல்லதிர்ஷ்ட மில்லை. தமிழ் மொழியில் மறுமலர்ச்சியை யுண்டு பண்ணிய இப் பெரியாரை இனி என்று காண்போம்! என்றே "விகட"னும் மற்றவர்களோடு ஏங்குகிறான்.

---

“கோடீஸ்வரர்” என்னும் ஹிந்தி படத்தில் நடிக்கும்
ஸ்ரீமதி. மோலினாவும், ஸ்ரீமதி. ராஜகுமாரியும்.

"சந்திரஹாஸா" என்னும் தமிழ்ப் பேசும் படத்தில்
நடிக்கும் ஸ்ரீமதி. சி. எஸ். சாரதாம்பாள்.

# எதிர்கால பயங்கர யுத்தம்

> சென்ற உலகப் போரைக் குறித்துச் சரியான ஜோசியங் கூறிய அமெரிக்க அரசியல் அறிஞர் கர்னல் எட்வர்ட் ஐ ஹௌஸ் என்பவர் கீழ்வருமாறு கூறுகிறார்:—
>
> "ஜப்பான் மேனாட்டு முறைகளை மேற்கொண்டிருக்கிறது. ஜப்பானிய வாலிபர்கள் புரட்சித் தத்துவத்தை ஆசியாவில் பிரசாரம் செய்துகொண்டிருக்கிறார்கள். வெள்ளையர்கள் தங்கள் குறைகளை மாற்றிக்கொள்ளாவிட்டால் பெருத்த அழிவுக்குக் காரணமான போர் நிகழ்தல் தவறாது.

மற்றொரு பயங்கரமான கோர யுத்த நெருப்புச் சுடர்கள் தலைகாட்டிக் கொண்டிருக்கின்றன என்று ஹௌஸ் கூறுகிறார். இதுகாறும் நடைபெற்ற எந்த யுத்தமும் வரப்போகும் யுத்தத்திற்கு நிகராகாதாம்.

இந்த யுத்தம் உலகத்திலுள்ள வெள்ளைச் சாதிகளுக்கும் மற்ற நிறச் சாதிகளுக்கும் நடக்கலாம். பெரிய வெள்ளம் போல் இப்போர் நம்மீது திடும்பிரவேசமாய் ஏதோ ஓர் சமயத்தில் வந்து விடலாம். இன்ன காரணத்தால் யுத்தம் வருகிறது என்று ஊகித்துச் சொல்ல இயலாது. தற்காலம் முஸோலினி ஆப்பிரிக்காவில் நடத்தி வரும் முரட்டு யுத்தத்தினாலோ—அல்லது ஜப்பானுக்கு யாரோ ஒரு அமெரிக்கவாசியால் ஏற்படும் சில்லறை விவகாரத்தாலோ—அல்லது இந்தியாவில் பிரிட்டிஷார் நடவடிக்கையாலோ இவற்றுள் ஏதோ ஒரு காரணத்தால் பயங்கரமான இந்தப் பல வேறு சாதிகள் சம்பந்தப்பட்ட யுத்தம் தவறாமல் ஏற்படும் என்பது அவருடைய அபிப்பிராயம்.

"ஆப்பிரிக்காவை நான் பரிபாலிக்க வேண்டும் என்றால் இல்லை நான் பரிபாலிக்க வேண்டும்" என்றும், "ஆசியா என் வசம் இருக்க வேண்டும் என்றால் இல்லை என் வசம் தான் இருக்க வேண்டும்" என்றும் வெள்ளை நிறத்தார் தங்களுக்குள் சிறிது சிறிதாக உள்ளூர முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இம் முயற்சிகளாலேயே சச்சரவுகளும் பெருகிக் கொண்டிருக்கின்றன. இதே சமயத்தில் உலகத்திலுள்ள நிறச் சாதிகளின் மனப்பான்மையும், நாகரிகமும், முன்னேற்றமும் எவ்வெவ் வழிகளில் சென்றுகொண்டிருக்கின்



# கருப்புச் சாதிகளின் புரட்சியா?

?

றன என்பதை வெள்ளைச் சாதிகள் கவனிக்கவில்லை. ஆப்பிரிக்கா ஒரு பெரிய கண்டம். இந்தக் கண்டம் முழுவதிலும் பெரும்பாலும் கருப்புச் சாதியினரே நிறைந்திருக்கின்றனர். அதில் ஆங்காங்கு ஐரோப்பாவிலுள்ள வெள்ளையரசாங்கங்கள் சிறு சிறு பாகங்களைச் சொந்தமாக்கிக்கொண்டு அதிகாரம் செலுத்தி வருகின்றன. இந்தச் சிறிய அரசாங்கங்கள் அதிகாரம், வியாபாரம் முதலியன எல்லாம் தங்கள் கைகளிலேயே வைத்துக் கொண்டு காலம் கடத்தி வருகின்றன. ஆங்காங்குள்ள கருப்புச் சாதிகளின் முன்னேற்றம் நாளுக்கு நாள் அபிவிருத்தி யடைந்து கொண்டே வருகிறது. இதனால் அவர்களுக்குள் தேசிய நோக்கம், ஒற்றுமை முதலியவை பெருகி வருகின்றன. இதைக் கண்டு வெள்ளை அரசாங்கங்கள் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கின்றன. அங்கேயுள்ள வெள்ளை அரசாங்கத்தார் முன் ஜாக்கிரதையுடன் இருந்தாலொழிய காரியம் கெட்டு விடும் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். பல நூற்றாண்டுகளாக வெள்ளைச் சாதியார்மீது ஆப்பிரிக்கா வாசிகளுக்கு இருந்து வந்த வெறுப்பு, கடந்த ஐரோப்பியப் பெரும் போர் முடிவானதிலிருந்து ஓங்கி வளர்ந்து விட்டது. முன்பு பத்தாண்டுகளில் நிகழ வேண்டிய மாறுதல்கள் இப்பொழுது அந்தக் கண்டத்தில் ஒரு வாரத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றிற்கு அநுகூலமாக டெலிபோன், தந்தி, இருப்புப்பாதை, ரேடியோ முதலிய நவீன சாதனங்கள் எல்லாச் சாதிகளும் தினசரி வாழ்க்கையில் உபயோகிக்கும் நிலைக்கு வந்துவிட்டன.

மேனாட்டு நாகரிகத்தை முற்றிலும் அர்த்தம் செய்து கொண்டு முற்போக்கு அடைந்திருக்கும் நாடுகளில் ஜப்பானை முதன்மையானதாகக் கூறலாம். இன்று கைத்தொழில், வர்த்தகத் துறைகளில் ஜப்பான் ஐரோப்பிய நாடுகளுக்கு எவ்வகையிலும் பின்வாங்கி நிற்கவில்லை. ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலுள்ள அரசியல் நிபுணர்கள் இவ்வுண்மையைக் கவனித்திருப்பதாக எத்தகைய அறிகுறியும் இல்லை. ஜப்பான் என்றால் வெள்ளைச் சாதிகளுக்கு இன்னும் அருவருப்பும் அலக்ஷியமும் நீங்கினபாடில்லை. ஜப்பான் தேசத்தில் சஞ்சாரம் செய்த ஒரு பத்திரிகை நிருபர் இவ்வாறு எழுதுகிறார்:—

"தைரியத்திலும், உறுதியிலும் காரியம் நிர்வாக ஆற்றலிலும், சக்தி சாமர்த்தி

யங்களிலும், முறையான ஏற்பாடுகளிலும் ஜப்பான் காட்டினர் மேனாட்டினருக்கு எவ்வகையிலும் இளைத்துப் போகவில்லை. ஆனால் தற்காலம் ஜப்பான் ஒரு காரியத்தைச் செய்தால் அதன் மர்மம் இன்னது என்று அறிந்துகொள்வதற்கு அவகாசமில்லை. ஜப்பானியர் நம்மைப் போலவே முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள் என்னும் உண்மையை நாம் எவ்வளவு சீக்கிரத்தில் அறிந்துகொள்ள வேண்டுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அறிந்துகொள்ளுவது நல்லது."

ஜப்பான் முதன் முதல் எந்தக் காரிய முறையை மேற்கொள்ள ஆலோசிக்கின்றதோ அதைத் தெரிந்து கொள்ள வெள்ளைச் சாதியினர் முயற்சி செய்தல் மிகவும் அவசியம் என்று சில மேனாட்டு அரசியல் வாதிகளும் கூறுகிறார்கள். ஜப்பான் போக்கை அறிந்து, அந் நாட்டுக்கும், வெள்ளைக்காரர்களுக்கும் சுயமதிப்புக் குறையாதிருக்கும் வழிகளைக் காணுதல் மிகவும் முக்கியம். ஜப்பான் விஷயத்தில் எந்த விதமான பயமுறுத்தலும் கெடுதலும் உண்டாக்காத முறையில் ஐரோப்பிய நாடுகள் நடந்து கொள்ள வேண்டும் என்று கர்னல் எட்வர்டு ஹௌஸ் கூறுகின்றார். வெள்ளை நாடுகளோடு ஜப்பான் கூட்டுறவு கொண்டு ஒத்துழைக்கத்தக்க நிலைமையை ஏற்படுத்தினால் ஜப்பானும் நல்ல வார்த்தைகளோடு சமாதான தத்துவங்களைப்பற்றிப் பேசவேனும் தயாராக இருக்கும். இதனால் வெள்ளை—கருப்புச் சாதியினரிடையே ஏற்படப் போகும் பயங்கர யுத்தம் சற்றுத் தாமதம் ஆகும் நிலைமை உண்டாகலாம். ஆர்தர் ப்ரிஸ் ப்ரேன் என்பவர் எழுதியிருப்பதும் கவனிக்கத் தக்கதாகும். அதாவது ஆசியா—ஆப்பிரிக்காக் கண்டங்களில் வெள்ளையர்களின் ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டும் என்று ஜப்பான் வாலிப சங்கத்தார் பிரசாரம் செய்து வருவதாகத் தெரிகிறது என்கிறார். இது உண்மையோ பொய்யோ அது வேறு விஷயம். ஜப்பான் என்ன செய்து கொண்டிருக்கிறது என்று இமை கொட்டாமல் அமெரிக்க அரசியல் வாதிகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாமும் முன் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும் என்று எச்சரிக்கை செய்து கொண்டிருக்கிறார்கள். எது எப்படி இருந்தாலும் ஒரு பிரமாண்டமான எதிர்ப்பும் புரட்சியும் வரப்போகின்றன என்னும் விஷயத்தில் மேதாவிகள் எல்லாரும் ஒருமுகமான அபிப்பிராயத்தை வெளியிட்டுக்கொண்டு வருவது தெளிவான செய்தியாகும். அப்பொழுதேனும் கருப்புச்சாதியினரை வெள்ளை ஐரோப்பியர் மதிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுத் தீரும் என்பதில் ஐயம் இல்லை.

வரப்போகும் இந்த மகத்தான புரட்சிச் சமயத்தில் ஒரு ஜப்பானைப்பற்றி மாத்திரம் யோசனை செய்து கொண்டிருந்து விட முடியாது. பரந்து விரிந்த சீனதேசம் இருக்கிறது. ஒருகாலத்தில் பெரிய ஏகாதிபத்தியம் என்று பேர் பெற்றிருந்த சீனதேசம்—இன்று பல பிளவுகட்குட்பட்டு உள்நாட்டுக் கலகங்கட்கும், சண்டை சச்சரவுகட்கும், வறுமைத் துன்பங்கட்கும் நிலைக்களமாயிருந்தபோதிலும் மறுபடியும் அது புத்துயிர்பெற்று ஏன் ஒரு பெரிய சாம்ராஜ்யமாகி விடக்கூடாது?

சென்ற ஐம்பதாண்டுகளாகச் சீனா ஒரு வழியில் சென்றது. ஜப்பான் மற்றொரு வழியைப் பின்பற்றியது. ஜப்பான் ஐரோப்பாவை லக்ஷியமாக வைத்துக்கொண்டு தனது முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டது. மேனாடுகளின் போக்கையும் நாகரிகத்தையும் எவ்வளவு எளிதில் அர்த்தம் செய்துகொண்டு காரியங்களை நடத்த முடியும் என்னும் உண்மையை ஜப்பான் கீழ்நாடுகளுக்குக் கண்கூடாகக் காட்டி விட்டது.

சீனம் பழைமை விரும்பி. தனது பழைய முறைகளிலேயே அது பற்றுள்ளங்கொண்டு வாழ்ந்து வருகிறது. சீனாவிடம் நிகரற்ற தியாகபுத்தியும், தத்துவங்களும் நிறைந்திருக்கின்றன. இந்த விஷயத்தில் சீனாவைக்கண்டு ஐரோப்பா வெகுதூரத்தில் ஒதுங்கி நிற்கவேண்டியதே. பேச்சுச் சுதந்தரம், எழுத்துச் சுதந்தரம்,

சமயச் சுதந்தரம் முதலியவற்றில் சீனா மற்றெந்த நாகரிக நாட்டுக்கும் தாழ்ந்து விடவில்லை. ஆனால் இம்மையைக் காட்டிலும் மறுமை விவகாரங்கட்கே அங்கே மரியாதை அதிகம். சீனாவானது ஜப்பானைப்போல் ஐரோப்பிய நடைமுறைகளைப் பின்பற்றத் தொடங்கினால், உலக முழுவதிலும் ஒரு தத்தளிப்புத் தோன்றும் என்பதில் ஐயம் இல்லை. அப்போது அந்நாட்டிலிருந்து வீறுகொண்டு எழும் ஆவேச சக்தியைத் தடைசெய்ய யாராலும் முடியாது. இனி, இந்தியாவைப் பற்றிக் கர்னல் எட்வர்ட் ஐ. ஹௌஸ் என்ன சொல்லுகிறார் என்பதைக் கவனியுங்கள்:—

“பிரிட்டிஷார் யாரை ஆட்சி புரிகின்றனரோ அவர்கள்பால் மிகுந்த புத்திசாலித்தனமாகவே நடந்து கொள்ளுகிறார்கள். அவர்களால் ஆளப்படும் இந்தியா முதலிய நாடுகளின் ஜனத்தொகையைக் கவனித்தால் அவர்கள் நடுங்க வேண்டியவர்களே; ஆனால் ஓரளவுக்கு நன்மை அளிக்கும்படியான பிரிட்டிஷ் ஆட்சி முறையில் திருப்தி காட்டப்படுகிறது. ஆனால் ஜப்பான் கீழை நாடுகளின் புரட்சிக்குத் தலைமை வகிக்கும்படியான நிலைமை நேர்ந்தால் அப்பொழுது இந்தியாவும், மற்ற ஐரோப்பிய ஆட்சிமுறைக்கு அடங்கியிருக்கும் நாடுகளும் புரட்சியில் கலந்து கொள்ளலாம். தருமநீதியாகச் சீனா தனது அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொண்டால் இந்தியாவுக்கும் ஒரு துணிச்சல் ஏற்பட்டுவிடும். ஏன்? ஜனத்தொகை முதலிய அம்சங்களிற் பல சீனாவும் இந்தியாவும் ஒத்திருக்கின்றன என்பது உலகறிந்த விஷயம். ஐரோப்பியர்—ஐரோப்பியரல்லாதாரிடையே ஏற்படும் பிளவானது மறுபடியும் ஒன்று சேருவதற்கு முடியாத வகையிலேயே இருக்கும்.”

மேலும் அவர் எதிர்காலத்தைப்பற்றிக் கூறுவதாவது.

“இனிமேல் ஏற்படப்போகும் ஆபத்தைக் குறித்து விவரிக்க எனக்கு விருப்பமில்லை. ஆனால், அதிர்ஷ்டமோ துரதிர்ஷ்டமோ நான் மேலே குறிப்பிட்ட அம்சங்கள் பல உண்மையானவை என்று நம்புகின்றேன். சென்ற ஐரோப்பியப் பெரும் போர் நிகழ்வதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரே நான் அந்த யுத்தம் ஏற்படப்போவதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். வர்ஸெல்ஸ் உடன்படிக்கைபற்றி எவ்வித ஆலோசனையும் கிளம்புவதற்கு முன்பே, இதனால், இன்ன இன்ன அனர்த்தங்கள் வரும்; இவ்வளவு கெடுதிகள் உண்டாகும் என்று சொல்லியிருக்கிறேன். வெள்ளையர்—கருப்பர்களிடையே ஏற்படப்போகும் யுத்தத்தைப்பற்றி நான் சொன்ன ஜோஸியம் உண்மை இல்லை என்று நிரூபிக்கப்பட்டால் அதற்காக மகிழ்ச்சி அடைகின்றவர்களில் நான் முதல் மனிதன் ஆவேன்”

பிறகு, இந்த எதிர்கால யுத்தம் நேராமல் தடை செய்யும் பொருட்டுச் சில சாதனங்களையும் அவரே குறிப்பிட்டிருக்கிறார்:—

ஆசியா—ஆப்பிரிக்காக் கண்டங்களில் ஏற்பட்டிருக்கும் அவநம்பிக்கைகளையும் முணுமுணுப்புகளையும் முதலிலேயே கவனித்து அறிந்து நியாயமாக ஒழுக முயன்றால் ஒருவாறு உபத்திரவங்களை நீக்கிக் கொள்ளலாம். ஐரோப்பா—அமெரிக்கா நாடுகளின் எதிர்கால நலங்களில் சிரத்தை கொண்டு உழைக்கின்றவர்கள் மேற்சொன்ன விஷயங்களை முக்கியமாகக் கவனிக்கவேண்டியிருக்கிறது. எதிர்காலத்தில் இருண்டுவரும் போர் மேகங்களின் இளஞ் சாயல்கள் இப்பொழுதே தெரிகின்றன. இதுகாறும் அடங்கி யொடுங்கியிருந்த கீழை நாட்டு மக்களை இனிமேல் எந்த விதமாகக் கௌரவிக்கவேண்டும் என்பதை ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் அவ்வவ் நாட்டு மக்களுக்கு எடுத்துக் சொல்லவேண்டும். இதுகாறும் போதித்த வித்தைகளை விடப் புதிய முறையான வித்தைகளை மக்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். வரப்போகும் ஆபத்தை முதலிலேயே தெரிந்துகொள்வதால் எவ்வளவோ லாபம் உண்டு. அது பருத்துத் தலை தூக்குமுன் உணர்ந்து உபாயக்

தேடுவதால் ஒருவாறு தப்பித்துக்கொள்ளலாம். நியாயமான முறைகள்—நடவடிக்கைகள் அநுகூலமான நிலைமைகளை உண்டாக்கலாம். நாம் அவர்கட்குச் சமத்துவம் வழங்கி நமது அபிவிருத்திகளைப்போலவே அவர்களுடைய அபிவிருத்திகளையும் மனப்பூர்வமாய் நாடினால் பரஸ்பரம் அநுகூலமாய் வாழலாம். இன்றேல் ஆபத்துத் தலைக்குமேல் தொங்கிக்கொண்டிருக்கிறது என்பதை எல்லாரும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். கருப்புச் சாதியாரோடு போராடி வெற்றிபெறுவது அசாத்தியம். ஐரோப்பிய நாகரிகமும் அறிவும் சாமர்த்தியமும் எவ்வளவு வலிமைபடைத்திருந்தாலும் வரப்போகும் பெரிய கண்டத்துக்குத் தாக்குப் பிடிப்பது எளிதான காரியம் அன்று.

(“சித்திரகுப்த” என்னும் பத்திரிகையிலிருந்து “ரங்காராம்” மொழிபெயர்த்தது.)

---

“கருடகர்வபங்கம்” என்னும் தமிழ்ப் பேசும் படத்தில் ஒரு காட்சி.



# ஆரம்ப ஆசிரியர்களுக்கு மட்டும்

—(0)—

(எஸ். ஜி.)

பாவம்! ஊருக்கு இளைத்தவன்
................................................

என்ற பழமொழிக் கொப்ப இவர்தானு உமக்கு அகப்பட்டார் என்று என்னை நீங்கள் கோபிக்கலாம். நான் அன்னவர்களுக்கு தங்கள் வாழ்நாளை திறமையாய் நடத்த உதவியாகத்தான் இவ் வியாசம் எழுதுகிறேன் என்பதை நீங்கள் உணர்வீர்களானுல் உங்கள் கோபம் நிலைத்திருக்குமா? இராதல்லவா? டிரெயினிங் ஸ்கூலில் போதனு முறைக்கான வழிகளை மட்டுமே போதிக்கிருர்கள். இது மட்டும் போதிப்பது போதாது. ஆசிரியர்கள் கிராமத்தாருடனும், மேலதிகாரிகளிடமும் பழக வேண்டிய சில வழிகளையும், யுக்திகளையும் கற்பித்து அடியில் கண்ட மாதிரியில் கேள்விகள் கேட்டு பரீக்ஷை வைத்து அதில் தேறினுல் தான் நற்பெயர் எடுக்கக் கூடுமென்றும், மேற் கூறப்பட்ட பழமொழிக்காளாக மாட்டார்களென்றும் நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன்.

ஆரம்ப ஆசிரியர்கள் பரீக்ஷை.

(Teachers' Test.)

3-மணி] 1935-36- [கிராமசம்பந்தம்.

1. கிராமத்தார்களால் உமக்குள்ள நன்மை தீமைகளைப் பற்றி தெரிந்த வரையில் எழுதுக.

2. உம்மை வேறு ஊருக்கு மாற்றியிருக்கிருர்கள். அவ்வூரில் உமக்குத் தேவையான சௌகரியங்களைப் பெறுவதின் பொருட்டு நீர் எவ்வாறு நடந்து கொள்ளுவீர் என்பதை சம்பாஷணை மூலம் விவரிக்க.

3. ஓர் பையனை காயம் படும்படி அடித்துவிடுகிறீர். தகப்பன் சண்டைக்கு வந்தால் சமாதானப் படுத்துவது எப்படி?

4. கிராமவாசிகள் ஆசிரியரிடம் பிரீதி கொள்ளுமாறு எங்ஙனம்? சாத்தியப்படுமென்று உமக்குக் கிடைத்துள்ள அநுபவங்களைக் கொண்டு விளக்குக.

5 ஊர் இரண்டு கக்ஷிகளாய் பிரிந்து காணப்படும்போது நீர் எக்கக்ஷியை ஆதரிப்பீர்? ஏன்?

6. ஆதிதிராவிடர்களைப் பள்ளியில் சேர்த்துக் கொள்வது பற்றி கிராம வாசிகளுக்குள்ள அதிருப்தியை எவ்வாறு போக்குவீர்?

7. கிராம முன்னேற்றத்திற்காக நீர் செய்யக்கூடியவைகளை விபரமாக சுமார் 2 பக்கங்களுக்குக் குறையாமல் எழுதுக. (Education, Sanitation etc.,)

ஆரம்ப ஆசிரியர்கள் பரீக்ஷை

3 மணி] 1935-36 [ஆபீஸ் சம்பந்தம்
Official

1. உமக்கு கிடைக்கப் பெறும் அவ்வப்போதைய சர்குலர்களில் நீர் காணப் பெறும் (அ) உம்மை பயமுறுத்

தக் கூடிய கடின பதங்கள் யாவை? அவ்வாறு உபயோகிப்பது சரியா? ஏன்?

2. உமக்கு உம்முடைய நிர்வாகிகளால் ஏற்படக் கூடிய தொந்தரவுகள் (பாதகங்கள்) என்னென்ன? அவைகளை நிவர்த்திப்பது எப்படி?

3. (a) உம்முடைய உதவி உபாத்தியாயர் நோஞ்சென்று வருவாரானால் நீர் அவரை விரட்டும் விபரத்தை கேள்விகள் மூலம் விவரிக்க.

3. (b) தலைமை உபாத்தியாயர் நோஞ்சென்று வருவாரானால் உதவி உபாத்தியாயர் கேட்கப் பாத்தியதை உண்டா? உண்டானால் கேள்விகள் மூலம் விளக்குக.

4. அசிரத்தையின் காரணமாக ஸ்கூலை மூடி விடுகிறீர். காஷியல் லீவும் எடுக்க வில்லை. திடீரென்று இன்ஸ்பெக்டர் வந்து விடுகிறார். அப்போது நீர் அவருக்குக் கூறக் கூடிய யுக்தமான பதில் (நொண்டிச் சாக்கு) எதுவாகும்?

5. உம்முடைய அதிகாரிகள் யார், யார்? அவர்களை நீர் எவ்வெப்போது எவ்விதம் திருப்தி செய்விக்கக் கடமைப் பட்டவராவீர்; விபரமாக எழுதுக.

6. ஆதிதிராவிடர்கள் சேர்க்காதது பற்றி நீர் மேலதிகாரிகளுக்கு கூறக்கூடிய சமாதானங்களில் குறைந்தது இரண்டையாவது எழுதுக.

7. மேலதிகாரிகளிடமிருந்து உமக்கிடப்படும் ஸ்பெஷல் டியூடி (Special duty) என்னென்ன? அவைகளை நிறைவேற்றுவதில் உமக்குள்ள கஷ்டசுகங்களை விவரிக்க.

குறிப்பு:-மூன்றும் கேள்வியில் a. b. இரண்டில் ஒன்றுக்குப் பதில் அளித்தல் போதுமானது.

ரூபாய் 5-க்கு ஒருவர் எத்தனை விடைகளேனும் அனுப்பலாம். இவர்கள் ஒரே காகிதத்தில் கண்டுபிடித்த வார்த்தைகளைமட்டும் வரிசையாக எழுதினால் போதும்.

# ரொக்கப் பரிசு ரூ. 3000. (விடுபட்ட எழுத்துப் போட்டி—8)

முதற் பரிசு ரூ. 2000. 2-வது பரிசு ரூ. 1000. —:(முடிவு தேதி 26-3-36):—

| | | |
|---|---|---|
| 1. | நளி — | இலக்ஷிமி |
| 2. | — — — | திப்பிலி |
| 3. | த — | கிருபை |
| 4. | — — ம் | போன் |
| 5. | — ம் — | தாய் |

பிரவேசக் கட்டணம் அணு 8. M. O. ரசீதுடன் அல்லது போஸ்டல் ஆர்டரில் அனுப்பலாம். மானேஜர் தீர்ப்பே முடிவானது: ஸ்டாம்புகள் கூடா. இதன் முடிவு வெளியாகிற 1-5-36-ம் தேதி வஸந்த விகடன் ஒவ்வொரு வருக்கும் இனும். அனுப்பும் விடைகளுக்கு நகல் வைத்துக்கொள்க.

மானேஜர்:—G. R. சர்மா கம்பெனி, (கெ. 8. போட்டி) கான்பாளையம், மதுரை.



# வக்கீலின் சாமர்த்தியம்

("அசலம்.")

வீராவதியாற்றின் கரையிலுள்ள நாகாபுரத்தில் ஓர் பெரிய பூந்தோட்டம். அதன் மத்தியில் 'கோடிவிலாஸ் பங்களா' மிக அழகாகக் காணப்படுகிறது. வக்கீல் சாம்பசிவம் என்பவர் அதன் சொந்தக்காரர். வக்கில் தொழிலில் அதிக வரும்படி இல்லாவிட்டாலும் சாம்பசிவம் ஆடம்பரமாகச் செலவு செய்து வந்தார். தக்க ஆசாமிகள் கிடைத்து விட்டால் வறமரத்திலும் நார் உரித்து விடுகிற பேர்வழி என்பது பலர் அறிந்த விஷயம். வக்கீலின் மனைவி போட்டிருந்த நகைகள் சாதாரணமாக ஐயாயிரத்துக்கு மேல் போகும். குழந்தைகளோ கிடையாது. அவருடைய மாமனார் ஒரு ரிடயர்ட் டிப்டி கலெக்டர். தனது ஒரே மகள் மீது அவருக்கு அதிக வாஞ்சை. அவர் சொந்த ஊர் மதுரை.

பக்கத்துப் பங்களாவில் உள்ள எட்வர்ட் ஸ்மித் என்பவருக்கும், இவருக்கும் நெருங்கிய சிநேகம், இருவரும் முதலில்லாத வியாபாரிகள் தான். ஸ்மித் இரண்டு நாளைக்கொரு தடவை ஊரை விட்டுப் போய் விடுவார். வருவதற்கு ஓரிரண்டு நாட்கள் பிடிக்கும். போகும் பொழுது தன் வீட்டைக் கவனித்துக் கொள்ள வக்கீலிடம் சொல்லி விட்டுப் போவார். ஸ்மித் பங்களாவில் அவரையும், வேலைக்காரன் ஒருவனையும் தவிர வேறு யாரும் இல்லை. நாளாக ஆக இருவருக்கும் சிநேகம் அதிகமாயிற்று.

ஓர் நாள் சாம்பசிவத்திற்குத் தந்தியொன்று வந்தது. அதில் "உற்சவத்திற்குக் குடும்பத்துடன் புறப்பட்டு உடனே வரவும்" என்று, அவர் மாமா எழுதியிருந்தார்.

சாம்பசிவம் மிஸ்டர் ஸ்மித்திடம் வந்து 'நான் இன்று மதுரைக்குப் போக வேண்டும். என் மாமாவிடமிருந்து உற்சவத்திற்கு உடனே வரும்படி ஒயர் வந்திருக்கிறது. போனால் வர ஒரு மாதம் பிடிக்கும். நீங்களும் வந்தால் சரித்திரப் பிரசித்தி பெற்ற மதுரையைச் சுற்றிப் பார்த்து விட்டுச் சாவகாசமாக வரலாம்' என்றார்.

'நான் வருவதற்கில்லை. நாளைக்குத் திருவண்ணாமலை போக வேண்டும். என்னுடைய தங்கை அங்கே வருவாள். நான் அவசியம் போய்ச் சந்திக்க வேண்டும். மற்றொரு தடவை பார்த்துக் கொள்ளலாம். நீங்கள் இப்போது ரயிலிலா காரிலா போகிறீர்கள்?'—என்று கேட்டார் ஸ்மித்.

சாம்:—'மோட்டாரில் தான்'

ஸ்மித்:—'எந்த வழியாக?'

சாம்:—'பரங்கிமலை வழியாக'

ஸ்மித்:—'அப்படியானால் நன்றே சென்று நன்றே மீள்வீராக'—என்று ஆங்கிலத்தில் கூறி வழியனுப்பினர்.

'வந்தனம். நாங்கள் போய் வருகிறோம். வீட்டைப் பார்த்துக் கொள்ளுங்

கள்' என விடை பெற்றுக் கொண்டு சாம்பசிவம் போய் விட்டார்.

* * *

பாங்கிமலை ரோட்டில் சாம்பசிவத்தின் மோட்டார் புழுதியைக் கிளப்பிக் கொண்டு பறக்கிறது. அவரது மனைவி காரில் சாய்ந்திருந்தவள் அப்படியே தூங்கி விட்டாள். இரவு எட்டு மணிக்கு மரங்கள் நிறைந்த அந்தச் சாலையின் நடுவில் ஒரு மரக்கட்டை கிடப்பது அவருக்கு நன்றாகத் தெரிந்தது. அதை அப்புறப்படுத்த வேண்டும். அல்லது ரோட்டின் ஓரமாக மெதுவாகச் செல்ல வேண்டும். அதற்காகக் காரை நிறுத்தினார்.

அப்போது பக்கத்துப் புதரிலிருந்து ஓர் முகமூடி யணிந்த உருவம் காரை நோக்கி வந்தது. சாம்பசிவம் தனது கையிலிருந்த டார்ச் லைட்டை அதன் முகத்திற்கு நேராக அடித்தார். அந்த உருவம் ரிவால்வரை நீட்டிக் காண்பித்துப் பேசாமல் நிற்கும்படி சமிக்கை செய்தது.

சாம்பசிவத்தின் கால்கள் நடுக்கமுற்றன. நாவெழவில்லை. அந்த உருவம் பக்கத்தில் நெருங்கி டார்ச் லைட்டைப் பிடுங்கிக் கொண்டு 'ஓடிப்போ' என்று கழுத்தைப் பிடித்து ஓர் கல்தா கொடுத்தது. ஓடப் பார்த்த சாம்பசிவத்தின் மனதில் தன் மனைவியின் ஞாபகம் வந்துவிடவே, கால்கள் பின்னிக் கொண்டன. அந்த உருவம் காரில் ஏறிடது. கார் புறப்படும் சப்தம் கேட்டதும் அதன் பின்னால் இருந்த சட்டத்தின் மேல் தொத்திக் கொண்டார் வக்கீல். காரும் வந்த வழியே திரும்பிப் புறப்பட்டது. வக்கீலின் மனம் இந்தக் கேஸில் மோட்டாரின் சக்கரத்தைவிட வெகு வேகமாக வேலைசெய்து கொண்டே ஓடியது. அந்தச் சமயத்தில் அவருடைய உள்ளத்திலே பயம், கோபம் அவமானம் முதலிய மனோ எழுச்சிகள் மாறி மாறி உதித்து மறைந்து கொண்டிருந்தன.

அப்போது தான் கண் விழித்த வக்கீலின் மனைவிக்குக் கணவனைக் காணாததால் நடுக்க முண்டாயிற்று. கார் ஓடுகின்றது என்ற நினைப்புங் கூட இல்லாமல் கீழே இறங்கியோட யத்தனித்தாள். காரைச் செலுத்தி வந்த உருவம் நகைகளைக் கழற்றிக் கொடுக்கும்படி மிரட்டவே பேசாமல் எல்லாவற்றையும் எடுத்துக் கொடுத்து விட்டாள். பேதை மனம் என்ன பாடு பட்டிருக்குமோ!..........

தாரகா புரத்திற்கு ஒரு மைல் சமீப

மாக வந்ததும் கார் திடீரென்று நின்றது. சாம்பசிவம் சட்டெனக் குதித்துக் காருக் கடியில் புகுந்து கொண்டார். அந்த உருவம் காரை அங்கேயே விட்டு விட்டுச் டார்ச் லைட்டை எடுத்துக்கொண்டு பக்கத்துக் காட்டில் சென்று மறைந்தது.

அரை மணி நேரம் அப்படியே தரையோடு தரையாய்க் கிடந்தவர், பிறகு மெல்லத் தலை தப்பினதே தம்பிரான் புண்ணியம் என்று வெளியே வந்தார் வக்கீல். அப்போதும் அவர் நெஞ்சிற்குள் 'டக்கு ........டக்' என்ற சப்தம் நின்று நின்று அடித்தது. அடிக்கடி பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டார். பிறகு காரை எடுத்துக் கொண்டு வெகு வேகமாகப் புறப்பட்டார். சீட்டின்மீது கிடந்த ரிவால்வரைக் கையில் எடுத்துக் கொண்டார். 'பாவி, இதையாவது வைத்து விட்டுப் போனானே!........ஏதோ கெட்ட காலத்திலும் நமக்கு இது ஓர் நல்ல காலம் தான்' என்று தனக்குள் நினைத்துக் கொண்டார். வீட்டுக்கு முன் காரும் வந்து நின்றது. முகம் சோர்ந்து தேிறங்கினார் சாம்பசிவம்.

அப்போது தன் வீட்டிலிருந்து வெளியே வந்த ஸ்மித், வக்கீல் காரிலிருந்து இறங்கித் தனது மனைவியின் லகையைப் பிடித்து நடத்திக் கொண்டு போவதைப் பார்த்து, அங்கே வந்தார்.

'ஹலோ! நீங்கள் ஏன் திரும்பி விட்டீர்கள். அம்மாளுக்கு உடம்புக்கு என்ன?' என்று கேட்டார் ஸ்மித்.

'இல்லை. ஒரு அவசரமான வேலை இங்கு இருக்கிறது. நாளை போகலாம் என்று திரும்பி விட்டேன்'... என்று கூட்டமாகக் கூறி விட்டு உள்ளே சென்றார் வக்கீல்.

***

பிறருடைய பொருள்களைக் கொள்ளையடிப்பதே வழக்கமாகக் கொண்ட "காட்டுக் கொடியன்" என்ற கள்ளர் தலைவன் தன் வீட்டின் பின்புற அறையில் உட்கார்ந்து எதிரேயிருந்த ஆகாசப் பாலையும், கட்டுப் பாலைச் சரக்கையும் மாற்றி

மாற்றி ருசி பார்த்துக் கொண்டிருந்தான். கடந்த இருபத்தைந்து வருஷங்களாகப் போலீஸ்காரர்களால் இவனுடைய இருப்பிடத்தைக் கூடக் கண்டு பிடிக்க முடியவில்லை. மித மிஞ்சிக் குடித்தவன் வெறியால் அப்படியே தூங்கிவிட்டான். இது வரையில் காத்திருந்த ஓர் உருவம் சப்தம் செய்யாமல் மெதுவாகத் தோட்டத்துச் சுவற்றைக் கடந்துகொண்டு, வீட்டினுள் பிரவேசித்தது. பின்னுலிருக்கும் கதவைத் தாளிட்டு விட்டு உள்ளே நுழைந்தது. கால் சொராயிலிருந்து ஒரு சிறு பாட்டிலை எடுத்துக் கைக் குட்டையில் ஏதோ ஒன்றைச் சாய்த்த பின், அந்தத் துணியைக் கொண்டு பிணம் போல் கிடக்கும் அவன் முகத்தை மூடியது.

பிறகு முன்புறமாகப் பணப் பெட்டி இருக்கும் அறையில் நுழைந்தது. மெதுவாகப் பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே வந்து நாற்புறமும் ஒரு தடவை தலையைத் திரும்பிப் பார்த்து விட்டுப் பின் புறமாகச் சென்றது. பெட்டியைக் கீழே வைத்து விட்டுக் கதவைத் திறக்கும் போது பக்கத்து அறையிலிருந்து மற்றொரு உருவம் வந்து சேர்ந்தது.

'என்னை ஏமாத்திப் புட்டு நீ ஒருத்தனே தட்டிக்கினு போகப் பாக்கறே'— என்றது அவ் வுருவம்.

'என்னடா நமக்குப் பங்காளியாக எவனோ ஒருவன் முளைத்து விட்டான் போலிருக்கிறது' என்பதாக நினைத்துக் கொண்டு முதல் உருவம் 'உஸ்............சப்தம்...............இடத்தை அறிந்து பேசு'— என்று மெதுவாகச் சொல்லிற்று.

இருவருக்கும் மனதில் விசனம் தான். ஒருவனுகவே அடித்துக் கொண்டால் எத்தனை ஆயிரம் பவுன்கள்! இப்போது இரு பாக மாக்க வேண்டும்!!

தோட்டத்திற்கு வெளியே சென்று ஆற்றோரத்தில் மரங்கள் அடர்ந்த தோப்பினுள் பிரவேசித்தார்கள். இருவருள்ளத்திலும் பேய்க் குதி தாண்டவமாடிற்று. ஒரு சிறு சப்தமும் அவர்களுக்கு அந்நேரவில் கலக்கத்தைக் கொடுத்தது. சுமார் ஒரு மைல் சென்றனர்.

அதிக இருட்டாக இருந்ததால் ஒரு உருவம் கையிலிருந்த டார்ச் லைட்டைக் கொஞ்சம் அமுக்கியது. அந்த ஒளியில் ஒருவருடைய முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டனர்.

'என்ன ஆச்சரியம், நீங்களா!—' என்றுர் சாம்பசிவம்.

'பேசுவதற்கு நேரம் இதல்ல' எனக் கூறி ஸ்மித், லைட்டை அமித்து விட்டார். சாம்பசிவத்தின் நந்தவனத்திற்குள் சென்றனர்.

'சரி, இப்பொழுதே உங்களுக்குச் சேர வேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள்' என்றுர் ஸ்மித்.

பெட்டியைக் கீழே வைத்தனர். இருவருள்ளத்திலும் ஆனந்தக் கூத்தாடிற்று.

'காட்டுக் கொடியனிடமே கொள்ளையடித்து விட்டோம் அல்லவா!' என்று ஆச்சரியத்துடன் கூறினுர் ஸ்மித்.

"கெட்டவன் சம்பாதித்தால் நல்லவன் அனுபவிக்க வேண்டியது தானே தற்கால நடப்பாயிருக்கின்றது. சரி....... நீங்கள் அந்த ஐயாயிரத்தையும்..............." என்றுர் சாம்பசிவம். இப்போது அவருடைய கை பாக்கட்டிலிருந்த ரிவால்வரிடம் சென்றது.

சிரித்துக் கொண்டே 'பலே கைகாரர் உங்களுக்கு எத்தனை வருஷ அனுபவம்!' என்றுர் ஸ்மித்.

# பாழ் வீட்டுப் பிசாசு

(எஸ். முத்துசுவாமி.)

"ஆம், நான்கு நாட்களாகக் கேட்குங் குரலேதான் இது: இதில கொஞ்சமும் சந்தேகமேயில்லை. ஆனால் இக்குரல் முன்னெல்லாம் கேட்டதைவிடத் தணிந்து சத்தம் கொஞ்சங் குறைவாகவுள்ளது. இன்று காலை கூடப் பச்சை இந்த வீட்டில் ஓர் பிசாசு இருந்துக்கொண்டு இங்கு வருபவர்களை இம்மாதிரி ஏமாற்றிக் கொன்று விடும் என்ற சொன்னானே. ஒருவேளை அது நிஜமாக........சே, பேயாவது, பிசாசாவது அதெல்லாம் பொய். ஆனால் இது ஓர் பெண்ணின் குரல் போலல்லவோ இருக்கிறது! இவளுக்கு என்ன கஷ்டமோ? இவள்படும் கஷ்டத்தினின்று இப்பெண்ணை நாம் விடுவித்து விட்டால்........? நான் ஓர் ஆண்மகனல்லவோ! எனக்கு என்ன பயம்!" என்று தனக்குள் யோசித்துக்கொண்டே தன் மீசையின்மேல், அதாவது மீசை இருக்கவேண்டிய இடத்தில் கையை வைத்துவிட்டான். அழகப்பன், இவன் இச்சமயம் அந்தலூர் நாடகக் கொட்டகைக்குச் சென்றுவிட்டு ஓர் சிறிய பாழ் வீட்டினருகில் வந்துகொண்டு இருந்தான். இந்த இடிந்த வீட்டிலும் மெத்தையுண்டு. இந்தவீடு ஊருக்கு அப்பால் இருந்தது. இதில் பிசாசு இருந்து கொண்டு குறும்பு செய்கிறதென்று கருதி யாவரும் இவ்வீட்டின் வழியாகச் செல்லார்.

அழகப்பன் தன் பெயருக்கேற்ற மார்க்கட சாமுத்ரிகாலக்ஷணங்களுடனும், சுமாராக ஆங்கிலம் கற்றவனுமாவான். இவனது மாமன் தான் இவனுக்கு இந்தப் பிரம்மாண்டமான உலகில் ஒரேஒரு உறவினன். இவனுக்குப் பாவம், பெண்ணோ இல்லை; இது போதாதென்று பிள்ளைகளுமில்லை. ஆதலால், மாமனது இறப்புக்குப் பின், அவனுக்கு பத்னியின்மையால், அவனது ஏராளமான பூஸ்திதியாவும் நம் அழகப்பனையே சாரும். நம் அழகப்பன் எப்போதும் எங்காவது திரிந்துகொண்டே இருப்பான்.

அப்போது மணி இரவு 3-0 இருக்கும். மேற் கூறியவாறு அழகப்பன் தீர்மானித்துக்கொண்டு வீட்டின் உள்ளே நுழைந்தான். ஒரே காரிருளில், அழ

குரல் மேத்தையினின்று வருதலை யறிந்து மெத்தையில் ஏறினான். படிகள் மரத்தினாலாகி யிருந்தன. ஆதலால், அவைகள் 'கிரீச்' 'கிரீச்' என்று சப்தம் செய்தன. அந்த நிசப்தத்தில் இச்சிறு சத்தம் பயங்கரமாக இருந்தது. வௌவால்கள் அனேகம் வெளியே ஓடிவந்ததன்பின் யாரோ வருவதுபோல் தோன்றியதால் பின்னால் திரும்பினான்; ஆனால் ஒருவரும் இல்லை. மெத்தைக்கு வந்தான். அங்கு ஓர் ஹாலில் ஒரு மக்கலான விளக்கு இருந்தது. அதன் இருண்ட வெளிச்சத்தால் ஓர் மூலையில் சுமார் 18 வயதுள்ள ஓர் அழகான இளம் பெண் கயிற்றால் இறுகப் பிணிக்கப்பட்டு துவண்டு கிடத்தலைக் கண்டதும் அவன் நாவில் ஜலம் ஊற்றிற்று. உடனே அவளைக் கட்டவிழ்த்துத் தூக்கிக் கொண்டு மெத்தைப் படி ஒரு படி இறங்கி யிருப்பான். "அடேய், நில்" என்ற ஓர் மிருகக் குரல் இவனைத் திடுக்கிடச் செய்தது. பின்னாலே பார்த்த பெண் அலறிக்கொண்டு மூர்ச்சையானாள். ஏனெனில் அங்கு 'கிங் காங்' மாதிரி (King Kong) ஓர் பயங்கர உருவம் நின்றுகொண்டிருந்தது. அழகப்பனுக்கு உடல் முழுதும் வியர்வை 'குப்'பெனப் பொங்கி வழிந்தது. "அடேய், உனக்கு அவளைத் தூக்கிச் செல்ல அவ்வளவு தைரியமா? உன்னிடத்திலுள்ளதை யெல்லாம் கீழே வை. நீ போகலாம்" என்றது அந்த உருவம். இதோடு விட்டது என்று நினைத்துத் தன் சட்டையைக் கழற்றி அதனிடம் கொடுத்தான். "உன் வேஷ்டி?" என்றது அந்த உருவம். அவன் பல்லை இளித்துக்கொண்டு கெஞ்சவே அவளைத் தூக்கிக்கொண்டு செல்ல அனுமதி கொடுத்தது. வெளியில் வந்தவுடன் குளிர்ந்த காற்று 'ஜில்' லென்று இவன்மேல் வீசினது இவனுக்கு வெகு ஆனந்தமாக இருந்தது.

ஓர் குட்டையினருகில் அப்பெண்ணை மூர்ச்சை தெளிவித்தபோது, "ஐயோ, பிசாசு, பயம்...." என்று அலறிக் கொண்டு அவனை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் அந்த அழகான பெண் அழகப்பன் அவளைத் தூக்கிக்கொண்டு ஓர் சத்திரத்திற்குச் சென்று, அப்போது அங்கு தயாராகிக்கொண்டு இருந்த பலகாரங்களில் (அப்போது 4 மணியானதால் அங்கு இவை தயாராகிக்கொண்டு இருந்தன) சில இவளுக்கு அளித்து உண்ணச் செய்தபின்னர், "அம்மா, பெண்ணே, நீ யார்? நீ அந்தப் பாழ் வீட்டிற்கு எவ்வாறு ஏன் வந்தாய்?" எனக் கேட்டனே. அந்தப்பெண் அவன்மீது சாய்ந்துகொண்டே, "ஐயோ, முதன் முதலில் என்னை அந்த பயங்கர உருவத்தினின்று காப்பாற்றியதற்காக உமக்கு நான் வந்தனஞ் செய்யக் கடமைப் பட்டுள்ளேன். என் இளமையில் என் பெற்றோர் விண்ணுல கேகினர். நான் ஒருத்திதான் அவர்களுக்கு காலங் கழித்துப் பிறந்தேன். எனக்குச் சொத்து ஒன்றும் வைக்கவில்லை. எப்படியோ பிச்சை எடுத்து இத்துணை நாட்களாகப் பிழைத்துவந்தேன். ஐந்து நாட்களுக்கு முன் நான் இவ் வீட்டின் வழியாக வந்துகொண்டிருந்தபொழுது இந்த உருவம் என்னை பிடித்துக் கயிற்றால் பிணித்து ஐந்து நாட்களாக அன்ன ஆகாரமின்றி என்னை அந்த மூலையில் கிடத்தியது. நான் கத்திக் கத்தி எனக்கு இப்போது பேசுவது கூட கஷ்டமாயுள்ளது" என்று முடித்தாள்.

"பெண்ணே, உன் பெயர் என்ன?"

"என் பெயர் வசந்தா; என்னைத் தின்னத்தான் அந்த உருவம்........"

"வசந்தா, போதும்; இன்று உனக்குச் சத்திரத்து எசமான் சோறு போடுவான். நாளை இரவு நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

அன்று இரவு வரும்போது ஓர் பட்டுச் சேலை கொண்டுவந்து அவளை உடுத்திக்கொள்ளச் செய்து ஓர் நெருங்கிய அடர்த்தியான தோப்பிற்குள் சென்றனர். இவ்வாறு ஒரு வாரமானபின் ஒருநாள், வசந்தா, "இன்பரே, எனக்கு நகைகளுக்காக நாளை 100 ரூபாய் கொண்டு வருவீர்களா; நாளையே நாம் சென்னைக்குச்சென்று அக்காரியத்தை முடித்துக்கொள்ளலாம்" என்று சொல்லி அவனைக் கட்டிக்

கொண்டாள். அழகப்பன் உளங்குளிர்ந்து, "ஐந்நூறு கொண்டு வருகிறேன்" என்று சொல்லி அவள் மீது ஒரு முத்தம் 'எறிந்து' விட்டுச்சென்றான்.

மறுநாள் அந்த தோப்பிற்குள் இருவருஞ் சென்று, அழகப்பன் அவளிடம் பணத்தைக் கொடுக்குஞ்சமயம் எங்கிருந்

தோ ஓர் ஆந்தை கூவியது. வசந்தாவை ஏழெட்டு உருவங்களும், அழகப்பனை ஏழெட்டு உருவங்களும் எங்கிருந்தோ குதித்து, சூழ்ந்து தூக்கிக்கொண்டு எங்கோ தோப்பிற்குள்ளேயே மறைந்தன.

* * *

"மிஸ்டர் அழகு, நீங்கள் செய்த காரியம் ரொம்ப அழகு. எது எப்படியானாலுஞ் சரி; உமக்கு நான் வந்தனஞ் செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏனெனில், நீர்தான் இத்தனை நாட்களாக மறைந்து சேஷ்டை செய்து கொண்டிருந்த பிசாசைப் பிடிக்க எனக்கு ஒத்தாசை செய்தீர்கள்" என்ற குரல் இவன் கண் விழித்த போது இவன் காதில் கேட்டது.

"ஹல்லோ, சிங்கம், நீங்களா ஏதோ உளறினீர்கள்? என்ன விசேஷம்?" என்றான் அழகப்பன் தன் எதிரேயிருந்த மனிதனை நோக்கி.

"ரொம்ப அழகு, நான் உளறினதும் உளறுவதும் இன்னும் சற்று நேரத்தில் தெரியும். வாய் திறக்காமல் இருக்க வேண்டியதுதான் உம்வேலை" என்று கூறி அந்த மனிதர் வாயினால் 'சிட்டி' யடித்தார்.

உடனே ஓர் மனிதன் வர, அவன் காதில் ஏதோ சொன்னார். அவன் சென்று ஐந்து நிமிடங்கள்வரை இவர் செய்கையைக் கண்டு சிரித்துக் கொண்டு இருந்த அழகப்பன் திடீரென எங்கேயோ பெரும் திகிலுடன் உற்று நோக்கிக்கொண்டு இருந்தான். அவன் கண்டது, இரு போலீஸ் வீரர்களால் தொடரப் பெற்ற இவன் பாழ் வீட்டிற் கண்ட உருவமும் வசந்தாவும் ஆகும். திடீரென அந்த உருவத்தின் மீதிருந்த ரோமங்கள் கீழே விழுந்தன. அதே சமயம் வசந்தா அழகப்பனை நோக்கி 'ஆ' வெனப் பாய்ந்தாள். ஆனால் கதவு மூடப்பட்டது.

"அழகு, இவைகளைக் கண்டு நீ ஆச்சர்யப் படவேண்டாம். ஏனெனில் பிசாசு என்று நடித்தது வீரபாகு. அது யார் என்று உனக்குத்தான் தெரியுமே. அந்தக் கள்வனது பெண்ணே இந்த வசந்தா என்று நடித்தவள். உன்னிடம் நடித்ததுபோல் இன்னும் எத்தனையோ பேரிடம் நடித்து பணத்தை இம்மாதிரிப் பிடுங்கிக் கொன்றும் விடுவார்கள்."

"அது நம்பத் தகுந்தது அன்று. அவள் என்னை எவ்வளவு நன்றாகக் காதலித்தாள். உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் சொன்னதை யெல்லாம் எவ்வாறு நீர் அறிந்தீர்?"

"அப்படிக்கேளு அழகு, அப்படிக் கேளு. இந்த ஊரில் நெடுநாளாக இந்த அனியாயம் நடந்து வருவதை நான் அறிவேன். சில பிணங்களைச் சோதித்ததில் அவை விஷத்தால் மாண்டன என்றும் நான் அறிந்தேன் ஆதலால், இவ்வனியாயங்களைக் கண் கூடாகவே காணவெண்ணி நாடகத்துக்கு சென்றுவிட்டு அவ்வீட்டு வழியாக வந்தபோது அங்கு ஓர் மனிதன் நின்றுகொண்டு இருந்ததைக் கண்டவுடன் அவன் மூலமாகவே என் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வெண்ணினேன். மெல்ல அவன் என்ன செய்கிறான் என்று கவனித்தேன். அவன் சிறிது நேரம் ஏதோ யோசித்தவன் போல இருந்து இருந்துவிட்டும் பின் சென்று விட்டான்.

நான் அவனையே பின்தொடர்ந்து அவன் யார் என்று கவனித்ததில் அது அழகு— நீதான் இது மாதிரியே அம்மனிதன், அதாவது நீ. நான்கு நாட்களாகப் பார்த்து நின்றுவிட்டுப் போய்க்கொண்டு இருந்தேன். ஐந்தாவது நாள் நீ உள்ளே சென்றுவிட்டாய். நானும் உன் பின்னாலேயே சென்றேன். நீ திரும்பிப் பார்த்தபோது நான் ஒளிந்துகொண்டேன். நீ மேலே சென்றதும் அழுகுரல் நின்றுவிட்டது. சிறிதுநேரம் பொறுத்து, 'அடேய் நில்' என்ற முரட்டுச் சத்தம் வந்தது. பிறகு, நீ சென்று அவளை மூர்ச்சை தெளிவித்தது; சத்திரத்திற்குச் சென்றது; இவையும் எனக்குத் தெரியும், இன்னொன்று; நீ அவளை விட்டுச் சென்றபின் அவள் பாழ் வீட்டிற்கே சென்றாள். மாலையில் அங்கு வந்து எஜமானுக்கு இருபது ரூபாய் கொடுத்து இதை (இவள் வெளிச்சென்றதை) வெளியிடாது கட்டளையிட்டாள். பாழ்வீட்டில் அவர்கள் பேசிக்கொண்டது இது: உன்னை யவள் காதலிப்பதுபோல் உன்னிடம் எவ்வளவு வாங்கமுடியுமோ அவ்வளவு பணம் கறந்துகொண்டு, உனக்கு அன்போடு பால் கொடுப்பது போல் அதில் விஷம் வைத்துக் கொன்றுவிடுவது: நான் இதைப் போலீசாருக்கு அறிவித்து, "இப்போது அவர்களைப் பிடிக்காது பின் நல்ல சமயத்தில் பிடித்துக் கொள்ளலாம்" என்றேன். நீ யவளுக்கு 500 ரூபாய் கொடுப்பதை யறிந்து உங்களைப் பிடித்துக்கொண்டோம். நான் ஆந்தைமாதிரி கூவிய அதே சமயம் அந்தப் பாழ் வீட்டில் இருந்த உருவமும் கைது செய்யப்பட்டது: அந்தப் பாழ் வீட்டில் கள்ள அறைகளில் இதுவரை காணாமற்போன ஆபரணங்களும் கொள்ளையடித்த பணங்களும் இருந்தன. ஆபரணங்களை யதனதன் சொந்தக்காரர்களிடத்தில் ஒப்புவித்து அநுமத்தான பணத்தை ஏழைகளுக்கு அளிப்பேன். இது யாவும் உன் மாமனுக்கு தெரியாது. யாரும் சொல்லமாட்டார்கள்" என்று துப்பறியும் சிங்கம் முடித்தவுடனே, அழகப்பன் விழித்துக்கொண்டே ஆனந்தமாக அவனை ஆலிங்கனஞ் செய்துகொண்டு, "நீங்கள் தப்புவித்த 500 ரூபாய் உமக்கே சொந்தம். நீர் என் மாமனிடத்தில் இதைச் சொல்லாது இருந்தது, மிகவும் மெச்சத் தக்கது. உமக்கு ரொம்ப வந்தனம்" என்றான்.

---

# வல்லப கணபதி ரக்ஷை.

இந்த கணபதிரக்ஷை ஆதிசைவ குருக்களால் ஆகம சாஸ்த்ரோக்தமாய் ஷட்கோண யந்திரத்தில் மஹா பீஜங்கள் அடக்கி மூலமந்திர ஜபதப ஹோமாக்னி முதலானதுகளும் செய்து கணபதி அநுக்ரஹத்தினால் வெளியிடப்பட்டது. இதன் மகிமை புத்ரசந்தானம், வ்யாபாரம், உத்யோகம் அதிகரிக்கும். சத்ருக்கள் பாத நிவாரணை, வ்யாதி நிவாரணை, வ்யவஹார விஷயங்கள் அநுகூலம். கர்ப்பஸ்திரீ கட்டிக்கொண்டால் சுகப்ரஸவம் உண்டாகும். நாம் எந்த காரியத்தை உத்தேசித்து இதை வரவழைத்தோமோ அந்த காரியம் உடனே ஜயம். நம்பினவர்கள் இதன் பலனை அடையலாம். இதன் விலை ரு. 1. வி. பி. சார்ஜ் அணா 5. வெளிநாட்டுக்கு தபால் சார்ஜ் ப்ரத்தியேகம்.

ஸ்பெஷல் ரக்ஷை தயார் செய்து அவரவர்கள் நாம நக்ஷத்திரம் கடித மூலம் தெரிவித்தால் அதற்கு வேண்டிய உபகரணங்கள் தயார் செய்து அனுப்ப ரு. 10—0—0

**ம-ா-ா-ஸ்ரீ T, சுப்பிரமணிய குருக்கள்,**

தேவஸ்தானம்-ஸ்தானீகம், திருத்தணி போஸ்டு, சித்தூர் ஜில்லா.

# விஜய குமாரரின் வெற்றி

—:(0):—

('வசீகரன்.')

1

"பத்மா! பத்மா!!" என்று அழைத்துக்கொண்டே உள்ளே நுழைந்தார் விஜயகுமாரர்.

நிலைக்கண்ணாடியின் முன் நின்று தன்னுடைகளைச் சீர்திருத்தி தன்னியற்கை அழகை செயற்கை அழகினால் பிரகாசிக்கச் செய்ய முயற்சித்துக் கொண்டிருந்த பத்மாவதி தனது கணவர் தன்னை அழைத்ததைக் கேட்டதும் தன்னுடைய முயற்சியைக் கைவிட்டு விட்டு அப்படியே சப்தம் வந்த அறையை நோக்கி பரபரப்புடன் விரைந்து சென்றாள். பத்மாவதியின் வரவையே ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த விஜயகுமாரர் அச்சில வினாடிநேரங்களைக்கூடப் பொறுக்க முடியாதவராய் பத்மாவதியின் அறையை நோக்கி விரைந்து சென்றார். இருவரும் இடையிலேயே சந்தித்தனர்.

விஜயகுமாரர் பத்மாவதியைத் தூக்கி அவளதரங்களில் ஆயிரக்கணக்கான முத்தங்களை யிட்டு "என் அன்பே! உன்னை எனது காதலியாக அடைவதற்கு நான் என்ன தவத்தை நோற்றேனோ! கண்ணே, உனது ஒப்பற்ற முயற்சியினாலும், தவப்பயனாலுமே நான் இந்நகர் முனிசிபல் அங்கத்தினராக ஆனேன். என் இன்பப் பொக்கிஷமே! நீ இல்லாவிட்டால் நான் நிச்சயம் முனிசிபல்தேர்தலில் படுதோல்வியடைந்திருப்பேனென்பது திண்ணம்................" என்று மேலும் மேலும் தொடர்ந்து கூறிக்கொண்டே போனார்.

தன் கணவனுடைய பேரானந்தமொன்றில் ஈடுபட்டிருந்த பத்மாவதி அவருடைய அணைப்பிலிருந்து விடுபட விரும்பாதவளாய் அவரை நோக்கி புன்முறுவலுடன் "பிராண நேசரே! இந்த உபசார வார்த்தைகள் சொல்லுவதற்குத்தானா என்னை இவ்வளவு விரைவாக அழைத்தீர்கள்? அப்படியானால் என்னை விட்டுவிடுங்கள். நான் போகிறேன்" என்று கோகிலத் தொனியில் கொஞ்சுதலாகக் கூறினாள்.

"இல்லை. இல்லை. அதற்காகமட்டும் அல்ல. இன்னொரு பெரிய காரியமும் உன்னால் ஆகவேண்டியிருக்கிறது. அதற்காகவே உன்னை அழைத்தேன்" என்றார் விஜயகுமாரர்.

"இந்த இன்ப சாகரத்தில் என்னை ஆழ்த்திவிடுவதற்காக என்று சொல்லுகிறீர்கள் போலும்" என்று சிறிது லஜ்ஜையுடன் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டு புகன்றாள் பத்மாவதி.

"ஆம். அத்துடன் இன்னொரு விஷயமும் உன்னிடம் சொல்லவேண்டியிருக்கிறது. அந்த விஷயத்தில் நீ சிரத்தை காட்டுவாயானால் நிச்சயம் வெற்றி என்னுடையதே" என்றார் விஜயகுமாரர்.

"நாதா! அது என்ன விஷயம்? நான் அறியலாகுமா?" என்று கிள்ளைபோல் வினவினாள் பத்மாவதி.

"பத்மா! நான் இப்போது நமது நகர் முனிசிபாலிட்டியில் வெறும் அங்கத்தினராக இருந்து வருகிறேன். அடுத்த பதினைந்தாம் நாள் எங்கள் முனிசிபாலிட்

டிக்குத் தலைவர் தேர்தல் நடக்கிறது. நான் தலைவர் பதவிக்கு இந் நகரில் பிரபல பணக்காரரும், பொதுஜன ஊழியருமான பொன்னுரங்க முதலியாருடன் போட்டி போடுகிறேன். பிரிய பத்மா! நான் மட்டும் இதில் வெற்றி பெற்றுவிட்டால் எனக்கு இணை ஒருவருமில்லை. மந்திரிமார்களும், கவர்னர்களும் எனக்குச் சிநேகிதமாகி விடுவார்கள். பெரிய பெரிய மனிதர்களெல்லாம் என்னுடைய தயவை நாடுவார்கள். எனது புகழ் ஓங்கும்; கீர்த்தி பெருகும்; கௌரவம் மிகும்" என்றார் விஜயகுமாரர்.

"ஆண்டவனருளால் அதிலும் தங்களுக்கே வெற்றி கிடைக்கும். அஞ்சவேண்டாம்" என்றாள் பத்மாவதி.

"பத்மா! வெறும் பிரார்த்தனையுடன் நின்றுவிட்டால் இதில் வெற்றி கிடைக்காது. அதோ அந்த மேஜையின்மீது அங்கத்தினர்கள் ஜாபிதா வைத்திருக்கிறேன். நீ அந்த ஜாபிதாவின்படி ஒவ்வொரு அங்கத்தினரையும் சந்தித்து எனக்கு ஓட்டுக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளவேண்டும்" என்றார் விஜயகுமாரர்.

பத்மா சில நிமிஷங்கள் சிந்தனை செய்தாள். அவளுடைய உள்ளம் இதைக் கேட்டதும் திடுக்கிட்டது. ஆயினும் அதைரியப்படாது, "நாதா! நான் பேதைப்பெண். இந்த பெரிய பொறுப்பை என்னால் நிர்வகிக்க முடியாது என்று நினைக்கிறேன். ஆடவர்களாகிய அங்கத்தினர்களிடம் நான் எவ்வாறு நாணமின்றி தனித்துப்பேசி தங்களுக்கு வோட்டுச் செய்யச் சொல்லுவேன்? நாதா! தங்கள் கட்டளையை மறுப்பதற்காக என்னை மன்னிக்க வேண்டும். பெண்களுக்கு இயற்கையாயமைந்த நாணம் என்ற குணம் இந்த விஷயத்தில் என்முன் குதிக்கிறதே, நான் என் செய்வேன்?" என்று பரிதாபகரமாய் கூறி பெருமூச்சு விட்டாள்.

விஜயகுமாரர் பத்மாவதியை இறுகத் தழுவி "பிரிய பத்மா! படித்த பெண்ணாகிய நீயே இவ்வாறு தயங்குவது எனக்கு வியப்பாயிருக்கிறது. மேனாடுகளிலும், வட நாட்டிலும் பெண்கள் தங்கள் தங்கள் கணவன்மார்களின் வெற்றிக்காக எவ்வளவுதூரம் பாடு படுகிறார்களென்பதை நீ பத்திரிகைகள் மூலம் படித்திருக்கலாம். அவர்கள் தங்கள் கணவர்களின் வெற்றிக்காக அல்லும் பகலும் அகவாதமும் பாடுபடுகிறார்கள். இவைகளையெல்லாம் நன்கு அறிந்த என் கண்மணியாகிய நீ இதில் தயங்குவது ஏனோ! என்மீது உனக்கு அன்பில்லையா பத்மா? என்னுடைய வெற்றியும் மகிழ்ச்சியும் உன்னுடையதல்லவா!" என்றார் விஜயகுமாரர்.

பத்மாவதி குறுநகை செய்தாள். "காதலரே! தங்கள் சித்தம், எனது பாக்யம். தங்கள் பிரியப்படியே நான் நடக்கத் தயார். தங்கள்பொருட்டு எனது உயிரைக் கொடுக்கவும் நான் சிறிதும் தயங்கேன். யான் ஒரு பேதைப்பெண் என்ற காரணத்தினாலேயே சிறிது யோசனை செய்தேன். ஆனால் இனி தங்கள் அவாவின்படியே முனிசிபல் அங்கத்தினர்களைக் கண்டுபேசி அவர்கள் ஓட்டுகளைத் தங்களுக்கே செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறேன். எனது முன்னைய முட்டாள்தன

மான பதிலுக்காக என்னை க்ஷமிக்கவேண்டும்" என்றாள்.

விஜயகுமாரர் பத்மாவதியின் பதிலால் அளவற்ற மகிழ்ச்சியடைந்தார். அதன் விளைவு அவருடைய ரோஜா மலரை நிகர்த்த கன்னங்கள் சிவந்தன. "என் கருத்திற் கிசைந்த கண்ணே! சென்றுவா. உனக்குத் துணையாக வேலைக்காரியை அழைத்துச்செல்" என்று புகன்றார் விஜயகுமாரர்.

பத்மாவதியின் கைக்குழந்தை தொட்டிலிலிருந்து அழும் சப்தம் கேட்கவே அவள் விஜயகுமாரரிடமிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு குழந்தையை நோக்கி விரைந்து சென்றாள்.

விஜயகுமாரர் தனக்கு சேர்மன்பதவி கிடைப்பதற்கு என்னென்ன முயற்சிகள் செய்யவேண்டு மென்பதைப்பற்றி மனதிற்குள்ளேயே எண்ணமிடலானார்.

## 2

அடுத்த நாள் காலை ஆறுமணி யிருக்கும். பத்மாவதியின் ஓட்டுச் சேர்க்கும் ஏஜண்டு வேலையைக் கண்டுகளிக்க விரும்பியவன் போன்று ஆதவன் தன் பொன்னிறக் கிரணங்களைப் பரப்பிக்கொண்டு கீழ்திசையில் தோன்றினான். பத்மா தன் நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு தன்னுடைய வேலைக்காரியுடன் ஜட்கா வண்டியில் ஏறி வண்டியை நேரே ஒன்றாவது வார்டு மெம்பர் ஷண்முக முதலியார் வீட்டைநோக்கி விடச் சொன்னாள். வண்டியும் சில வினாடிகளில் ஷண்முக முதலியார் வீட்டினெதிரில் வந்து நின்றது. பத்மா வண்டியை விட்டிறங்கி கதவைத் தட்டி "ஷண்முக முதலியார் இருக்கிறாரா?" என்று வினவினாள். அடுத்த நிமிஷம் தடித்த பூதம்போன்ற மனிதர் ஒருவர் வந்து கதவைத்திறந்து, "நீ யார்? எதற்காக என்னைப்பார்க்க விரும்புகிறாய்?" என்று உசாவினர். பத்மா அவருக்கு வந்தனமளித்து தான் அங்குவந்த காரணத்தைச்சொல்லி அவருடைய வோட்டுரிமையை விஜயகுமாரருக்கே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டாள். அவர் சிறிதநேரம் மௌனமா யிருந்துவிட்டு யோசனைசெய்து பதிலளிப்பதாய் கூறினார். ஆதலால் பத்மாவதி அடுத்த வார்டு மெம்பரைச் சந்திக்க எண்ணி அவருடைய பெயரையும் விலாசத்தையும் பார்த்தாள். அவர் பெயர் உஸ்மான்சாகிபு, சாவண முதலியார் வீதி யென்றும் குறிப்பிடப் பட்டிருந்தது. பத்மா வண்டியை அந்த விலாசத்திற்கு ஓட்டச் சொல்லிவிட்டு யோசனையில் ஆழ்ந்தாள்.

வண்டியும் விரைவில் சாவண முதலியார் வீதி வந்து சேர்ந்தது. பத்மாவதி வண்டியை விட்டிறங்கி அந்த வீதியின் இருபத்தேழாம் நம்பர் வீட்டையடைந்து "உஸ்மான் சாகிபு இருக்கிறாரா?" என்று வினவினாள். அடுத்த கணம் "என்னம்மா! என்னை எதற்காகத் தேடுகிறீர்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்? நீங்கள் யார்?" என்று மூச்சுவிடாமல் வினவிக்கொண்டே பத்மாவதியின் முன் தோன்றினார் ஒரு தாடிவாலா.

பத்மா தான் அவரைத் தேடிவந்த காரணத்தை விரித்துக் கூறி அவருடைய ஓட்டைத் தனது கணவரும், பொதுஜன ஊழியருமான விஜயகுமாரருக்கே கொடுக்கவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொண்டாள்.

அவர் சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு "அம்மா! தங்க ளிஷ்டப்படி விஜய குமாரருக்கே ஓட்டுப் போடுவதில் தடையில்லை. ஆனால் தங்கள் கணவருக்கெதிராக நிற்கும் பொன்னுரங்க முதலியார் தனக்கு ஓட்டுச் செய்தால் ஐயாயிரம் ரூபாய் எனக்கு இனாமாக அளிப்பதாகக் கூறியிருக்கிறார். அவருடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நானும் அவருக்கே ஓட்டுக் கொடுப்பதாய் வாக்களித்துவிட்டேன். ஆகவே தங்கள் நாயகருக்கு ஓட்டுச் செய்ய முடியாததற்கு வருந்துகிறேன். ஆனால் ஒன்று செய்வதாயிருந்தால் உங்கள் கணவருக்கு ஓட்டுச் செய்வதில் தடையில்லை..........." என்றார்.

"என்ன !" என்று ஆவலோடு கேட்டாள் பத்மா.

"அந்த ஐயாயிரத்திற்கு மேற்பட்டு ஏதேனும் தொகை யளிப்பதாயிருந்தால் ............" என்று நீட்டிப் பேசினர் உஸ்மான் சாஹிப்.

பத்மாவதி அவருக்கு வந்தனமளித்து சாயங்காலம் வந்து அறிவிப்பதாகக் கூறி விடை பெற்றுக்கொண்டு வண்டியைத் தெப்பக்குளம் வீதியை நோக்கி விடச் சொன்னாள்.

தெப்பக்குளம் வீதியில் நாலாம் மெம்பர் வீட்டில் மூன்றாவது வார்டு மெம்பாரகிய முனியாண்டி பிள்ளை வசித்து வந்தார். பத்மா அவரைச் சந்திக்க விரும்பி அவர் வீட்டு வாயிலில் நின்றுகொண்டு "முனியாண்டி பிள்ளை இருக்கிறாரா !" என்று கேட்டாள். அவளுடைய கேள்வியைக் கேட்டுத் திரும்பிப் பார்த்த பாட்டியம்மாள் ஒருத்தி உள்ளே சென்று "அடே முனியாண்டி ! உன்னைத் தேடிக்கொண்டு யாரோ ஒரு தேவடியாள் முண்டை வந்திருக்கிறாள். அவள் உன்னிடம் என்னமோ பேசவேண்டுமாம்" என்று பத்மாவதியின் காதுகளில் கேட்கும்வண்ணம் உரக்கக் கூறினாள்.

அவ் வார்த்தைகள் பத்மாவதியின் காதுகளில் நன்றாக ஒலித்தன. அது கேட்ட அவள் சிந்தை தடுமாறியது. மனம் படாத பாடு பட்டது, நிலை தடுமாறினாள். அவளுடைய கண்கள் கண்ணீரைப் பெருக்க முயற்சித்தன. நாவாண்டது; தொண்டை கம்மிற்று; "அந்தோ ! நானொரு தேவடியாளாகக் கருதப்படவேண்டிய காலமும் வந்ததே" என்று எண்ணி மனம் புழுங்கினாள். ஆயினும் சில நிமிஷங்களில் வெகு சிரமப்பட்டு அவளுடைய மன நிலையை யெல்லாம் மறைத்துவிட்டு உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டாள். அடுத்த நிமிஷமே அவள் முன் முனியாண்டி பிள்ளையும் தோன்றினார். பத்மாவும் அவர்முன் அவளுடைய வேண்டுகோளைச் சமர்ப்பித்தாள்.

முனியாண்டி பிள்ளை சுற்று முற்றும் ஒரு முறை பார்த்தார். பின்னர் மெல்லிய குரலில் பேச ஆரம்பித்து "அம்மா ! தங்கள் கணவருக்கு ஓட்டுச் செய்வதைப் பற்றி ஆக்ஷேபணையில்லை. ஆனால் உங்கள் கணவருக்கு எதிராக நிற்கும் மற்றொரு அபேக்ஷகரான பொன்னுரங்க முதலியார் எனக்கு ஒரு பெருத்த உபகாரம் செய்வதாகச் சொல்லியிருக்கிறார். அது என்னவென்றால் எனக்கு ஒரு அவசர காரியத்தை முன்னிட்டு பதினாறாயிர ரூபாய் வேண்டியிருக்கிறது. அவர் அப் பதினாறாயிர ரூபாயையும் வட்டியின்றி எனக்குக் கடனாகக் கொடுக்க இசைந்திருக்கிறார். ஆதலால் உங்களுடைய கணவருக்கு நான் ஓட் செய்தேனானால் நன்றிகெட்டவனாவேன்............ஆனால் ஒன்று; அவர் பதினாறாயிர ரூபாய் வட்டியில்லாமல் கொடுத்துதவுவதாகச் சொல்லியிருக்கிறார். அதாவது அவர் வெறும் வட்டியை மட்டுமே தள்ளிக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் உங்களுடைய கணவர் வட்டியைத் தள்ளிக் கொடுத்து மேற்கொண்டு எனக்கு மாதந்தோறும் இருபத்தைந்து ரூபாய் இனாமாகக் கொடுப்பதாயிருந்தால் எனது ஓட்டை உங்களுடைய கணவருக்குக் கொடுப்பதில் துளிகூடத் தடையில்லை" என்றார்.

முனியாண்டிப் பிள்ளையின் பேராசை செறிந்த வார்த்தைகளைக் கேட்டபோது பத்மாவதி ஒரு நிமிஷம் திகைத்துவிட்டாள். அன்றைய தினம் மாலை 6-30 மணிக்கு மீண்டும் வருவதாகக் கூறி விடைபெற்றுச் சென்றாள்.

அதற்குமேல் பத்மாவதி இன்னும் பல மெம்பர்களையும் கண்டு பேசினர். ஒருவர் தனக்கு ஒரு பேபி ஆஸ்டின் கார் வாங்கிக் கொடுத்தால்தான் விஜயகுமாரருக்கு ஓட்டுச் செய்ய முடியுமென்று கூறினார். பிறிதொருவர் தனது பையனை பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படிக்க அனுப்புவதற்காக ஒரு பத்தாயிர ரூபாய் இனாமாகக் கொடுப்பதாயிருந்தால் விஜய குமாரருக்கு ஓட்டுச் செய்வதாகக் கூறினர். இவ்

வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக, "பணம் பணம்" என்று கேட்டார்கள். பத்மாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. சரியாகப் பனிரெண்டரை மணிக்கு வீடு போய்ச் சேர்ந்தாள்.

3

சேர்மன் பதவி தனக்குக் கிடைத்து விட்டதுபோலவும், தனக்கு நண்பர்களால் மலர்மாலை சூட்டப்படுவதுபோலவும் இன்பக் கனவுகள் கண்டுகொண்டிருந்த விஜய குமாரர் பத்மாவின் காலடிச் சத்தத்தைக் கேட்டதும் திரும்பிப்பார்த்து புன்சிரிப்போடு இருக்கை விட்டெழுந்து பத்மாவை பரிவுடன் தழுவி "கண்ணே! நீ எனக்காக ரொம்ப சிரமத்தை அடைந்திருக்கிறாய். வா இப்படி உட்கார். நீ போன காரியம் என்னவாயிற்று?" என்று ஆவலோடு கேட்டார்.

பத்மாவதி திடீரென்று அழுதுகூட விட்டாள். "நாதா! போதும். போதும். தங்களுக்கு இந்தச் சேர்மன் பதவியே வேண்டாம். தாங்கள் அதற்காகச் செலவிடும் பொருளைக்கொண்டு ஒரு ஆஸ்பத்திரியைக் கட்டிவைத்தாலும் புண்ணியமுண்டு" என்று கூறி நடந்த வரலாறுகளை ஒரு வார்த்தைகூட விடாமல் சவிஸ்தாரமாகக் கூறினாள்.

சர்வ சாவதானமாக அவளுடைய உரைகளைக் கேட்டுக்கொண்டு வந்த விஜய குமாரர் சிரித்தார். "பத்மா! நீ ஒரு சிறுமி. உனக்கு உலக அநுபவம் தெரியாது. போகட்டும். நீ இதுவரையில் எத்தனை எத்தனை அங்கத்தினர்களைக் கண்டு பேசியிருக்கிறாய்?" என்று வினவினார்.

"இருபத்தைந்து மெம்பர்களைச் சந்தித்தேன். அவர்களில் பதினைந்து பேர்கள் பொருளை எதிர்பார்த்து நமக்கு ஓட்டுச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். மற்றைய பத்து பேர்கள் நம்முயிரையே கொடுப்பினுங்கூட ஓட்டுப்போட முடியாதென்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார்கள்" என்றாள் பத்மா.

விஜய குமாரர் தலையை அசைத்தார். "பத்மா! நமக்கு வேண்டியது பதினாறு ஓட்டு. இன்னும் ஒரு ஓட்டு கிடைத்தால் நான் நிச்சயமாகச் சேர்மனாகிவிடுவேன். ஆதலால் நீ மற்றவர்களையும் சந்தித்து அவர்களில் ஒருவரையேனும் சரி செய்துவை. நான் மற்ற பதினைந்து பேர் வழிகளுக்கும் பணம் கொடுத்து சரிசெய்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

4

மாலை 4-30 மணிக்கு பத்மாவதி மீண்டும் மெம்பர்களைச் சந்திக்கப் புறப்பட்டாள். அவர்களொருவரும் விஜயகுமாரருக்கு ஓட்டுச் செய்ய சம்மதிக்கவில்லை. பத்மாவதி பணங்கொடுப்பதாகச் சொல்லியும்கூட அவர்கள் அசையவில்லை. அதனால் அவள் சோர்வடைந்து போனாள். அச்சமயந்தான் அவளுக்கொரு ஞாபகம் தோன்றிற்று. "ஆம். அவர் ஒருவர்தான் மீதி. அவரையும் சந்தித்துப் பார்த்து விடுவது" என்று மனதிற் குள்ளேயே கூறிக்கொண்டு கடைசி அங்கத்தினராகிய ராமநாதபிள்ளையின் பங்களாவை அடைந்தாள். அப்பொழுது இரவு ஏழுமணியிருக்கும். அவளையொரு வேலையாள் ராமநாத பிள்ளையிடம் அழைத்துச் சென்றான். பத்மாதான் அங்கு வந்த காரணத்தை விரிவாக எடுத்துச் சொல்லி விஜயகுமாரருக்கே ஓட்டுச் செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டாள். ராமநாத பிள்ளை சிறிதுநேரம் பத்மாவதியைக் கூர்ந்து நோக்கினார். பின்னர் "அம்மணி! நான் விஜயகுமாரருக்கு ஓட்டுச் செய்யத் தயார். ஆனால் நீங்கள் என்னுடைய வேண்டுகோள் ஒன்றை அங்கீகரிக்க வேண்டும்."

"என்ன அது? என்னுடைய கணவரிடம் சொல்லி அதை முடித்துத்தர ஏற்பாடு செய்கிறேன்" என்றாள் பத்மா.

"அது உங்களால் ஆகவேண்டிய காரியம். உங்களுடைய கணவருக்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமு மில்லை" என்றார் ராமநாதபிள்ளை.

"எங்கே, அதைச் சொல்லுங்கள். என்னால் கூடுமானால் அதைச் செய்து

கொடுக்கிறேன்" என்றாள் பத்மாவதி. அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"அது உங்கள் சக்திக்கு உட்பட்ட காரியமே. ஆனால் அதைச் சொல்வதற்கு எனக்கு நாஎழவில்லை. ஆதலால் அதை இந்த கடிதத்தில் எழுதி யிருக்கிறேன். வெளியேபோய் படித்துப் பார்த்துக் கொள்" என்று கூறி ஒரு கடிதத்தை அவளிடம் அளித்தார். பத்மாவும் அதைப் பெற்றுச் சென்றாள். அவளை யறியாமலேயே அவள் உள்ளத்தை பயம் என்ற ஓர் உணர்ச்சி கவ்வியது. அந்தக் கடிதத்தைத் தெருவிலிருந்த மின்சார விளக்கின் கீழ்கொண்டுபோய் படித்தாள். அதன் கீழ் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"உன் அழகில் நான் மயங்கித் தவிக்கிறேன். நீ என்னுடைய கோரிக்கையை பூர்த்தி செய்வித்தால் உன்னையொரு ராணியாகச் செய்வதோடன்றி உனது கணவருக்கும் ஓட்டுச் செய்வேன். அவ்வனவோடு நில்லாமல் என்னுடைய நண்பர்கள் சிலரையுங்கூட விஜயகுமாரருக்கு ஓட்டுச் செய்யச் சொல்வேன்."

பத்மாவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவளுடைய கண்கள் இருண்டன. அவள் மனம் பெரிய வேதனையை அடைந்தது. மௌனமாய் வண்டியில் ஏறி அமர்ந்து அதை வீட்டைநோக்கி விடச் சொன்னாள். வண்டியும் மனோவேகம், காறறு வேகமாய் பறந்து சென்று பத்மா விலாசத்தின் முன் வந்து நின்றது.

பத்மாவதியின் வரவையே ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த விஜயகுமாரர் வண்டிக்குப் பின்னால் வந்து பத்மாவுக்கு கைலாகு கொடுத்து இறக்கினார். அவருடைய கண்கள் பத்மாவின் முகக்குறிப்பைக் கவனித்தன. அவளுடைய சவம் போன்ற வெளுத்த முகம், மருண்ட பார்வை முதலியவைகளெல்லாம் அவர் மனதைத் திகில் பிடிக்கச் செய்து விட்டன. "ஆ! பத்மா! என்ன சேதி? ஏனிவ்வாறு சோர்வுற்றிருக்கிறாய்?" என்று துடிதுடிப்போடு கேட்டார்.

பத்மாவின் வாய் அவளைப் பேச முடியாதபடி செய்துவிட்டது. ஒரு ஊமைப்பெண்ணைப்போல் ராமநாத பிள்ளை கொடுத்த கடிதத்தை நடுக்கத்தோடு விஜயகுமாரரிடம் அளித்தாள்.

விஜயகுமாரர் கடிதத்தைப் படித்த போது அவருடைய முகத்தில் பற்பல மாறுதல்கள் இடம் பெற்றன. திக்பிரமை பிடித்தவராய் ஒரு ஐந்து நிமிஷம் பத்மாவின் முகத்தைப் பார்த்தபடியே நின்றார். பின்னர் பேச ஆரம்பித்து "இப்பொழுது நீ சந்தித்தவர்களில் எத்தனை பேர் நமக்கு ஓட் செய்வதாகச் சொல்லி யிருக்கின்றனர்?" என்று கேட்டார்.

"எல்லோரும் ஒரே முகமாய் கண்டிப்பாய் நாக்கு ஓட்டுச் செய்ய முடியாதென்று கூறி விட்டார்கள்" என்றாள் பத்மா.

விஜயகுமாரர் ஏதோ சிந்தனையில் யில் ஆழ்ந்தார். "நாதா! எனக்கென்னவோ நிற்க முடியவில்லை. கால்கள் தள்ளாடுகின்றன. இந்த பங்களாவே சுற்றுவதுபோல் தோன்றுகிறது" என்று கூறி மயக்கமுற்று விஜயகுமாரர் மீது சாய்ந்தாள் பத்மா. அவர் அவளை அப்படியே தூக்கிக்கொண்டுபோய் அவளுடைய படுக்கை அறையில் சேர்த்து, அவள் நிலையைக் கவனித்துக்கொண்டு கற்சிலைபோல் அசையாது அவளருகேயே நின்று கொண்டிருந்தார். அவருடைய மனம் புயல்காற்றில் சிக்கிய பாய்மரக் கப்பல் போன்று தவித்தது. ஒருபுறம் பத்மாவின் நிலையும், மற்றொருபுறம் ராமநாதப் பிள்ளையின் துணிச்சலான கடிதமும் மாறி மாறி அவருள்ளத்தில் தாக்கி அவரைக் கலவரத்திற்குள்ளாக்கியது. அவர் பின்வருமாறு தன்னுடைய மனதிற்குள்ளேயே கூறிக்கொண்டார்.

"நமது நகர் முனிசிபாலிட்டியில் 31 அங்கத்தினர்களிருக்கிறார்கள். அவர்களில் பதினைந்து அங்கத்தினர்கள் பொருளைப் பெற்றுக்கொண்டு எனக்கே ஓட்டுப் போடுவதாய் வாக்களித்து விட்டார்கள்.

ஆகவே எனக்கு வேண்டியது இன்னும் ஒரே ஒரு ஓட்டுதான். அந்த ஒரு ஓட்டும் என் கையில் சிக்கி விட்டால் நான் சேர்மன் பதவியை அடைந்து விடுவேன். அப்புறம் சேர்மன் பதவியிலிருந்து சட்டசபை அங்கத்தினராவேன். அப்புறம் சென்னையின் மதி மந்திரிகளில் ஒருவனுவேன். அப்புறம் சர்க்கார் என் மீது கிருபை கூர்ந்து திவான் பகதூர் பட்டம் அளிப்பார்கள். அப்புறம் அதிலிருந்து சென்னையின் கவர்னராக வந்தாலும் வந்து விடுவேன். அடேயப்பா! அப்பொழுது என்னைத்தரிசிக்க எவ்வளவுபேர் ஆவலோடு காத்துக்கொண்டிருப்பார்கள்! எனக்கு எவ்வளவுபேர் மாலை சூட்டி வரவேற்புப்பத்திரங்கள் வாசித்துக் கொடுப்பார்கள்! அப்பப்பா, என்னையொரு தெய்வமாகவே கருதி விடுவார்கள். ஆனால் அந்த அயோக்கியன் ராமநாதப் பிள்ளை.... ............?" என்று இவ்விதமாக எண்ணி எண்ணி பெருமூச் செறிந்தார்.

"எப்படி நான் வெற்றி பெறக்கூடும்? அந்த படுபாவி ராமநாத பிள்ளை......" என்றூர் விஜயகுமாரர்.

"அவரை நான் சரி செய்து விடுகிறேன்" என்று புன்முறுவலுடன் பதிலளித்தாள் பத்மா.

"எப்படி?" என்று வினவினுர் விஜயகுமாரர்.

"அதையெல்லாம் நான் அப்புறம் உங்களுக்குச் சொல்லுகிறேன். முதலில் நீங்கள் ராமநாதப் பிள்ளையின் வீட்டிற்குச் சென்று அவருடைய வேண்டுகோளுக்கு இணங்குவதாகவும், இரவு பன்னிரெண்டு மணிக்கு வருமாறும் சொல்லிவிட்டு வாருங்கள்" என்றூள்.

அவரும் அவ்வாறே மௌனமாக ராமநாத பிள்ளையின் வீடு நோக்கிச் சென்றூர். அவர் சென்றபின் பத்மா சில இடங்களுக்குப் போய்விட்டு இரவு பத்து மணிக்கு வீடுவந்து சேர்ந்தாள.

5

அரைமணி நேரத்திற்குப் பின்னர் பத்மாவதி மயக்கம் தெளிந்து எழுந்து எதிரே நோக்கினுள். விஜயகுமாரரின் துக்க முகத்தைக் கண்டதும் பதற்றத்தோடு அவர் அருகிற்சென்று அவர் கைகளைப் பிடித்துக்கொண்டு "நாதா! தங்கள் துக்கத்திற்குக் காரணம் என்ன? சொல்லுங்கள். இதோ என் உயிரைக் கொடுத்தேனும் நிறைவேற்றி வைக்கிறேன். உங்கள் துக்கமும், இன்பமும் என்னையும் சார்ந்ததன்றே!" என்று இரங்கிய குரலில் கூறினுள்.

"பத்மா! நானென்ன சொல்வேன்? ஐந்து லக்ஷரூபாயை அநியாயமாய்ச் செலவு செய்தும் ஒரு ஓட்டினுல் நான் தோற்கப் போகிறேனே" என்றூர் விஜயகுமாரர். அவருடைய குரல் கம்மிற்று.

"நாதா! நீங்கள் சிறிதுகூடப் பயப்படவேண்டாம். வெற்றி நிச்சயம் தங்களுடையதே" என்றூள் பத்மா.

6

இரவு பன்னிரெண்டுமணி யிருக்கும். அன்றையதினம் அமாவாசை. அதோடு வானத்தில் கருமேகங்கள் நிறைந்திருந்தன. ஆதலால் வானம் இருண்டு கிடந்தது. மை இருட்டு, பத்மாவதியின் படுக்கை யறையில் ராமநாதப்பிள்ளை நின்றுகொண்டிருக்கிறூர். அவருடைய ஹிருதயத்தில் பத்மாவதியின் புன்னகைக் கூத்தாடும் முகம் காக்ஷியளித்துக் கொண்டிருக்கிறது. "எங்கே இன்னும் காணேமே அவளை" என்றெண்ணிக்கொண்டே அறையில் உலாவிக்கொண்டிருந்தார்.

திடீரென்று வளையல்கள் குலுங்கும் சப்தம் கேட்டது. ராமநாதபிள்ளை பாய்ந்து சென்று "கண்ணே பத்மா!" என்று அவளைக் கட்டிக்கொண்டார். பத்மா வாய் திறந்து அவருடன் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. ஆனுல் அவருடைய செய்கைகளுக்கெல்லாம் உடன் பட்டாள்.

சரியாக இரவு ஒருமணி யாயிற்று. விஜயகுமாரருக்கே ஓட்டுச் செய்வதாகக்

கூறி ஒரு வைரக்கல் பதித்த மோதிரத்தை அவளுக்குப் பரிசாகக் கொடுத்துவிட்டுச் சென்றார் ராமநாதப் பிள்ளை.

7

இன்றைய தினந்தான் சேர்மன் தேர்தல் தினம். நகர் அல்லோலகல்லோலப்படுகிறது "விஜய குமாருக்கே ஓட்டுப் போடுங்கள்" என்று கோஷிக்கிறது ஒரு கூட்டம். "பொன்னுரங்க முதலியாருக்கே ஓட்டுக் கொடுங்கள்" என்கிறது ஒரு கூட்டம். சரியாகப் பகல் பத்தரைமணி யாயிற்று. கலெக்டர் வந்து நாற்காலியில் அமர்ந்தார். தலைவர் பதவிக்குப் பொன்னுரங்க முதலியார் பெயரைப் பிரேரபணை செய்தார் ஒருவர். மற்றொருவர் ஆமோதித்தார். விஜய குமாரின் பெயரை ராமநாதபிள்ளை பிரேரேபித்தார். உஸ்மான் ஆமோதித்தார். இருவர் பெயரும் ஓட்டுக்கு விடப்பட்டது. விஜய குமாருக்கு 16 ஓட்டுகள்; பொன்னுரங்க முதலியாருக்கு 15 ஓட்டுகள். விஜயகுமாருக்கே வெற்றி கிடைத்தது. இந்த செய்தி கண்ணை மூடிக் கண்ணைத் திறப்பதற்குள் நகரெங்கும் பரவிவிட்டது.

பத்மாவதி அடைந்த ஆனந்தத்திற்கோர் அளவில்லை. அவள் அன்று தன் கையினாலேயே சிரமப்பட்டு தொடுத்து வைத்திருந்த ரோஜாமாலை ஒன்றைக்கையில் வைத்துக் கொண்டு விஜயகுமார் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரண்டரை மணிக்கு விஜயகுமார் பத்ம விலாசத்தில் வந்து இறங்கினார். பத்மா குதித்தோடிச் சென்று அவர் கழுத்தில் ரோஜாமாலையைச் சூட்டி "நாதா! இப்பொழுதுதான் நான் தங்களுக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்து விட்டதாக எண்ணி திருப்தியடைகிறேன்" என்றாள். விஜயகுமார் அவளை அன்போடு தழுவி, 'பத்மா! நீ செய்த ஊழியத்தின் பயனாகவே நான்



வெற்றி பெற்றேன். என்னுடைய வாழ்நாளில் எந்த வினாடியிலும் உன்னுடைய இந்த அபாரமான சூழ்ச்சியை மறக்கவே மாட்டேன்" என்றார்.

இங்கு இவர்கள் இவ்வாறு ஆனந்தத்தோடு பேசிக்கொண்டிருக்கையில் ராமநாத பிள்ளையின் பங்களாவில் நமது பார்வையை செலுத்துவோம். முனிசிபல் கட்டிடத்தை விட்டு வெளியேறிய ராமநாதபிள்ளை "மேனகா! மேனகா!" என்று அழைத்துக்கொண்டே பங்களாவினுள் நுழைந்தார்.

மேனகை புன்னகையுடன் அவர் முன் தோன்றினாள். "நீங்களேன் தலைவர் ஸ்தானத்திற்கு நிற்கவில்லை!" என்று விஷமச் சிரிப்புடன் கேட்டாள்.

"அந்தத் தொல்லையெல்லாம் நமக்கென்னத்திற்கு என்றுதான்."

"போனால் போகிறது. தங்களால் பிரேரபணை செய்யப்பட்ட ஒருவரே தலைவர் ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறார். அதற்காக இதோ இந்த பரிசை நீங்கள் எப்படியாவது ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று கூறி ஒரு வஸ்துவை ராமநாத பிள்ளையின் கரத்தில் வைத்து மூடினாள் மேனகை.

ராமநாத பிள்ளை கையைத் திறந்து அந்த வஸ்துவை உற்று நோக்கினார். அவருடைய கண்களையே அவர் நம்பவில்லை. திகைப்பும், ஆச்சரியமும் அவர் உள்ளத்தில் மாறி மாறித் தோன்றின. "மேனகா! இது ஏது உனக்கு?" என்று தயக்கத்தோடு கேட்டார்.

"அன்றிரவு நீங்கள் கொடுத்ததுதான்" என்று சாந்தமாக பதில் கூறினாள் மேனகா.

"என்றைய இரவு! நான் ஒரு நாளும் இது மாதிரி வைரக்கற்கள் பதிப்பித்த மோதிரமொன்றை உனக்குக் கொடுத்ததாக ஞாபகமில்லையே" என்றார் ராமநாத பிள்ளை.

"ஞாபக மில்லையா! அன்றைய தினம் பத்மா

-வதி வீட்டில் இரவு பன்னிரண்டு மணிக்கு..........."

அப்படியே கல்லாய் சமைந்து விட்டார் பிள்ளை. அவரால் பேச முடியவில்லை.

"நாதா! தங்களிடம் ஓட்டுக்கேட்க வந்ததற்காக ஒரு பெண்ணின் கற்பைக் கோரியது நேர்மையற்ற செயல். லாபத்தைக் கருதி ஓட்டுப் போடுவதைப் போன்ற மதிகெட்ட செயல் வேறொன்றுமில்லை. நீங்கள் இந்த மதிகெட்ட செயலைச் செய்ய துணிந்து முன் வந்ததன்றி ஒரு பரிசுத்தமான பெண்மணியின் கற்பைக் கெடுக்கவும் முயற்சித்தீர். அவள் என்னுடன் பள்ளியிற் படித்த பாலிய சிநேகிதை யாகையால் இந்தச் செய்தியை எனக்கு அறிவித்தாள். அப்புறம் நாங்களிருவரும் சேர்ந்து ஒரு பெரிய சதியாலோசனை செய்தோம். அதன்படியே நான் பத்மாவின் வீட்டில் தங்கியிருந்தேன். நீங்களும் வந்தீர்கள். நாமிருவரும் இருட்டறையில் சந்தித்தோம். அப்பொழுது நீங்கள் கொடுத்த மோதிரம் தான் இது" என்றாள் மேனகா.

ராமநாத பிள்ளை தன் ரகசியங்கள் மேனகைக்குத் தெரிந்து போய்விட்டதை அறிந்ததும் வெட்கித் தலைகுனிந்து நின்றார்.

---


2 அணா பிரவேசக் கட்டணம் அணா 2

# ரொக்கப் பரிசு ரூ. 550

**முதல் பரிசு ரூபா 300.** **2-வது பரிசு ரூபா 150.**

அதிக விடை பரிசு ரூபா 30. முதலில் வரும் சரியான விடைக்கு ரூபா 30.

அதிர்ஷ்டப் பரிசு ரூபா 40. முடிவு தேதி 20—4—36.

பக்ஷிகள் போட்டி.

| | |
|---|---|
| 1 | —— னம்பாடி |
| 2 | —— வல் |
| 3 | —— த்து |
| 4 | —— ன்னம் |
| 5 | —— ருடன் |
| 6 | குரு —— |

கோடிட்ட இடத்தில் ஓர் எழுத்தைச் சேர்த்தால் ஒரு பக்ஷியின் பெயர் வரும். இப்படியாக பூர்த்தி செய்து தனிக காகிதத்தில் விடை எழுதிய கூபன் 1-க்கு 2-அணா வீதம் M. O. செய்து விடையுடன் M. O. ரசீதும் அனுப்பவும். ரூ. 1 வரை காலணா, முக்காலணா போஸ்டல் ஸ்டாம்புகள் அனுப்பலாம். இப்போட்டிச் சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் மானேஜர் தீர்ப்பே முடிவானது. இப்போட்டிக்கு அனுப்பிய பணம் எக்காரணத்தைக்கொண்டும் வாபஸ் செய்யப்பட மாட்டாது.

மானேஜர்,

**ஜூபிலி நிலையம்,**

லெக்ஷிமிபுரம், மதுரை.



# பண்டைத் தமிழர் இசைச் செல்வம்

(சுவாமி விபுலானந்தர்.)

ஸ்வாமி விபுலானந்தர் என்பவர் இலங்கையைச் சேர்ந்தவர். ஆங்கிலப் புலமையும், தமிழ்ப்புலமையும், தத்துவ ஆராய்ச்சியும் சிறக்கப் பெற்றவர். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப்பிரிவுக்குத் தலைவராயும் விளங்கி யிருக்கிறார். இவர் சென்றமாத இறுதியில் சென்னை செனட் மண்டபத்தில் பண்டைத் தமிழ்மக்களின் இசைக்கலையைப்பற்றித் தொடர்ச்சியாக ஆறு சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். அவற்றுள் மூன்று சொற்பொழிவுகளின் சாரம் சென்ற இதழில் வெளியிடப்பட்டது. பின் மூன்று சொற்பொழிவுகளின் சாரம் வருமாறு:—

பண்டைத் தமிழர்களைப் பற்றிய தமது நான்காவது பிரசங்கமாக, சென்னை சர்வ கலாசாலையின் சார்பில் சுவாமி விபுலானந்தர் "7-வது நூற்றாண்டிலும் பின்னரும் தமிழிசையின் நிலை" என்னும் விஷயத்தைப் பற்றிப் பிரசங்கம் செய்தார். அவர் கூறியதாவது: "காலம்செல்ல செல்ல தமிழ்ப் பாணனின் நிலை எவ்வாறு மாறுதலை யடைந்த தென்பதை கவனிக்கலாம். 7-வது நூற்றாண்டில் தமிழ் நாட்டில் அரசியல் துறையில் கலாபி விருத்தி சம்பந்தமாகவும் புதிய சகாப்தம் ஏற்பட்டது. அக்காலத்தில்தான் சைவப் பெரியார்களான திருஞான சம்பந்தரும், அப்பரும் தோன்றினர்கள். அவர்களது தோற்றம் புதிய சகாப்தம் ஏற்பட்டதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும். திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரும் திருஞான சம்பந்தரைச் சந்தித்தனர். அக்காலத்தில் ஞான சம்பந்தரது பக்திரசம் ததும்பும் பண்கள் எல்லோரது மனதையும் உருக்கி வந்ததோடு அவர்களது மனம் சிரிய லட்சியங்களை நாடும்படியும் செய்துவந்தன. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரது இசைக்கு மிக்க மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. பாணனைப்போல வறுமை யுடையவரல்ல. திருநீலகண்டர் பெரிய பக்தர்; வறுமை யில்லாமலே யிருந்தார். ஞான சம்பந்தரும் நீலகண்டரும் ஒருவரை யொருவர் சந்தித்ததி லிருந்து இருவரும் பெரிய நண்பர்களாயினர். ஞானசம்பந்தரது பண்களுக்கு திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவரது மனைவியும் ஸ்வரம் கோத்து யாழில் பாடுவார்கள். தர்மபுரத்தில் யாழில் வாசிக்க முடியாதவாறு திருஞான சம்பந்தர் யாழ்முறி என்ற பண்ணை இயற்றிய சம்பவமும், திருநீல நக்கர் என்ற பிராமண பக்தர் தீண்டாதவரான திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கும், அவரது மனைவிக்கும் தமது வீட்டிலே பூஜை அறையில் இடமளித்த சம்பவமும் சேக்கிழாரின் பெரிய புராணத்தில் விரிவாகவுள்ளன. சைவப் பெரியார்களின் தேவாரப் பண்களும் வைஷ்ணவ பெரியாரான நம்மாழ்வாரின் திருவாய்மொழியும் இசையபிவிருத்திக்குச் சாத

னங்களாக விருந்தன. தமிழ் மொழியிலே இன்றுவரையில் அவைகளைவிட மேலாக பக்திரசம் வாய்ந்த பாடல்களில்லை.

1904-வது வருஷத்தில் புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள ஸ்ரீ கந்தசாமி கோவில் மலையில் கல் வெட்டுக்களைக் கண்டுபிடித்து அந்த கல்வெட்டுகளில் கண்ட விஷயங்களை ராவ்பகதூர் பி. ஆர். பந்தர்கார் பிரசுரித்துள்ளார். 7-வது நூற்றாண்டின் இசையைப் பொறுத்த வரையில் அந்த கல்வெட்டுகளை முக்கியமாக கவனிக்க வேண்டும். அந்த கல்வெட்டுகளில் 7 பகுதிகள் உண்டு. அந்த கல்வெட்டுகள் தேவநாகரி எழுத்துக்களிலுள்ளன. அவைகளின் அடியில் தமிழில் 'எட்டுக்கும் ஏழுக்கும் இவை உரிய' என்று கண்டிருக்கிறது. இவ்விஷயங்கள் ஆராய்ச்சிக் குரியனவாகும்.

9-வது நூற்றாண்டிலே பக்திமான்களான இரு பாணர்கள் தோன்றினார்கள். அவர்களில் ஒருவரான பாட்டனார் என்பவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேரமான் பெருமானும் இருந்த காலத்திலிருந்தவர். மற்றொருவர் திருப்பாணாழ்வார். பெருங் கதையும், சீவக சிந்தாமணியும் 10-வது நூற்றாண்டைச் சேர்ந்தவை. யாழ் வாசிப்பது பற்றி அவ்விரு நூல்களும் குறிப்பிடுகின்றன. கதாநாயகன் கதாநாயகிக்கு இசை சொல்லிக்கொடுப்பதும் இருவருக்கும் இசைப்போட்டி நடப்பதும் வழக்கமென்று அவ்விரு நூல்களும் குறிப்பிடுகின்றன. 13-வது நூற்றாண்டிலே சாரங்க தேவர சங்கீத ரத்னாகரத்தில் தமிழ் தேவாரப் பண்களைப் பற்றி சில இடங்களில் குறிப்பிட்டிருக்கின்றார். அவ்விஷயங்களை உதவியாகக் கொண்டு தேவார ராகங்கள் பல தற்போது மறைந்துவிட்டன. 17-வது, 18-வது நூற்றாண்டுகளிலே தஞ்சையில் அரசாண்ட நாயக்க மன்னர்களும், மகாராஷ்டிர மன்னர்களும் சங்கீதத்தை ஆதரிக்க ஆரம்பித்தனர். அப்பொழுது புராதன தமிழிசை முற்றிலும் மறைந்தது. அதற்குப் பதிலாக புதிய முறை தோன்றியது. வேங்கட மாஹியின் சதுர்தண்டி-பிரகாசிகை (1660) தோன்றியது முதல் சங்கீத முறையில் புதிய சகாப்தம் ஏற்பட்டது. அது இன்றைக்கும் மாறவில்லை. ஷாஜி (1687-1711) சங்கீத அபிவிருத்தியை ஆதரித்தார். அவரும் ஒரு சங்கீத வித்வானே. அவரது ராஜ சபையில் திருவாரூர் கிரிராஜ கவியும் ஒரு சங்கீத வித்வானவார். கிரிராஜ கவியின் பேரனே திருவையாறு தியாகராஜ சுவாமிகள். பிறகு துலாஜாஜி (1763—1787) யின் காலத்தவரான அருணாசலக் கவிராயர் ராமாயண கீர்த்தனம் பாடினார். அதன் பின் எட்டியாபுரம் சமஸ்தானத்தைச் சார்ந்த முத்துசாமி தீக்ஷிதர் (1775) திருவாரூர் சாம சாஸ்திரியார் இவர்கள் தோன்றினார்கள். தற்போது சங்கீதத்தில் ஜனங்களுக்கு விசேஷ சிரத்தை ஏற்பட்டுள்ளது. தற்காலத்தவர்கள் சுயமாக சங்கீத அபிவிருத்தி வேலை செய்வார்களென்றும் புதிய முறைகளைச் சிருஷ்டி செய்து சங்கீதத்தை ஜீவனுடைய சக்தியாக்குவார்களென்றும் நம்புவோமாக.

## 5-வது பிரசங்கம்

### சிற்ப-ஓவியக் கலைகள்

தமது 5-வது பிரசங்கத்தில் 'பண்டைத் தமிழரின் சிற்பக்கலை, ஓவியக்கலை' என்பதுபற்றி சுவாமி விபுலானந்தர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

சங்க நூல்களிலும் இதர பழைய நூல்களிலும் அரண்மனை, ஆலயங்கள், மாளிகைகள் நந்தவனங்கள் நாடகமேடை முதலியவற்றின் வர்ணனை உள்ளது. நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்றவை இலக்கிய மட்டுமன்று; அழகிய ஆலயங்களில் செதுக்கியுள்ள தெய்வச் சிலைகள், சித்திரங்கள் முதலியனவுமாகும். தமிழ் சிற்பக் கலை வல்லுநர்கள், சித்திரக் கலை வல்லுநர்கள் இவர்களது திறமை மறைந்து போய் விடவில்லை. அதனை தற்போதும் தமிழ் நாட்டிலும் இலங்கையிலுமுள்ள கோயில்கள் முதலியவற்றில் காணலாம். சங்க நூல்கள் முதலியவற்றில் காணும் புராதன தமிழ் நகரங்களின் வரு

ணனையை ஆதாரமாகக்கொண்டு அந்நகரங்கள் எவ்வா றிருந்தன வென்பதை ஒருவாறு யூகிக்கலாம்.

சுவாமி விபுலாநந்தர்.

சோழ மன்னரது தலை நகரமான காவிரிப்பூம் பட்டினத்தின் வருணனையை மணிமேகலையில் காணலாம். பௌர்ணமி தினத்தில் அந்நகர் எப்படியிருந்ததென்பதையே அந்நூல் கூறுகிறது. அந்நகரை ஒரு அழகிய பெண்ணுக்கு ஒத்திட்டும், நகரின் நடுவிலுள்ள அரசன் மாளிகையை அப்பெண்ணின் முகத்திற்கும், நகரின் இரு கோடியிலுமுள்ள கற்பக விருக்ஷக் கோட்டத்தையும் வச்சாயுதக் கோட்டத்தையும் அப்பெண்ணின் ஸ்தனங்களுக்கும், கீழ்த்திசையில் எழுந்திருக்கும் சந்திரனையும் சூரியனையும் அப் பெண்ணின் காதணிகளுக்கும் ஒத்திட்டுக் கூறியுள்ளார். அரசனது அரண்மனை நகரின் நடுவி லிருக்கு மென்பது இதிலிருந்து தெரிகிறது. எல்லைகளில் மதில்க ளிருக்கு மென்பது காஞ்சி நகர் வருணனையி லிருந்து புலப்படும்.

சிற்பக்கலை சம்பந்தப்பட்ட வரையில்

ரம் எதனையும் இழந்து விடவில்லை. கோபுரமானது பிற்கால சிருஷ்டியல்ல. ஆரம்பக் காலத்திலிருந்தே கோபுரமானது அமைக்கப்பெற்று வந்த தென்பதற்கும், அது நீளமான தென்பதற்கும், வாசல்கள் விசாலமானவை யென்பதற்கும் பல ஆதாரங்கள் இருக்கின்றன. புராதன நகரில் அரசர், மந்திரிகள், பார்ப்பனர், சேவுக்காரர், பொற் கொல்லர், தையல்காரர் முதலியவர்களுக்குத் தனித் தனியாக வீதிகளிருந்தன. நகரில் ஸ்நான மண்டபங்களும் சோலைகளும் இருந்தன. அயல் நாட்டினர் வாசம் செய்துவந்த துறைமுகப் பட்டினங்களும் இருந்தன. நகரிலே பலவித ஆலயங்கள் இருந்தன. இருபுறங்களிலும் யானைகளுடன் லட்சுமி சிலை அமைப்பதோ சித்திரப்படம் எழுதுவதோ நீண்ட காலமாகவே இருந்துவருகிறது. உயரமான கட்டிடங்களே அமைத்து வருகின்றனர். பெரிய நோக்க முடையவர்களென்பதற்கு அது அத்தாட்சியாகும். மூன்றடுக்கு மாளிகை கட்டியுள்ளனரென்பதற்கும் சிலப் பதிகாரத்திலேயே ஆதாரமிருக்கிறது.

அக்காலத்திலே சிற்பிகளுக்கும் ஓவியக் காரர்களுக்கும் மிக்க மதிப்பு ஏற்பட்டிருந்தது. அவர்கள் சிலைகள் மண்ணுேடியையந்தமரத்தால் அமைத்தனர். கீர்த்தியுடையவர்கள் இறந்தபின் அவர்களைப் போல் உருவச் சிலைகள் அமைத்தனர்.

அரங்கேற்று காதையில் நாடக மேடையின் வருணனையைக் காணலாம். அம் மேடையின் நான்கு பக்கங்களிலும் தேவதைகளின் உருவப் படங்களை எழுதி வந்தனர்.

புராதன சிற்பிகளும், சித்திரக்கலை வல்லுநரும் தங்களது தொழிலின் ரகசியங்களை வெளியிடுவதில்லை. தங்களது சந்தியாருக்குப் போதித்துவந்தனர். சிவாகமங்களில் 60 ஆகமங்கள் நகர அமைப்பு முதலிய விஷயங்களையே குறிக்கின்றன. அக்காலத்து சிற்பிகள் சாமான்யரல்ல; புலமை வாய்ந்தவர்கள்; அநுபூதிபெற தகுதி யுடையவராக விளங்கினர். தங்களது கலையின் மேம்பாட்டிற்காக சன்மார்க்கத்தை கடைப்பிடித்தனர். உபாசனை செய்தே எந்த தெய்வத்தின் உருவத்தையும் அமைத்தனர். அவ்விதம் நன்றாக அமைந்த உருவத்தில் தெய்வம் குடிகொள்வது வழக்கமாம். பளிங்குமாடம் அமைத்துள்ளன ரென்பதற்கு மணிமேகலையில் அத்தாட்சி இருக்கிறது. விக்கிரகங்களை கற்களிலேயே செதுக்கி வந்தனரென்றும் தெரிகிறது. ஒருவன் தான் காதலிக்கும் பெண்ணைப் பெற முடியாவிட்டால் தனது துயரினை ஊராருக்குத் தெரிவித்து அப் பெண்ணை மணக்க மடல் ஏறுதல் வழக்கம். அவ் வாலிபன் தனது கையில் தான் காதலிக்கும் பெண்ணின் உருவத்தை வைத்திருப்பான். இதிலிருந்து பண்டைக்காலத்தில் சித்திரக்கலையும் சிறப்படைந்திருந்த தென்பது விளங்கும். முகாம் அமைக்க துணியை உபயோகிப்பது புராதன தமிழ் வழக்கம். தமிழர் போரிடுவதில் ஆர்வ மிக்கவாக விருந்த போதிலும், அவர்கள் கலாபிவிருத்தியிலும், சௌகரியங்களைச் செய்து கொள்வதிலும் விருப்புடையவராக விளங்கினர்.''

## 6-வது பிரசங்கம்

### ரசவாத ஆராய்ச்சி

தமது கடைசி பிரசங்கத்தில் சுவாமி விபுலாநந்தர் "ரசவாத ஆராய்ச்சி" என்பது பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நான் இங்கே கொண்டுவந்திருக்கும் புத்தகங்கள் 60 ஆண்டுகளுக்கு முன்பு அச்சிடப்பெற்றவை. தமிழ் நாட்டிலே அச்சிடும் முறை ஏற்பட்டபோது இவை மட்டமான தாளில் அச்சிடப்பெற்றன. இவைகளை சிறு புஸ்தகக் கடைகளிலும், தெருக் கடைகளிலும் வாங்கலாம். கிராம வைத்தியர்களுக்கும் இவைகளே சாஸ்திர நூல்களாகும். நான் கொண்டுவந்துள்ள சில புத்தகங்களின் பெயர்களைச் சொல்லுகின்றேன். நந்தீஸ்வரர் நிகண்டு, திருவள்ளுவர் கற்பம் முன்னூறு, ரோமரிஷி நூல், பரிபாஷை திரட்டு

மச்சமுனி நூல், தன் வந்திரி பகவானின் நூல் முதலியன.

இந்தப் பெயர்கள் முக்கியமானவை, இவைகளின் பிரயோஜனம் என்ன வென்பதை ஆராய்ச்சி செய்வதால் பலனுண்டு. இந்தப் புத்தகங்கள் பார்வைக்கு நன்ருக விரா விட்டாலும், இவைகளில் சிலவற்றை பெரிய ஞானிகளே எழுதியிருக்கின்றனர். ஓலைச் சுவடிகளி லிருந்தே இவை அச்சிடப் பெற்றன.

'கெமிஸ்டரி' என்ற ரசாயன சாஸ்திர வாலாற்றில் பல நிலைகள் உண்டு. இயற்கையின் மறை பொருள்களைப் பகிரங்கப்படுத்துவதை பண்டைக் காலத்து மக்கள் வெறுத்தனர். இதனுலேயே விஞ்ஞான சாஸ்திரத்தை ஆரம்பத்தில் ஜால வித்தையைப்போல் ஜனங்கள் கருதினர். அவ்வித ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்களையும், சமூகத்தில் சேர்த்துக் கொள்ளவும் அருவருப்புக் கொண்டனர். புராதன விஞ்ஞான சாஸ்திரிகளான 'வாதி'களின் நூல்களில் சிற்சில உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன. எந்த நாட்டிலும் இந்த வாதிகள் முறை ஒரே விதமானதாகும்.

நம் நாட்டிலே தான் விஞ்ஞான சாஸ்திரமும், கணித சாஸ்திரமும் தோன்றின. அராபிய தேசத்தின் மூலம் நம் நாட்டிலிருந்து அந்த சாஸ்திரங்கள் மேனுட்டிற்குச் சென்றன.

விஞ்ஞான சாஸ்திரத்தின் மத்திய நிலையே 'ரசவாத ஆராய்ச்சி' யாகும். இதனுலேயே இவை பிற்காலத்து புத்தகங்கள் என்று கூறிவிட முடியாது. கம்பர், சேக்கிழார் காலத்தில் ஜனங்கள் சாதாரணமாகப் பேசும் நடை இலக்கியச் செறிவோடிருக்குமென்று கூறிவிடவே முடியாது. அந்த ரசவாதிகளின் நூல்கள் பல விஷயங்களைப் பற்றிக் கூறுகின்றன.

அந்த ரசவாதிகள் மருந்துகள் செய்ததோடு இரும்பு செம்பு முதலிய உலோகங்களைப் பொன்னுக்கவும் முயன்றனர். மூப்பு, பிணி காய கற்பத்தால் மனிதர் பல நூற்றுண்டுகள் வாழலாம். சாதாரண உலோகங்களைப் பொன்னுக்க ரசத்தைக் கட்ட முயன்றனர்.

அவர்களது நோக்கம் மேலானதேயாகும். அவர்கள் தங்களது முயற்சிகளில் சித்தி பெற்றிருப்பார்களேயானல், மூப்பு, பிணி, திரை இவைகளால் மனித சமூகம் கட்டுப்பட வேண்டியதில்லை, பொன்னுசையால் விளையும் இன்னல்களுக்கும் இடமில்லாமற் போயிருக்கும். ரசவாத ஆராய்ச்சியின் பலனுகவே 'கெமிஸ்டரி' (ரசாயன சாஸ்திரம்) என்பது தோன்றியது, வாத நூல்கள் அஷ்டாங்க யோகத்தைப்பற்றியும், ஆசைகளை நிறைவேற்ற வல்ல மந்திரங்களையும், பேய் முதலியவற்றை ஓட்ட வல்ல யந்திரங்களையும் பற்றி குறிப்பிடுகின்றன.

திருமந்திரம் என்பது பன்னிரு திருமுறைகளில் ஒன்ருகும். அந்நூலை அருளிச்செய்த திருமூலர் ஒரு சித்தர். அவர் தம்மைப்பற்றி கூறுகையில் தாம் நந்தியினிடம் உபதேசம் பெற்ற எட்டுபேர்களில் ஒருவரென்று குறிப்பிடுகின்ருர். திருவள்ளுவர் 'ஞான வெட்டியான் என்ற நூலிலும் ரசவாத ஆராய்ச்சிகளைக் காணலாம். இந்த திருவள்ளுவர் திருக்குறள் எழுதியவரல்ல. திரு மூலர் யோக சூத்திரங்கள் எழுதிய பதஞ்சலி காலத்தவர்.

திருமூலர் போன்ற பெரிய சித்தர்களைப் பின் பற்றியே இதர 'சித்தர்கள் தோன்றி குழப்பத்தை விளைவித்தனர். அவர்கள் தாங்கள் கூறுவதை மறைபொருளாகவே கூறிவந்தனர். இவர்கள் 15-வது நூற்றுண்டிலே வாழ்ந்தனர். உண்மைக் குறிக்கு வழிகாண விரும்பியவர்கள் இவர்களது தத்துவங்களைப் பாராட்டினர். இந்த ரசவாதிகள் எந்த வஸ்துவையும் சுத்தம் பண்ண சிறந்த முறையைக்கண்டு பிடித்தனர். பாதரசம், பொன், செம்பு, இரும்பு, துத்தநாகம், தகரம் இவைகளைப் பஸ்பமாக்கவும் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் 3 ஜெய நீர்களைக் கண்டு பிடித்திருந்தனர். ரஸவாதிகள் தங்கத்தை திரவ பதார்த்த மாக்கவும், சில உலோகங்களை ஒன்ருக்கவும் வல்லவர்கள். இதற்கு

வேர்கள், மூலிகைகள் இவைகளின் சாரை யும் உபயோகித்தனர். இவர்கள் தங்களது ஆராய்ச்சிகளை குரு சிஷ்ய பரம்பரையாக வெளியிட்டு வந்தனர்.

நாம் தமிழில் விஞ்ஞான சாஸ்திரங் கள் எழுதவேண்டும்! விஞ்ஞான ஆராய்ச்சி களிலும் ஈடுபடவேண்டும். சென்னை சர்வ கலாசாலையின் சார்பில் விஞ்ஞான சாஸ்திரங்களை மொழி பெயர்த்து வருகின் றனர். ஆனால் அவர்கள் அனுசரிக்கும் முறை விபரீதமானதாகும். ஹைடிரோ ஜன் என்பதை ஆப்ஜனகம் என்று மொழி பெயர்க்கின்றனர். மொழி பெயர்ப்பு இதற்கு மேலும் மோசமாக விருக்கிறது. இவ்விதமெல்லாம் சர்வ கலாசாலையின் சார்பில் நடக்கிறது.

விஞ்ஞான சாஸ்திரங்களை மொழி பெயர்ப்பதில் சிறந்த விதிகளை அநுசரிக்க வேண்டும். எளிதில் ஜனங்கள் கையா ளத்தக்கதும் பழக்கத்தில் சுலபமாகக் கூடியதுமான சொற்களால் மொழி பெயர்க்க வேண்டும். இவ்விஷயத்தில் பிரத்யேக தோரணையில் பலர் முயற்சி செய்து சித்தி யடைந்துள்ளனர். தமிழ் மொழியில் விஞ்ஞான சம்பந்தமான சொற்கள் என்னென்ன வென்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். இது முத லில் செய்யவேண்டிய வேலையாகும். நான் குறிப்பிட்ட வாத நூல்தகள் இவ்விஷயத் தில் மிக்க பயனுடையனவாகும். பாதி வேலை இந்த புத்தகங்களின் உதவியால் செய்து விடலாம். பெயர்கள் முதலியன வற்றை அப்படியே உபயோகிக்கலாம். தொழிலைக்குறிக்கும் வார்த்தைகளை தொழி லாகு பெயராக மொழி பெயர்க்க வேண் டும். ஞான நூல்களில் பல வார்த்தை கள் இருக்கின்றன. அவை கணிதநூல், தர்க்கநூல் இவைகளின் மொழி பெயர்ப் புக்குப் பேருதவி யாகும். இவ்வித வேலைக்கு பிரயாசை வேண்டும். தமிழ் மொழியை பல துறைகளில் உபயோகிக் கக் கூடுமென்பதில் தினையளவும் மிகையா காது. (பலத்த கரகோஷம்.)

தலைவர் தமது முடிவுரையில் சுவாமி விபுலானந்தர் செய்த அருமையான பிர சங்கங்களுக்கு வந்தனங் கூறியதுடன் விஞ்ஞான சாஸ்திர மொழி பெயர்ப்பு சம் பந்தமாக அவர் கூறிய யோசனைகள் மிக வும் பயனுடையன வென்று குறிப்பிட் டார்.

"தர்மாத்மா" ஹிந்தி படத்தில் நடித்துப் பேர்பெற்ற குழந்தை நடிகை வசந்தி.

சினிமா அழகி ஸ்ரீமதி. மாதுரி.

தமிழ் வருஷப்பிறப்பிற்காக-பிரத்தியேக-மஹத்தான-
— புரான சம்பந்தமான தமிழ்ப் பேசும் படம். --

# கருட கர்வ பங்கம்

ஹாஸ்யம், சங்கீதம் நிறைந்த உன்னதமான படம்!
ஆச்சரியம் !! வீரச்செயல்கள்!!! திடுக்கிடும் சம்பவங்கள் !!!!

மனதைக் கொள்ளைகொள்ளும் வனப்புமிக்க காட்சிகள்!
புத்திக்கெட்டாத அதிதீவிர திடுக்கிடும் சம்பவங்கள்!!
தெளிவான படப்பதிவு செய்த மிகவும் உன்னதமான
தமிழ்ப் பேசும் படக்காட்சி!!!

மிஸ்டர் R. பத்மநாபன் & பிரேம்சேத்ஜு
இவர்களின் மேற்பார்வையில் எடுக்கப்பட்டது.

வித்வான்-சீனிவாஸன், மிஸ். மோஹனம்பாள்,
* * சாமா முதலியவர்களும், * *
:: இன்னும் அநேக பிரபல நடிகர்களும் நடித்தது. ::

எதிர்பாருங்கள்!

## பிராட்வே டாக்கீஸில்

விவரங்களுக்கு எழுதுக:—

### ஓரியண்டல் பிலிம்ஸ்,

பார்க் டவுன், சென்னை.

# சீமாட்டி கார்த்தியாயினி

"ஜீவா"

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

இங்ஙனம் பிளாட்பாரத்திலிருந்தவர்கள் எதிர்பாராத இச் சம்பவத்தைக் கண்டு அங்கலாய்த்துக் கொண்டிருந்தனர். சிலர் சம்பவம் நடந்த இடத்துக்குத் துடிதுடித்து ஓடினர். இதற்குள், ரயில் கார்டும், டிரைவர், மற்றும் ஸ்டேஷன் மாஸ்டர் முதலிய உத்தியோகஸ்தர்களும் வந்து சேர்ந்தனர். அவர்கள் கூட்டத்தை விலக்கிக்கொண்டு, ரயில் பாதையில் இறங்கிப் பார்த்ததில், சுமார் 18-வயதுள்ள ஒரு இளம்பெண் சக்கரத்தினடியில் அகப்பட்டு இரத்தத்தில் மூழ்கியிருப்பதைக் கண்டனர். அவள் சக்கரத்தில் சிக்கலாக மாட்டிக்கொண்டு அறைபட்டிருந்ததால், அவ்விடத்தினின்றும் அவளையெடுக்க அதிகாரிகள் செய்த முயற்சி கைகூடவில்லை. மேலும் அப்போதுதான் அப்பெண்ணின் உயிரும் பிரிந்து கொண்டிருந்தது. எனவே, ரயில்வே அதிகாரிகள் விசனத்தோடு அவ்விடத்தைவிட்டு வெளியேறினர். பின்னர், போலீசார் ரயிலை மெதுவாக நகர்த்தச் செய்து வேலையாட்களை விட்டு அப்பெண்ணின் பிரேதத்தை அப்புறப்படுத்தி பிரேத பரிசோதனைக்கு எடுத்துச் சென்றனர்.

இப் பெண்ணுக்கு நேர்ந்த பிராணாபத்து சம்பந்தமாய் விசாரணை செய்ததில், பெண்களுக்கென்று தனியாக ஏற்பட்டிருக்கும் கம்பார்ட்மெண்டில் அவளோடு பிரயாணஞ் செய்த மாதொருத்தி வாயிலாக நடந்த விஷயம் வெளியாயிற்று. அதாவது, ரயில் இந்த ஸ்டேஷனில் வந்து நின்றதும், பலர் இறங்கினர்; அச் சமயம் விபத்துக்காளான பெண் தூங்கிக்கொண்டிருந்தாள். இவளுக்கு எதிரே யுட்கார்ந்திருந்த மாது (தகவல் கொடுத்தவள்) தன்னைப்போல் இவளும் வேறு ஸ்டேஷனில் இறங்கவேண்டும் போலுமென நினைத்ததால் பேசாமலிருந்தாள். ஆனால், ரயில் பிகில் ஊதிப் புறப்பட்டதும், அச் சப்தத்தைக் கேட்டோ என்னவோ திடுக்கிட்டு விழித்த அப்பெண் ரயில் போவதைக் கண்டு பரபரப்பாக எழுந்து தன் மூட்டை முடிச்சுகளையெல்லாம் எடுத்துக்கொண்டு அவசரத்தோடு கதவைத் திறந்தாள். இதைக்கண்டு அம்மாது ரயில் போகையில் இறங்கினால் ஆபத்து நேரும் எனக் கூறித் தடுத்துங் கேளாது அப்பெண் இறங்கியதால், கால் தவறிப் பிளாட்பாரத்தில் விழுந்துருண்டு சக்கரத்தினடியில் சிக்கிக் கோர மரணத்தை யடைந்தாள் என்பதாம்.

இப் பரிதாபகரமான மரணத்தைப் பற்றி ஸர். பரமேஸ்வரன் பிள்ளையும், மற்றவர்களும் சிறிதுநேரம் அநுதாபமாகப் பேசிய பின்னர், கவனத்தை வேறு வழியில் திருப்பினர். ஆனால் நமது கதா

நாயகியான கார்த்தியாயினி மட்டும் அக்கோர சம்பவத்தைக் கண்டதனால் பெரிதும் பாதிக்கப்பட்டாள் என்றே கூற வேண்டும். அவ்விளம் பெண்ணின் பரிதாப மரணக் காட்சி அவள் உள்ளத்தில் போட்டோ பிடிக்கப்பட்டதுபோல், அப்படியே பதிந்துவிட்டது. அவள் கண்களிலும் அது காட்சியளித்துக்கொண்டேயிருந்தது. அறிவு சோகத்தில் இலயித்துப் போயிருந்தமையால், மற்றவர்கள் பேசுவது இவள் காதுகளில் விழவில்லை. அவள் தனது இயற்கையான உற்சாகத்தை யிழந்து, சம்பவம் நடந்த இடத்தையே நோக்கியவண்ணம் தன்னை மறந்து அசைவற்று நின்றிருந்தாள். சிவசைலம் ஸர். பரமேஸ்வரன் பிள்ளையிடமும், தன் தாயிடமும் உரையாடிய வண்ணம் கார்த்தியாயினியைக் கடைக்கணித்துக் கொண்டிருந்தான்.

ஸர். பரமேஸ்வரன் பிள்ளை கார்த்தியாயினியை நோக்கி, தங்களுக்காக மோட்டார் காத்திருக்கிறது எனக்கூறி யழைத்த பிறகே, அவள் தன் நினைவைப் பெற்றாள். சிவசைலத்தின் தாயார் கடைசியாக இவளுக்கு நன்றி மொழிகளைக் கூறி விடை பெற்றாள். இவளும் அச்சமயம் தனக்குத் தோன்றியபடி பதில் கூறி விடை பெற்றுப் பிரிந்தாள். அவள் இயந்திரப் பதுமைபோல் இயங்கி தன் தமையனோடு நடந்து சென்று மோட்டாரை யடைந்தாளே யன்றி, இயற்கையாகச் சென்றதாகக் கூறமுடியாது.

கார்த்தியாயினி காரில் ஏறிச் செல்லும் வரை அவள் இருக்கும் திசையையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த சிவசைலம், கார் கண்ணுக்கு மறைந்ததும் பெருமூச் செறிந்தான். அவன் தன் தாயோடு க்ஷேமலாபங்களை விசாரித்து வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாலும் அவன் மனம் என்னமோ கார்த்தியாயினியின் பின்னேயே சென்று கொண்டிருந்தது.

அவன் கார்த்தியாயினியை முதலில் தற்செயலாகச் சந்தித்த போது, அவள் தன்னை நோக்கிய நோக்கைக் கொண்டே பெரிய பெரிய மனக்கோட்டை கட்டி ஆசையை வளர்த்தான். பரமேஸ்வரன் பிள்ளைக்கும், அவளுக்கும் இடையே நடந்த சம்பாஷணையிலிருந்து கார்த்தியாயினி திவானுடைய மூத்த சகோதரி யென்றும், அவளுக்குக் கலியாணமாகி விட்டதென்றும் தெரிந்ததும், அவனது மனக் கோட்டையின் மீது இடி விழுந்தது போலாயிற்று. அதற்கப்புறம் அவள் தன்னைக் கடைக் கண்ணால் கூடக் கவனிக்காததையும், தன் தாயினிடம் விடை பெற்றுச் செல்லும் போதும் கூட தன்னைத் திரும்பியும் பார்க்காது சென்றதையும் நினைத்ததும் ஏற்கனவே இடிந்த மனக்கோட்டை மண்ணாய்—தரைமட்டமாயிற்று. சிறிது நேர நிகழ்ச்சியிலும், மாறுதலிலும் அவன் அடைந்த மன வேதனைக்கு அளவேயில்லை. வழி நெடுக அவனது தாய் கார்த்திகையாயினியின் குணாதிசயங்களைப் பற்றி வானமளாவப் புகழ்ந்து வந்தது அவனுக்கு எரியும் நெருப்பில் நெய்யை விட்டது போலிருந்தது. அவன் மனம் எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணி யெண்ணிப் புண்ணாகியது. உல்லாச புருஷனாய் உலவிவரும் அவன், உற்சாகஞ் சிறிதுமின்றி உன்மத்தங் கொண்டவன் போலிருப்பதைக் கண்டு, அவனது வீட்டிலுள்ள வேலைக்காரர்களும், நண்பர்களும் ஆச்சரிய முற்றனர். தன் தாயைத் தக்கவாறு உபசரிக்க வேண்டுமென்று வேலைக்காரர்களுக்குக் கட்டளையிட்டு விட்டு ஆபீஸுக்குச் சென்றான். ஏதோ போய்த் தொலைய வேண்டுமே என அவன் ஆபீஸுக்குப் போய் இயந்திரம் போல் இயங்கினானே யொழிய, அன்று அவனால் சரியாக வேலையைக் கவனிக்க முடியவில்லை. எடுத்த காரியத்தை யெல்லாம் தவறு செய்தான். இவனது இம் மாறுதலைக் கண்ட அங்குள்ளவர்கள் வியப்புற்றனர். இவனிடம் நெருங்கிய தொடர்புள்ள சிலர் கேலி செய்தனர். சிவசைலத்தின் கண்முன் கார்த்தியாயினியின் அழகிய உருவமே நடனமாடிக் கொண்டிருந்ததால்,

இவர்களது புரளியெல்லாம் அவன் செவியிலேறவில்லை.

ஆபீஸை விட்டதும், யாருடனும் கலந்து எங்குஞ் செல்லாமல் நேராக வீட்டை யடைந்தான். 'நாம் பிரிந்து வந்து நீண்ட நாளைக்குப் பிறகு நம் தாய் வந்திருக்கிறாளே; அவளோடு சிறிது நேரமாயினும் பேச வேண்டுமே' என்ற எண்ணங்கூட அவனுக்கு ஏற்படவில்லை. தன் அறையை யடைந்து கதவைத் தாளிட்டான். சட்டை முதலியவைகளைக் கழற்றி ஒரு புறம் எறிந்து விட்டு, நிம்மதியின்றி இப்படியும் அப்படியுமாக உலாவலானான். கடைசியாக அலுத்துப் போய்ப் படுக்கையில் சாய்ந்தான். அங்கும் அவனுக்கு இருக்கை கொள்ளவில்லை. திவான் மாளிகைக்குப் போய் தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அவ் வழகியை மீண்டும் கண்ணாரக் கண்டுவிட்டு வந்தாலென்ன! அப்போதாயினும், மனம் அமைதியடையாதா!' என்ற எண்ணம் அவன் மனதிலுதிக்கவே, திடீரென படுக்கையை விட்டு அவன் எழுந்தான். ஆனால், அடுத்த கணம் தயங்கி அப்படியே உட்கார்ந்துவிட்டான். 'எப்படி திவான் மாளிகைக்குப் போவது? எம் முகாந்திரத்தை யொட்டிசெல்வது? திவான் தன் வருகையைக் குறித்துத் தவறாக நினைத்து விட்டால் என்ன செய்வது? அப்படித்தான் சென்றாலும், கார்த்தியாயினியைப் பார்க்க முடியுமா?' என்றெல்லாம் தனக்குள்ளாகவே வினவிக் கொண்டான். இதற்கு முன்னெல்லாம் சிவசைலம் உத்தியோக முறையிலேயன்றி எவ்வித அலுவலுமின்றியேஎந்நேரத்திலும் திவான் மாளிகைக்குப் பல முறை சென்றுவருவான்; திவான் இல்லாத சமயத்தில் கூட மணிக்கணக்காக தேவகியோடு பேசிக்கொண்டிருப்பான்! அப்போதெல்லாம் இவனுக்கு இவ்வித அச்சம் அல்லது ஐயம் ஏற்பட்டதில்லை. ஆனால், இச்சமயமோ அச்சமும் நாணமும் அவனது ஆண்மையை இருந்தவிடந் தெரியாமல் அடக்கிவிட்டது. எனவே, மீண்டும் படுக்கையில் சாய்ந்தான்.

இச்சமயம், அறைக்கதவை யாரோ பலமாகத் தட்டும் சப்தம் அவன் காதில் விழுந்தது. மிகுந்த எரிச்சலோடு போய்க் கதவைத் திறந்தான். சமையல்காரன் சமையல் தயாராகி வெகு நாழிகையானதாகக் குறிப்பிட்டுச் சாப்பிட அழைத்தான். அவனுக்கு ஆத்திரத்தோடு பதில் சொல்லியனுப்ப வாயெடுக்கையில் அவனது விதவைத் தாய் அங்கு வந்து சேர்ந்து, "என்ன சிவா! ரொம்ப நாழியாய்விட்டதே! இன்னஞ்சாப்பிடாதிருந்தால் உடம்பு கெட்டுவிடாதா! வா அப்பா சாப்பிட!" எனத் தன் மகனைப் பரிவோடு அழைத்தார். இதுதான் சமயமென்று சமையற்காரன் மெல்ல அவ்விடத்தை விட்டு நழுவிவிட்டான்.

சிவசைலம் தலைகுனிந்த வண்ணம், "அம்மா! எனக்கு உடம்பு என்னமோ போலிருக்கிறது! ஒன்றுஞ் சாப்பிடாமல் போட்டால் நன்றாயிருக்குமென நினைக்கிறேன்.—நீ சாப்பிட்டாயா அம்மா!" என்று கேட்டான்.

"நான் சாப்பிடுவது இருக்கட்டும். சாகப்போகிற கிழமாகிய எனக்குத்தானா முழுகிப்போய்விட்டது!—உடம்பு என்ன பண்ணுகிறது? கஷாயங் கொஞ்சம் போட்டுக் கொடுக்கச் சொல்லட்டுமா!" என்று அந்தம்மாள் பதைபதைப்போடு கேட்டார்.

சிவசைலம் முகத்தைக் சுளித்துக் கொண்டு, "ஒன்றும் வேண்டாம் அம்மா! சற்று நிம்மதியாய்ப் படுத்துறங்கினால் சரியாய்ப் போய்விடும். நீ போய்ச் சாப்பிடம்மா!—அடேய்! சுப்பா! அம்மாவைச் சாப்பிடச்செய்" என்று கூவினான்.

அதற்குமேல் சிவகாமி யம்மாளால் ஒன்றும் சொல்லி வற்புறுத்த முடியவில்லை. எனவே, அவ்விடத்தை விட்டு நடந்தார். உடனே சிவசைலம் கதவைத் தடாலென்று சாத்திவிட்டு, படுக்கையில் போய் தொபீலென விழுந்தான். அன்றெல்லாம் அவன் உணவருந்தவில்லை. உணவிலோ மற்றவற்றிலோ அவனுக்குக் கவனஞ் செல்லவில்லை. எல்லாவற்றையும் மறந்தான்.

படுக்கையில் பாம்பாய் புரண்டான். அவன் காதுகளில் "கார்த்திகா!" "கார்த்திகா!!" என்ற பெயரே ஒலித்துக்கொண்டிருந்தது. அப்பெயரையே பஞ்சாட்சர மந்திரம்போல மனனஞ் செய்து கொண்டிருந்தான். சிறிது நேரஞ் சென்றதும், இந்நினைவை மறந்து தூங்க கண்களை இறுக மூடிக்கொண்டான். குப்புறக் கவிழ்ந்து படுத்தான். எவ்விதஞ் செய்தும் அவனுக்குக் கொஞ்சமுந் தூக்கம் வரவில்லை. திரும்பி மல்லாந்து படுத்துக் கண்களைத் திறந்து பார்த்தான். கட்டிலினருகே கார்த்தியாயினியின் உருவம் வந்து நிற்பது போல் அவன் கண்களுக்குப் புலப்பட்டது. அவனுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. 'இவள் ஏன் இங்கு வந்தாள். ஒரு வேளை, நான் அவள் மீது காதல் கொண்டு வாடுகிறேன் என்பதையறிந்து தான், எனது வாட்டத்தைத் தீர்க்க வந்தாளோ! அல்லது, என்னைப் போலவே, அவளும் என்னைக் கண்டது முதல் காதலால் கவரப்பட்டு, என்னிடந் தன் கருத்தைத் தெரிவித்து குறையிரக்க என்னை நாடி வந்தாளோ! எதற்கும் என் உள்ளங் கொள்ளை கொண்ட அந்த ரமணியை எதிர் கொண்டு வரவேற்போம்' என்று அவசரமாக எழுந்தான். கார்த்தியாயினியைத் தழுவிக் கொள்ள ஆவலோடு ஓடினான். ஆனால், அவன் கடைசியாக ஏமாந்தான். அவன் ஆர்வத்துடன் தழுவிக் கொள்ள போன இடத்தில் சுவற்றில் முட்டிக் கொண்டான். அவனது சித்தப் பிரமையே கார்த்தியாயினியின் உருவெளித் தோற்றமாகத் தோன்றியது. இவ்விதம், பல முறை அவன் கண்முன் கார்த்தியாயினியின் உருவெளித் தோற்றம் காணப்படுவதும், சிவசைலம் அடிக்கடி அதைக் கண்டு மயங்கி ஏமாறுவதுமாயிருந்து முடிவில் அலுத்துப் போனான். அப்போதும் அவனுக்கு உறக்கம் வரவில்லை. பத்து, பதினொன்று, பனிரெண்டு, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என அறையிலுள்ள கடியாரம் மணி யடித்துக் கொண்டேயிருந்தது. கண்ணை மூடிக்கொண்டு மனக் கண்ணில் கார்த்தியாயினியின் உருவத்தைக் கண்டு அவளது நாமத்தை மனனஞ் செய்து கொண்டிருந்த சிவசைலம் மணி யடிக்கும் ஒவ்வொரு சமயத்திலும், கண்ணைத் திறந்து கடியாரத்தை நிமிர்ந்து பார்த்துக் கொள்வான். இவ்வாறு அவன் இரவைக் கழித்துக் கொண்டிருந்தான்.

ஸர். பரமேஸ்வரன் பிள்ளையோடு மோட்டாரில் சென்ற கார்த்தியாயினியோ எதிர்பாராதவாறு கோர சம்பவத்தைக் கண்டதனால் மனக்கலக்க முற்று அதே நினைவால் விழுங்கப்பட்டிருந்தாள். ஆயினும், மாளிகையை யடைந்ததும், சகோதரர், அண்ணி, தங்கை முதலியவர்களின் குதூகல வரவேற்பிலும், க்ஷேமலாபப் பேச்சிலும் கலந்து கொண்டமையால், அவள் உள்ளத்திலிருந்து அக் கோரமான நினைவு மெல்ல மெல்ல மறையலாயிற்று. கார்த்தியாயினியின் வருகை, தேவகிக்கும், கமலாதேவிக்கும் அவளது குழந்தைகளுக்கும் பெருத்த மகிழ்ச்சியை உண்டு பண்ணியது. அவர்கள் அவளைச் சிறிது நேரமும் விட்டுப்பிரியாமல் சூழ்ந்து கொண்டு, பலபல விஷயங்களைப் பற்றிப் பேசி மகிழ்ந்தனர். இவளும் தன் இயற்கையான உற்சாகப் போக்கோடு மனங் கலந்து உரையாடினாள். தன் தங்கையைத் தழுவிக்கொண்டாள். சகோதரர் குழந்தைகளை ஆர்வத்தோடு தன் இருகைகளாலும் அணைத்து அவைகளின் களங்கமற்ற முகங்களில் முத்தமிட்டு உச்சி மோந்து மகிழ்ந்தாள். தான் நாகரிகம் மிக்க நகரில் வாழ்பவளென்றோ, பெரும் பதவி வகிக்கும் ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டவளென்றோ பெருமிதமின்றி யாவருடனும் சமத்துவமாகவே நடந்து கொண்டாள். ஆனால், திவான் மாளிகையிலிருப்பவர்கள் இவளை "சீமாட்டி! சீமாட்டி!" என்றே மரியாதையாக அழைத்தனர்.

திவான் சகோதரி வந்திருக்கிறாளென்றால், தடபுடலுக்குச் சொல்லவா வேண்டும்! விருந்து வேடிக்கை முதலியன ஆடம்பரமாக நடந்தது. எல்லா சந்தடியு மடங்கி, கார்த்தியாயினி ரயிலில் நெடுந்தூரம் வந்த பிரயாணக் களைப்பைத்

தீர்த்துக்கொள்ள இரவு பதினெரு மணிக்கே ஒய்வு கிடைத்தது. அச் சமயத்திலும், தேவகி பக்கத்துக் கட்டிலில் படுத்துக்கொண்டு ஏதேதோ கூறிக்கொண்டிருந்தாள். கார்த்தியாயினி அவைகளைக் கேட்ட வண்ணமே உறங்கி விட்டாள். அவ்வளவு ஆழ்ந்த தூக்கத்திலும் இரண்டொருமுறை சிவசைலத்தின் கம்பீர உருவம் அவளது மனக்கண்ணில் காட்சியளித்தது; அவனைப்பற்றி அவள் கனக் கண்டாள் என்றால் அதில் ஆச்சரியமென்ன விருக்கிறது!

(தொடரும்.)

"கோடீஸ்வரன்" என்னும் ஹிந்தி பேசும் படத்தில் ஒரு காட்சி.

மதராஸ் யுனைடெட் ஆர்ட்டிஸ்ட்
கார்ப்பொரேஷன் கம்பெனியாரின்

மகத்தான படம்! எதிர்பாருங்கள்!!

பாபநாசம் சிவன் நடித்த

# 'பக்த-குசேலா'

(தமிழ் பேசும் படம்)

இனியகானம், பக்தி, சோகம், ஹாஸ்யம் மற்றும்
எச்சுவையும் பொருந்திய அற்புத படமிதுவே!

<u>மற்றும் பிரக்யாதிபெற்ற நடிகர்கள்.</u>

ஸ்ரீமதி S D சுப்புலக்ஷிமி
S. S. மணி பாகவதர்
ஜாலி·கிட்டு ஐயர்
வித்வான்-சங்கரலிங்கம்
ஜி. பட்டு ஐயர்
பாலசரஸ்வதி என்னும் 7-வயது [பெண்
K. K. பார்வதி
குஞ்சிதபாதம் பிள்ளை

டைரெக்ஷன்:—K. சுப்பிரமணியம், B. A., B. L.

— உதவி டைரக்டர்:—சி. எஸ். வி. ஐயர். —

R. C. A. சௌண்டு முறையில் தயாரித்தது.

தமிழ் புது வருஷப் பிறப்பு தினத்தன்று
தென்னிந்திய பிரபல
தியேட்டர்களில் ஆரம்பம்.

விவரங்களுக்கு எழுதவும்:—Madras United Artistes Corporation,
7, Bell's Road, Triplicane, Madras.
தந்தி: "நவீன"

# மானம் பெரிதோ? வாழ்வு பெரிதோ?

—:(0):—

(எஸ். கே. கணேசன்.)

[முன்னுரை:— தமது ஆஸ்தியில் பெரும் பாகத்தைச் செலவழித்து, சுதாகர் தன் மைந்தனான தாமோதரனை M. A. வரை படிக்க வைத்தார். மேலும், அவனை சீமைக்கனுப்பி படிக்க வைக்க வேண்டுமென்பது அவரது பேரவா. தம்முடைய பொருளாதாரம் அதற்கு இடங் கொடாமையால், சுதாகர், அவ் வெண்ணத்தைக் கைவிட வேண்டியதாயிற்று.

வாசிப்பை நிறுத்தியவுடன், தன் மனைவி, தாமோதரனுக்குச் சீக்கிரமாகவே கலியாணம் செய்து பார்க்க வேண்டுமென்று நீண்ட நாளாய் கரையான் அரிப்பது போல் அரித்து வந்தமையால், சுதாகரர் அதற்கு வேண்டியது ஏற்பாடுகளைச் செய்து முடிக்கலானார். கடைசியாகத் 'தாமோதரன்' மேல் கணவன் என்று பாரத்தைச் சுமத்தி வைத்தார். சில நாள் கழிந்து சுதாகரும் அவர் மனைவியும் நோய் வாய்ப்பட்டு விண்ணுலகுக் கேக, குடும்ப பாரம் முழுவதும் தாமோதரன் தலையில் உறைக்கலாயிற்று. பிதிரார்ஜித சொத்துக்கள் யாவும் தன் படிப்புக்கும் கலியாணச் சிலவிற்கும் போக மிஞ்சியது அவனது M. A. பட்டமே.

M. A. பட்டம் சோறு போடுமா? ஆதலால் பிழைப்புக்காக உத்தியோக வேட்டையாடலானான். என் செய்வது? பிரமப் பிரயத்தனஞ் செய்து பார்த்தும் வேலை யாதும் கிடைத்திலது. அலைந்து, அலைந்து அலுத்து, மனமுடைந்து கருக்குங் காலையில் கருணாகரனிடமிருந்து ஓர் கடிதம் வந்தது. கருணாகரன் தாமோதரனுடன் வாசித்தவன். அன்றியும், தூர பந்து, அவனுடைய அதிர்ஷ்டம், இங்கிலாந்து சென்று I. C. S. பாஸ் பண்ணி திரும்பி வந்ததுமே டிப்டி கலெக்டர் உத்தியோகங் கிடைத்தது. தாமோதரனோ பந்து வென்ற முறைமையில் அவனிடம் செல்லவில்லை. அப்படியிருக்க, கருணாகரன் தாமோதரனைத் தன் ஆபீஸில் ஹெட்கிளர்க் உத்தியோகம் செய்து வைப்பதற்காக வரும்படி வலிய கடிதம் எழுதியதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டுமல்லவா?

கருணாகரன், கடிதப்படி தன் ஆபீஸில் உத்யோகம் வாங்கிக் கொடுத்ததுமன்னியில், தன் பங்களாவிற்குப் பக்கத்திலேயே தாமோதரனுக்கு ஜாகையும் அமர்த்திக் கொடுத்திருந்தான்.]

## II

கலெக்டர் கருணாகரன், ஒரு நாள் மாலை தன் பங்களாவின் மேன் மாடியில், ஜன்னலுக் கருகே, ஓர் சோபாவிலமர்ந்து எதிரே காணும் இன்ப (இயற்கை) க் காட்சிகளை அனுபவித்துக் கொண்டிருந்தான். அத் தருணம், தென்னற் காற்று தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. தாமோதரனுடைய மனைவி உமா, தண்ணீர்க் குடத்தை இடுப்பில் கொண்டு வீட்டின் பின்புறமுள்ள அழகிய சிறு தோட்டத்திற்கு ஜலம் திரட்டுவதற்காக வந்து கொண்டிருந்தாள்.

மரங்களினூடே ஊடுருவிப் பாய்ந்து சென்ற பகலவனது மஞ்சட் கிரணங்கள் அவளது மேனியிற் பட்டுப் பிரகாசித்தன. சற்றே சிவந்த சரீரமும், கண்டோர் மருளும் கண்களும், அலைகளின் மேல் விற் போன்று வளைந்த புருவமும் அகன்ற நெற்றியும், கூரிய நாசியும், சிவந்த உதடுகளின் நடுவே முத்துதிர்ந்தாற் போன்ற பற்களும், அழகிய கரங்களும், சிற்றிடையும், நீண்ட காற்களும், நடுத்தரமான உயரமும் அவளுடைய அழகை எடுத்துக் காட்டும்.

உமாவைப் பற்றி கருணாகரனுக்கு நெடு நாட்களாகத் தெரியும். உமாவையே மணம் செய்து கொள்ள வேண்டுமென்று அவளுடைய பெற்றோர்களின் சம்மதத்தைக் கேட்டான். ஆனால், அவர்கள் கருணாகரனின் நடத்தையை யறிந்தவர்களாதலால், பெண் கொடுக்க மறுத்து விட்டார்கள். அதிலிருந்து அவனுக்கு உமாவின் மேல் ஒரு கண். பிறகு அவன் வாசிப்பிற்காக இங்கிலாந்து சென்றிருக்கும் போது தான் உமா தாமோதரனுக்கு வாழ்க்கைப் பட்டது. இதை யெல்லாம் நன் கறிந்தே கருணாகரன் தாமோதரனை அருகி லழைத்துக் கொண்டான். பாரமார்த்திகனான தாமோதரன் இவனெண்ணத்தைச் சிறிதும் அறிந்தானில்லை. ஆனால் அவன் ஓர் மானி. அதற்காக உயிரையும் தியாகஞ் செய்யக் கூடியவன். அப்பேர்ப்பட்ட குடும்பத்தில் உதித்தவன்.

கௌரவம் மிகுந்த ஓர் கலெக்டர் பதவியைக் கருணாகரன் பெற்றிருந்தும், அவனுடைய அற்ப குணம் மாத்திரம் அவனை விட்டு விலக வில்லை. உமா உல்லாசமாகத் தண்ணீருக்குச் செல்வதைக் கண்டதும் அவனது மயிர்கள் சிலிர்த்தன. மனந் துடித்தது. பிறப்பினாலாய பயனென்று நினைத்தான். பெருமூச் செறிந்தான். ஏற்ற துன் மந்திரியாய மனம் அதற்கேற்ற மருந்தைத் தேடப் புறப்பட்டது.

## III

நடு நிசி. அன்று தாமோதரன் ஊரிலில்லை. இரண்டு நாள் செல்லும் திரும்பி வர. வீட்டில் உமாவும் வேலைக்காரியுமே ஒருவருக்கொருவர் துணை.

உமா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். தாள் போடப்பட்டிருந்த கொல்லைக் கதவு மெதுவாகத் திறந்து வழி விட, ஓர் மனிதன் உள்ளே நுழைந்தான். மறுபடியும் கதவு தாளிடப்பட்டது.



உமாவின் படுக்கையறையை யடைந்ததும் மனிதன், அவளுடைய அழகை கண்களாற் பருகினான். காமப் பைத்தியம் தலைக்கேறியது. மெதுவாக அவளுடைய கால்களைப் பற்றினான். முதலில் தூக்க மயக்கத்தில் இருந்த உமா புரண்டு படுத்துக் கொண்டாள். மறுபடியும், பற்றவே அவள் விழித்துக் கொண்டாள். கருணாகரன் எதிரே பல்லையிளித்துக் கொண்டு நிற்பதைக் காணவே அவள் சீறினாள். கண்கள் நெருப்பைக் கக்கின. ஆத்திரம் நெஞ்சை யடைத்தது. வேலைக்காரியைக் கூப்பிட்டழைத்தும் பயனில்லையாதலான், ஸ்தம்பித்தாள்.

இவளுடைய தன்மையையும் ஸ்வரூபத்தையுங்கண்ட கருணாகரன் நடுங்கினான். ஆனால், காமம் தலைக்கேற அவள் அடிகளில் வீழ்ந்து பணிந்தான். கெஞ்சினான்.

உமா திகைத்தாள், ஓர் கலெக்டர்—மேலான பதவியிலிருப்பவன் அவளுடைய காலில் வீழ்ந்து கெஞ்சியது அவளுக்குப் பிரமையைத் தந்தது. சித்திரம்போல் அசைவற்றுத் தன்னுணர்வை யிழந்தாள்.

கருணாகரன் எழுந்தான். அவள் சம்மதித்தாளென்றெண்ணி அவளைப் படுக்கையில் கிடத்தினான். அவன் ஆவலை பூர்த்திசெய்து கொண்டான்! என்னே! கயவர்களின் சூது!

மீண்டும் உணர்வைப் பெற்றாள் உமா தன்னையறிந்தாள்; நிலைமையை உணர்ந்தாள். தாங்கொணாக் கோபம் உண்டாயது. தன்னுடைய கற்பைப் பங்கப்படுத்திய அக்கயவனை வெருண்டு நோக்கினாள். கண்

கள் சிவந்தன. உடம்பு துடிதுடித்தது. தன்னுடைய உயிர் இனி இப்புவியிலிருப்பதில் பிரயோஜன மன்றென அறிந்தாள். எதிரில் நின்றிருந்த கருணாகரன் அவளுடைய சீற்றத்துக்குப் பாத்திரமாய் ஆத்திரமூட்டினன். சரியானபடி வஞ்சந் தீர்த்துக் கொள்ள எண்ணினள் உமா. அன்றியும் அவன் உயிருடனிருந்தால் இன்னும் எத்தனை பெயரின் கற்புக்கு உலை வைப்பானோ?

பக்கத்திலிருந்த நிலைக்கண்ணாடியைத் தாக்கினள். கலகலவென உதிர்ந்து உடைந்தது அக்கண்ணாடி. பார்த்தார் கலெக்டர். பிடித்தார் ஓட்டம். அவள் கொண்ட கோலம் அவருக்குப் பயத்தைத் தந்தது.

உமா விடவில்லை. அவர் மேல் குறிப்பாக எறிந்தாள் கண்ணாடித் துண்டை. அது கலெக்டரின் உடலிலிருந்த இரத்தத்தை வடிக்கட்டிய பிறகே சீற்றந்தணிந்தது

மீண்டும் யோசித்தாள், தன் காதலனுக்கு ஓர் காதுவரி கிறுக்கி வைத்துவிட்டு அவனுடைய எதிரே தன் பாவியின் பொருள்களாகிய அனைத்தையும் தோன்றுபடி சேகரித்து மண்ணெண்ணையை விட்டுக் கொளுத்தி விட்டு, அவளும் நெருப்பிலிறங்கிப் பரிசுத்தம் செய்து கொண்டாள்.

மானியாகிய தாமோதரனும் தன் வாழ்வில் கறையே பட்டதை அறிந்ததும் விஷத்தை யுண்டு உயிர் துறந்தான்.

மான மழிந்த பின்னர்
வாழ்வது முண்டோ முன்னர்
ஈனமாய் வாழ்கின்றீரே—ஜெகத்தீர்
இழிவையினி பொறுத்திடுவீர்.

—

100 விடைகள் அனுப்புபவர் எழுதினுல் நேரில் திறந்து விலாசத்துடன் முடிவு பிரசுரிப்போம்

நூதன கூட்டல் போட்டிப் பரிசு—5

**ரொக்கப் பரிசு ரூ. 2000.**

முடிவு தேதி 18—4—36.

| | | |
|---|---|---|
| × | 3 | × |
| 6 | × | 4 |
| × | 7 | × |
| 7 | × | 5 |
| 15 | 7 | 7 |

சரியான விடைக்கு ரூ. 1500. 1-தப்புள்ள விடையனுப்பும் ஒவ்வொருவருக்கும் பரிசு ரூ. 50. எண்ணிக்கையில் அதிக விடை அனுப்புவோருக்கு பரிசு ரூ. 200, 100. 11-4-36-க்குள் வரும் சரியான விடைக்கு ரூ. 50.

× இக்குறியிட்ட இடத்தில் ஒவ்வொரு எண்வீதம் பூர்த்தி செய்து கூட்டி தனி காகிதத்தில் எழுதி விடை 1-க்கு அணு 4 வீதம் M. O. செய்த ரசீதுடன் விடை 18-4-36-க்குள் வரவேண்டும். பரிசும், முடிவும் 21-4-36-ல் அனுப்புவோம். மானேஜர் தீர்ப்பே முடிவானது. விடையுடன் ½-அணு ஸ்டாம்பு முடிவிற்காக அனுப்பவும்.

மானேஜர், தமிழ் போட்டிப் பந்தய நிலையம் (A), திருவண்ணாமலை.

# எனக்கா கல்யாணம்!

(கே. வி. சிவசுப்ரமணியன், பி. ஏ.)

பரீக்ஷை முடிந்தது. பேய் போல் கண்விழிக்கும் வேலையும் ஒழிந்தது. காலையில் சிற்றுண்டியும் தேநீரும் அருந்திவிட்டு மேல் மாடிக்குச் சென்று, "உஸ் அப்பாடா! அலுப்பு ஒழிந்தது. இனிமேல் இன்றைய பொழுதை அளவிலா மகிழ்ச்சியுடன் ஜாலியாகக் கழிக்கலாம்" என்று கூறிக் கொண்டே சான்வாஸில் அமர்ந்தேன். மேல் நடக்க வேண்டியவைகளைப் பற்றி பிளான் போட ஆரம்பித்தேன். சூரியனும் பள பளவென்று செங் கிரணங்களை வீசி நீலவானில் ஏறினான். அன்றிரவு "மேனகா"வுக்குப் போவதென ஒருவாறு தீர்மானித்தேன். என் கை ஸ்பரிசத்திற்காக கடந்த 8 வாரங்களாக பீரோவில் காத்துக்கொண்டிருந்த "பிரசண்ட விகடன்" மீது என் எண்ணம் திடீரென்று பாய்ந்தது. உடனே எழுந்து அவற்றை எடுத்து வந்து இப்படியும் அப்படியும் புரட்டிக் கொண்டிருந்தேன்.

கடிகாரம் "டிங் டிங்" என்று பதினொரு முறை சப்தம் செய்தது. ஐந்து நிமிஷங்கள் சென்றன. "ஸார் ஆர்" என்ற வண்ணம் "டப் டப்" என்று கதவிடம் சத்தம் கேட்டது. அந்தக் குரல் போஸ்ட் மான் பெத்தண்ண செட்டியினுடையது என ஊகித்தறிந்தேன். உடனே பேராவலுடன் சென்று கதவைத் திறந்தேன். சுமார் 10 வருஷத்திற்கு முன் தைத்த காக்கி யூனிபாரத்தை பொம்மைக்கு மாட்டினது போல் தொள தொளவென்று மாட்டிக் கொண்டு 9 முழத்திற்குக் குறையாத காக்கித் தலைப் பாகையுடன் பெருத்த ஜீவனுள்ள பெத்தண்ண செட்டியைக் கண்டேன். மாதக் கணக்காக தண்ணீர் காணாத துணிகளைத் தரித்து கரிய நெற்றியில் பெரிய பட்டை நாமம் தரித்திருக்கும் செட்டியாரே எங்கள் ஊர்க் குழந்தைகளுக்கு பூச்சாண்டியாக விளங்கினான்.

"இந்தாங்கோ ஸார். ரொம்ப விசேஷமான கவர் ஒண்ணு ஒங்குளுக்கு வந்திருக்கு சார்" என்றான் ஒரு கடிதத்தை நீட்டி.

"கவருக்குள் இருக்கும் சங்கதி விசேஷமானதென்று உனக்கு எப்படியப்பா தெரியும்!" என்றேன் சிரித்த வண்ணம்.

"இது தெரிலிங்களா. அப்படி சொன்னா தானே நீங்க சந்தோசமா நம்பிளுக்கு பொரசெண்டேஸன் ஏதாவது செய்வீங்கோ" என்று கூறி நாணிக் கோணி தலையை சொரிந்த வண்ணம் நின்றான். நானும் என் மணிபர்ஸிலிருந்த ஒரு சதுர நிக்கல் நாணயத்தை அவன் பைக்குள் போம்படிச் செய்தேன். "நல்லது. வர்ரேன் ஷாமுக மிருக்கிட்டுங்க" என்று கூறிப் போய் விட்டான். நாற்காலியில் சாய்ந்த வண்ணம் கடிதத்தை உடைத்துப் படிக்க ஆரம்பித்தேன்.

தஞ்சாவூர்.

15—1—36.

நீ கடந்த எட்டாந் தேதி கட்டாரத்துடன் திட்டமாய் வரைந்த லெட்டரைக் கண்டு களித்தேன். இவ்விடம் உனது மாமன் கங்காதரனுக்கு விவாகம் இனிது நடந்தேறியது. இக் கல்யாணத்

திற்கு இராமநாதபுரம் ஜில்லா ஸப்ஜட்ஜ் Dr. சந்திரசேகரன் I. C. S. என்பவர் குடும்ப சமேதராய் வந்திருந்தார். அவரது குமாரத்தி லலிதா தேவி B. A. அழகு, குணம், ஆஸ்தி முதலிய எந்த விதத்திலும் உனக்குத் தகுந்தவள் தான் என்று ஆலோசித்து நாளது 30-ந் தேதி இருவருக்கும் விவாகம் நடத்த தீர்மானித்திருக்கிறபடியால், உன் அபிப்பிராயத்தை வேண்டுகிறேன். நீ B. A. பாஸ் பண்ணின பிறகு உன்னை இங்கிலாந்துக்கு ஐ. சி. எஸ். படிக்கக் கூட அனுப்பத் தயாராய் இருக்கிறார். ஆகையால் நீ இன்னும் 5 தினங்களில் இவ்விடம் வந்து எங்களெண்ணத்தைப் பூர்த்தி செய்வாயென நம்புகிறேன்.

இப்படிக்கு அன்புமிக்க தந்தை,

A. பாலகிருஷ்ண பிள்ளை.

படித்து முடிந்ததும் பெரு மூச்சு விட்டேன். கல்யாணமா? எனக்கா? பால்ய விவாஹம் கூடா தென்னும் கொள்கையுடைய என் தகப்பனார் 19 வயது சிறுவனாகிய எனக்கு இப்போது திருமணம் செய்யப் போவதாக எழுதி இருக்கிறாரே! தஞ்சைக்குப் போகுமுன்பு கூட எனக்கு இப்போதைக்குக் கல்யாணப் பேச்சுக் கிடையாது என்று சொல்லிப் போனாரே? என்னமோ நல்ல சான்ஸ் கிடைத்து விட்டாற் போலிருக்கு; பிளானை மாற்றி விட்டாரு." என்று நினைத்துக் கொண்டே எல்லையிலா ஆனந்தக் கடலில் மூழ்கினேன். வாலிபர்களுக்கு கல்யாணம் என்றால் கேட்க வேண்டுமா? அவ்வளவு தான். என்ன மணி; எங்கு உட்கார்ந்திருக்கிறேன் என்று கூட அறியாமல் பரவசனாயினேன். கண்ணை விழித்துக் கொண்டே பல கனவுகள் காண ஆரம்பித்தேன். லலிதாவின் உருவத்தை என் மனம் ஊகிக்க ஆரம்பித்தது. மாமனார் நமக்குக் கொடுக்கும் வரிசைச் சீர்களில் ஒரு ஆஸ்டின் கார் வாங்கிக் கொடுத்து விட்டாரானால் என் காதலியுடன் பார்க்குகளுக்குப் போய் வர சௌகரியமாயிருக்கும் என்றும், லலிதாவிடம் எங்ஙனம் நடந்து கொள்வதென்றும், அவளுக்கு எத்தனை கடையில் முதல் தரமான ரவை செட்டுகள் வாங்கிப் போடலாமென்றும், மாமன் மாமிகளிடத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்றும், அடுத்த வருஷம். பி. ஏ. பாஸ் பண்ணினவுடன் சீமைக்கு ஐ. சி. எஸ். படிக்கப் போனால் எங்கே தங்குவதென்றும் இன்னும் கணக்கற்ற பல விஷயங்களைப் பற்றியும் என் மனம் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தது. ஒவ்வொரு மணிக்கும் கடிகாரம் அடித்தது கூட என் காதில் விழவில்லை.

"அண்ணா! என்ன. மணி ரெண்டு அடிச்சூட்டுதே. இதுவரையிலே சாப்பிட வல்லையேன்னு இப்போ வந்தேன். என்னமோ ஆழ்ந்த யோசனையிலிருக்காப் போலிருக்கு" என்றாள் கமலா ரௌண்டு டேபிளை பிடித்தவண்ணம்.

திடீரென்று விழித்துக் கொண்டு "ஒன்றுமில்லை கமலா, எனக்குக் கலியாணம் நிச்சயமாகியிருக்கிறது. லலிதா என்ற ஒரு பெண்ணை நம்ப அப்பா நாளது 30-ந்தேதி எனக்கு கலியாணம் பண்ணி வைக்கப் போறாராம்." என்று சொல்லி ஜோராக கடிதத்தை நீட்டினேன்.

"என்ன ஆச்சரியம்? எதிர் பாராத கல்யாணம் இருக்கட்டும். எழுந்திருங்கள். சாப்பிட்டு விட்டு பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடு செய்யலாம்." என்று கூறி அழைத்தாள் கமலா.

பின்பு எழுந்து சென்று அவசர அவசரமாக போஜனம் முடித்து விட்டு மீண்டும் என் அறையை யடைந்தேன். லெட்டர் பேப்பரை எடுத்து வருமாறு எழுதி நானே என் கையால் தபாலில் சேர்த்தேன்.

திருச்சி.

15—1—36,

அன்பார்ந்த தந்தையவர்களுக்கு,

க்ஷேமம். தாங்கள் பார்த்து செய்து வைக்கும் காரியத்திற்கு நானென்ன

தடை சொல்லப் போகிறேன். தங்களுத் தாவுப்படி நாளது வெள்ளிக் கிழமை இரவு இண்டோ சிலோன் மெயிலில் ஆடையாபரணங்களுடன் வந்து, சேருகிறேன். எனது வணக்கமான நமஸ்காரத்தை அங்குள்ளவர்களுக்குத் தெரிவிக்கவும்.

இப்படிக்கு கௌரி முகுந்தன்

மாலைவேளையும் வந்தது. மனம் மட்டிலா மகிழ்ச்சியால் கூத்தாடிற்று. பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி கமலாவுக்கு கட்டளை இட்டேன். வெளியே புறப்பட யோசித்துக் கொண்டிருக்கும்போது நண்பன் ஜெயராமன் வந்தான். இருவரும் புறப்பட்டுச் சென்று தாயுமானவர் மலைமீதேதினோம். என் தந்தையாரிடமிருந்து வந்த கடிதத்தைப் பற்றி அவனிடம் கூறினேன். பின்பு, லலிதா நல்ல குணவதியாக நீண்ட நாள் என் மனைவியாக வாழவேண்டுமென்று, உச்சிப் பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்து வேண்டிக்கொண்டு வீடு திரும்பினோம். ஜயாராமன் காலையில் வருவதாகக் கூறிப் போய்விட்டான்.

இரவு முழுவதும் பலபல நூதனக் கனவுகள். அவற்றை விவரிக்க ஆரம்பித்தால் இந்த பத்திரிகை போதாது. இன்றிரவு ஊருக்குப் போகப் போகிறோமென்கிற குதூகலத்தால் விடியுமுன்னே எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு சிற்றுண்டி யருந்தி என் அறையை அடைந்தேன். மீண்டும் ஆலோசனை, ஊருக்கு என்னென்ன பழங்கள் வாங்கிக்கொண்டு போவது என்று யோசித்துக்கொண்டிருக்கும்போது 'Mr. கௌரி! கதவைத் திறடா' என்ற சப்தம் காதில் விழுந்தது. உடனே கதவைத்திறந்து "ஹலோ! ஜயராம். ஏன் இவ்வளவு நேரம்" என்று கூறி பிரம்பு நாற்காலில் உட்காரவைத்தேன். ஜயராமன் சடக்கென்று தன் கோட் பாக்கெட்டிலிருந்து ஒரு கவரை எடுத்து நீட்டினான். தந்தையிடமிருந்து வந்திருக்கவேண்டுமென்றெண்ணி ஆவலால் உந்தப்பட்டவனாய் உடைத்துப் படிக்க ஆரம்பித்தேன்.

தஞ்சை 14-1-36

அன்புமிக்க கௌரிக்கு ஆசீர்வாதம்.

உனக்கு இப்போது பரீக்ஷை முடிந்துவிடுமுறை என நினைக்கிறேன். அவ்விடம் நீ தனியே காலத்தை இன்பஹரமாகக் கழிக்க முடியாதாகையால் நீமட்டும் புறப்பட்டு இவ்விடம் வந்து சிலநாள் தங்கியிருந்து திரும்பிப் போகலாம். இஷ்டமிருந்தால் உடனே புறப்பட்டுவந்து சேரவும்.

இப்படிக்கு A பாலகிருஷ்ணப்பிள்ளை

ஆஹா! அப்போது நீங்க ளென் முகத்தைப் பார்த்திருந்தால் ஆச்சரியப்படுவீர்கள். கண்டெடுத்த புதையலை பறிகொடுத்தவன்போல் பாதவித்தேன். என்ன இது! நம் தந்தை எழுதிய கடிதமா இது? ஆமாம் சந்தேகமில்லை. அப்படி இருக்கவும் முன் கடிதத்திற்கும் இதற்கும் ஒரு சம்பந்தமுமில்லையே! என்ன மாயமாக இருக்கிறது! மந்திரமா! தந்திரமா! ஜாலமா! என்று என் மனதில் பல சந்தேகங்கள் கிளம்பின. பைத்தியம் பிடித்தவன்போல் ஒன்றும் தோன்றாது பீரோவிடம் ஓடி முதல்நாள் வந்த கடிதத்தை உற்று நோக்கினேன். ஆராய ஆரம்பித்தேன். அப்போது என்னைவிட சிறந்த துப்பறியும் நிபுணர் இவ்வுலகி லொருவருமில்லை என்பது என் எண்ணம். என் நிலைமையைப் பார்த்த ஜயராம், "என்னப்பா இது! மிளா மிளா விழிக்கிறாயே! என்ன சமாசாரம்?" என்று கூறிச் சிரித்தான். ஆனால் அவன் நகைத்த காரணம் அப்போது எனக்கு விளங்கவில்லை. உடனே "மிஸ்டர், இப்போது எனக்கு அவசியமான வேலை இருக்கிறது பேச நேரமில்லை. நாளைக்கு விவரமாகச் சொல்லுகிறேன் போய்வா. எக்ஸ்யூஸ் மி" என்று சாமர்த்தியமாய் சொல்லியனுப்பிவிட்டேன்.

உடனே கதவை தாழிட்டேன்; யோசனையிலாழ்ந்தேன். இவ்வுலகமே எனக்குப் பெருந் துக்கசாகரமாகத் தோன்றிற்று. முதல்நாள்வந்த கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்தேன். ஒருமணி நேரம்

சங்கடப்பட்டேன். முடிவில் சில சந்தேகங்கள் ஏற்பட்டன. நான்பெற்ற முதற் கடிதம் என் தந்தையின் எழுத்துப்போலில்லை என்றும், அவர் கடிதம் எழுதும் முறை இம்மாதிரி யல்லவென்றும் தோன்றியது. என்றாலும் சரியான முடிவுக்கு வர முடியவில்லை. பின்பு அந்த கவரை எடுத்து போஸ்ட் முத்திரையைக் கவனித்தேன் "அரியலூர். 9. A M." என்று கணிக்கப்பட்டது. முன்பு கொண்ட சந்தேகம் நிச்சயமாய் விட்டது. இது என் நண்பன் ஜயராமன் வேலையென அறிந்தேன். "ஆஹா! மோசம் போய் விட்டோமே. என் ஆத்ம நண்பனாகிய ஜயராமன் அரியலூரில் தன் தமக்கை வீட்டிற்குப் போனபோது இங்ஙனம் பொய்க்கடிதம் எழுதி என்னை தந்திரமாக ஏமாற்றி விட்டானே! வெளியில் சொன்னால் வெட்கக்கேடு. சொல்லாமலும் இருக்க முடியாது. இதென்ன பிராணசங்கடம்" என்று நினைந்து நினைந்து முகம் வெளுத்தேன். இங்ஙனம் வெட்கித் துக்கித்துக் கொண்டிருக்கும் நிலையில் கமலா வந்தாள். "என்ன! செந்தாமரை போல புன்முறுவல் கொண்டிருந்த உங்கள்முகம் வெளுத்து துக்ககரமாகக் காணப் படுகிறதே. உள்ளதை உள்ளவாறு ஒளிக்காது சொல்லுங்கள்." என்றாள் கமலா. என் ஆருயிர்ச் சகோதரிக்குக் கூறாமலிருக்க முடியுமா? எல்லாவற்றையும் விஸ்தாரமாகக் கூறினேன்.

மறுநாள் ஜயராமன் வந்தான். "என்னப்பா! மாப்பிளே! நேற்றிரவு தஞ்சாவூர் போவதாகச் சொன்னாயே. ஏன் போகவில்லை" எனக் கூறி கேலிசெய்து தன் சாமர்த்தியத்தை மெச்சிக்கொண்டான். என்றாலும் எனக்கு ஒரு சந்தோஷம். ஏனெனில் என் தந்தைக்கு எழுதிய கடிதத்தில் எனக்குக் கல்யாணம் என்ற வார்த்தையைக் காட்டாமலேயெழுதிவிட்டேன் பாருங்கள்! தப்பித்தேன் தந்தையிடமிருந்து. உடுக்கை இழந்தவன் கைபோல் எனக்கு உயிர்த் தோழனாக ஜயராமன் இருந்தானாகையால் அவனை ஒன்றும் செய்யாது விடுத்தேன். எனினும் நானும் கமலாவும் இம்மாதிரியே ஜெயராமனை ஏமாற்றத் தகுந்த சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

---


# ஆக்ட் புத்தகங்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| இந்தியன் பினல் | ரூ. | அ. | பரம்பரை கிராமஉத்தி | ரூ. | அ. | | ரூ. | அ. |
| கோட் சட்டம் | 3 | 0 | யோகஸ்தர்கள் சட்டம் | 1 | 0 | ஸ்டாம்பு ஆக்ட் | 0 | 12 |
| கிரிமினல் லா | 3 | 0 | இன்கம் டாக்ஸ் சட்டம் | 1 | 0 | ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் | 0 | 10 |
| சிவில் லா | 3 | 0 | லோகல்போர்ட் ஆக்ட் | 2 | 0 | டிரான்ஷிகன் சட்டம் | 0 | 12 |
| விவகார சிந்தாமணி | 2 | 8 | பஞ்சாயத்துச் சட்டம் | 1 | 4 | கால நிர்ணயச் சட்டம் | 0 | 8 |
| பெரிய ஹிந்து லா | 2 | 0 | இந்துதேச சாட்சி ஆக்ட் | 1 | 0 | நில ஆக்கிரமிப்பு என்கு | | |
| முகம்மதியன் லா | 2 | 0 | தேவஸ்தான சட்டம் | 1 | 0 | ரோச்மென்ட் சட்டம் | 0 | 4 |
| கிராம முன்சீப் சட்டம் | 1 | 8 | எஸ்டேட் லாண்டு ஆக்ட் | 1 | 4 | கிராமச் சுகாதாரம் | 0 | 2 |

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.